DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1424 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 21, 2023



# இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது என்கிறார் அருட்தந்தை மா.சக்திவேல்

இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது. எமக்கான சுயாட்சி இருக்க வேண்டும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்தியாவுக்கு சென்று வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில கட்சிகளும் சிவில் அமைப்புகளும் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கடிதம் எழுதி உள்ளதாக செய்திகள் வெளி வருகின்றன.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

# இலங்கைக்கான கனடா தூதரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கிறார் இனவாதி சரத் வீரசேகர

*— யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்*



இலங்கைக்கான கனடா தூதுர் எரிக் வால்ஸ் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். என்று இனவாத கருத்துக்களை தொடர்ச்சியாக கக்கிவரும் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இலங்கை நாடாளுமன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

வட மாகாணத்திற்கு இந்த வாரம் விஜயம் செய்த கனேடிய தூதர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலரை சந்தித்து சமகால அரசியல், சமூக செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

முன்னதாக அவர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞாம் சிறீதரனை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார். அதன் போது ஈழத்தமிழர்களின் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரன் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றியை சிறிதரன் சிவஞானம் தெரிவித்துக் கொண்டதாக தனது டிவிட்டர் பக்கத்தில் படங்களுடன் அவர் பதிவு ஒன்றை இட்டிருந்தார்.

(உள்ளே விபரமான செய்தி 23ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI



கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
ஐயப்பன் இந்து ஆலயம் திறந்தவெளி அரங்கில்
2023 AUG 5&6
KIDS RIDE
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
EVENT SPONSOR
JOYTHI
Blazing Minds
2023
POWERED BY
REALTOR
Ananth
THARMALINGAM
416.939.9525
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
$10,000 பெறுமதியான அதிஸ்டலாபப்பரிசுகள்
அனுமதி இலவசம்
FREE ADMISSION
Play back Singer Ananthu
Singer Rajaganapathy
Zee Tamil Title Winner Varsha
Play Back Singer Latha Krishna
Mega Tunes
Shangaar
SILVER SPONSORS
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
New Premium Stone Ltd
416.858.1290
K.Theepan
SPONSORS
SKYROUTE
TRAVEL SERVICES INC.
416-439-4000
SEYON TAX
SPS
RANGANAS
AUGUST 5th, 6th - ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8




யூலை 27 அன்று வாக்களியுங்கள்
VOTE JULY 27
Andrea Hazell, Scarborough-Guildwood பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு பாடுபடுவார்.
Liberal

உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் இனவாத பேய் வீரசேகர இருக்க வேண்டிய இடம் பாராளுமன்றம் அல்ல... பாழடைந்த வீடொன்றில் தான்!

இலங்கை அரசியல் தற்போது சிங்களம் என்ற மொழியையும் பௌத்தம் என்ற மார்க்கத்தையும் இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டு அற்றை இரண்டு வாள்கள் போன்று பாவனை செய்த வண்ணம் அரசியல் செய்யும் ஒருவரைப் பற்றியதே இவ்வாரக் கதிரோட்டம்.

அந்த மாங்கனித் தீவில் பல பகுதிகளிலும் அறிவுள்ள ஒரு சமூகமாக வாழ்ந்தாலும் சிறுமையின மக்களாக பெரும்பான்மையின அரசியல்வாதிகளால் கொரூரக் கண்களால் பார்க்கப்படும் தமிழர்களுக்கு எதிராக துவேசம் என்னும் துர்க்கக் கவசத்தை தாங்கியுள்ள சரத் வீரசேகர என்னும் அரச சார்பு பாராளுமன்ற உறுப்பினரின் அண்மைக்கால அடவாடித்தனங்கள் உச்சத்திற்கு சென்றுள்ள நிலையில் அவருக்கு எதிராக அவரது கட்சியின் தலைவர்களோ அல்லது ஜனாதிபதியோ கண்டனம் எதுவும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்து அந்த துவேசிக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் தன்மையை நாம் ஜனநாயகம் என்று அடக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் போலும்.

நாட்டில் மிகவும் மோசமான இனவாத கருத்துக்களை அதிகம் பரப்பிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அவப்பெயருக்கு அவர் ஆளாகி வந்தாலும் அவருக்கு உற்சாகத்தை அளிக்கும் வகையில் பௌத்த குருமாரின் பல பிரிவுகள் இயங்கிவருவதால் அரசாங்கமோ அன்றி ஜனாதிபதியோ அவர்களை கண்டிக்கவோ அன்றி தண்டிக்கவோ முன்வராமல் இருக்கின்றார்கள் என்பது வெளிச்சமாகத் தெரிகின்ற நிலை தான் அங்கு காணப்படுகின்றது.

அண்மையில் தமிழ் நீதிபதி அவர்கள் தொடர்பில் மிகவும் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை அவர் வெளியிட்டிருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி சட்டவிரோதமாக குருந்தூர் மலையில் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரை தொடர்பிலான விசாரணை ஒன்றை நீதவான் முன்னெடுத்துக்கொண்டிருந்த வேளையில் தானும் அந்த விடயத்தில் கருத்து கூற வேண்டும் என்று வக்கிரமான நோக்கோடு அழைக்கப்படாத ஒரு விருந்தாளி போன்று அங்கு சென்ற சரத் வீரகேசரா நீதிபதி அவர்களிடம் கோரியதை ஏற்காமல். நீதீபதி மறுத்துவிட்டார். நீதிபதி அவர்கள் அவரைப் பார்த்து ' நீதிமன்ற விசாரணையில் அரசியல்வாதிகளின் கருத்துக்களிற்கு இடமில்லை, அதற்கு இடமளிக்க முடியாது என்று மறுத்துள்ளார். இந்த நிலையில் மேற்படி நீதிபதி பற்றிய முரணான கருத்துக்களை நாடாளுமன்றத்தில் அடுத்த நாள் பயன்படுத்தி தனது உரை நேரத்தில் தெரிவித்திருந்தார்.

ஜனநாயகத்தை மதிக்கும் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துக்களை பாராளுமன்றத்திலும் பொது வெளியிலும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கண்டிக்க சபாநாயகரோ அன்றி ஜனாதிபதியோ அல்லது நாட்டின் பிரதமரோ முன்வரவில்லை. மாறாக மௌனமாக இருந்து அந்த 'துவேச' எண்ணம் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கண்டிக்கக் கூட விரும்பாத இனவிரோதிகள் நிறைந்த அந்த பாராளுமன்றம் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றது.

இவ்வாறான நிலையில் இந்த வாரத்தில் சில நாட்கள் வடக்கில் பணித்து மக்களின் துயரங்களையும் அதிகாரிகளின் மன எண்ணங்களையும் அறிந்து கொள்ள தனது நேரத்தைச் செலவு செய்த இலங்கைக்கான கனடிய தூதுவர் எரிக் வொல்ஸ் அவர்களின் நிகழ்ச்சி நிரல் அங்கு துயரத்தின் மத்தியில் வலிகளோடு வாழும் மக்களுக்கு மருந்தைப் போன்று இருந்திருக்க வேண்டும்.

அத்துடன் வடக்கில் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களையும் இலங்கைக்கான கனடியத் தூதுவர் பார்வையிட்டும் அவற்றை ஆரம்பித்தும் தமிழர்கள் நலனில் தனக்குள்ள அக்கறை மற்றும் விருப்பம் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்தார்

இதை செய்திகள் வாயிலாக தெரிந்து கொண்ட துவேசி சரத் வீரசேகர. இலங்கைக்கான கனடா தூதுர் எரிக் வால்ஸ் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் . என்று பாராளுமன்றத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் எச்சரித்தும் உள்ளார்.

கனடியத் தூதுவரின் உறுதியான கடமை உணர்வு காரணமாக சரத் வீரசேகரவின் இனவாத கருத்துக்கள் வெளியாகியுள்ளன. தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள், அபிலாசைகள் ஆகியவை தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் கரிசனை செலுத்திவரும் வேளையில், இப்படியான இனவாதிகளின் கருத்துக்கள் மேற்குலக நாடுகள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை அதிருப்தியடைச் செய்துள்ளன. அத்துடன் இவை பெரும்பான்மை இன மக்களுக்கும் நன்மையைத் தராமல் இலங்கையைப் பற்றிய கணிப்பு படிப்படியாக குறைந்துதான் செல்லும் என்றே எதிர்பார்க்க வேண்டும்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

(முன் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது என்கிறார் அருட்தந்தை மா.சக்திவேல.

35 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தனித்துவம் கொண்ட தேசிய இனமாக தமது தேசத்தில் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கான போராட்டத்தினை சர்வதேசமும் வியக்கும் அளவில் முன்னெடுக்கப்பட்டது. ஒற்றை ஆட்சியின் கீழ் சுதந்திரமாக வாழ முடியாது.

எமக்கான சுயாட்சி இருக்க வேண்டும் எனும் திடமான அரசியல் சிந்தனையோடு கட்டமைக்கப்பட்ட வடிவிலே போரியல் ஒழுக்கத்துடன் விடுதலை செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் யுத்த குற்றங்களுக்கு எதிராகவும், உறவுகள் காணாமலாக்கப்பட்டமை, காணிகள் அபகரிக்கப்பட்டமை, அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருக்கின்றமை என்பவற்றிற்கு நியாயமான நீதியினை பெற்றுத் தருமாறு வடக்கு கிழக்கு மக்கள் இன்றும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**கொழும்பில் வீடு விற்பனைக்கு**

கொழும்பு-13 கொட்டாஞ்சேனையில் புளூமெண்டால் வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியில் 2ம் மாடியில் அமைந்துள்ள. ஒரு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.
தொடர்புகளுக்கு 647 779 1712 என்னும் கனடா இலக்கத்தை அழைக்கவும்

**மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

**தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன. ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி. மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி. பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது. இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன. மின்னினைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி - கனடா- 905 554 3435

**வீடு விற்பனைக்கு**





யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியில் 4 பரப்பு காணி 7 படுக்கை அறைகளுக்கு 5 குளியலறைகளை கொண்ட அடுக்கு மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு பெறுமதி பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு :- 416-454-8936

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மதுபோதையில் அட்டகாசம் புரிந்த வட மாகாண வலயக் கல்வி பணிப்பாளர்கள் தொடர்பான விசாரணையை மூடி மறைக்கும் நளாயினி இன்பராஜ்?



இரத்மலானை அரச தங்குமிட விடுதியில் மதுபோதையில் கடந்த தைமாதம் அட்டகாசம் புரிந்த வடக்கு மாகாணத்தை சேர்ந்த இரு வலயக் கல்வி பணிப்பாளர்கள் தொடர்பான விசாரணையை மூடி மறைக்கும் செயற்பாட்டில் வடமாகண கல்வி அமைச்சின் சிரேட்ட உதவி செயலாளர் செயற்பாட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, இவ்வருட தொடக்கத்தில் வட மாகாணத்தைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கொழும்பில் கலந்துரையாடல் ஒன்றிற்காக சென்றிருந்தனர்.

அவர்கள் இரத்மலானையில் உள்ள அரசை விடுதியில் தங்கிய நிலையில் அன்று இரவு போதை தலைக்கேறி அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன் அயல் அறையில் இருந்த பிற மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகள் இவர்களில் செயற்பாட்டால் அசௌகரியத்துக்குள்ளாகியிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் அங்கு தங்கியிருந்த பிற மாகாணங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் வடமாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பினர்.

குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் தகவல் அறியும் சட்டம் மூலம் வினாவப்பட்டது.

இதன் போது பதில் அளித்த பொதுச் சேவை ஆணைக்குழு, குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவரிடம் விடயங்களை கேட்டு அறியுமாறு பதில் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வடமாகாண பிரதி பிரதம செயலாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்திற்கு குறித்த விடயம் இடம் பெற்றமையை உறுதிப்படுத்தியதுடன் விசாரணை முடியும் வரை குறித்த அதிகாரிகளை இரத்மலானை அரச தங்குமிட விடுதியில் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டாம் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரை அறிவுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சுக்கு குறித்த நபர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என தகவல் அறியும் சட்டமூலத்தில் வினவப்பட்டது.

பதில் வழங்கிய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் நளாயினி இன்பராஜ், பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களால் குறித்தபடி அந்த தொடர்பில் ஆராயுமாறு தமக்கு கடிதம் அனுப்பப்பட்டதாக முறைப்பாட்டாளருக்கு பதில் வழங்கியுள்ளார்.

பிரதி பிரதம செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதம் இரு மாதங்களைக் கடந்தும் சிரேஷ்ட உதவி செயலாளர் நளாயினி இன்பராஜ் விசாரணைகள் மேற்கொள்ளாமல் இருட்டடிப்பு செய்து வருகிறார்.

வட மாகாண கல்வி அமைச்சில் 15 வருடங்களைக் கடந்தும் ஒரே இடத்தில் கடமையாற்றி வரும் சிரேஷ்ட உதவி செயலாளரான நளாயினி இன்பராஜ் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற பல முறை கேட்டு விசாரணைகளை உரிய முறையில் நடாத்த விடாமல் பல ஊழல்வாதிகளை காப்பாற்றியுள்ளாரா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

வடக்கு கல்வி அமைச்சில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஊழல் மோசடிகள், நிர்வாக முறைகேடுகளுக்கு இவர்களைப் போன்ற அதிகாரிகள் இருக்கும் வரை தீர்வு கிடைக்கப் போவதில்லை என மக்கள் முணுமுணுக்கின்றனர்.

ஆகவே இரத்மலானை அரச தங்குமிட விடுதியில் மதுபோதையில் அட்டகாசம் புரிந்த வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர்கள் இருவர் மீது உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் விட்டால் அவர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

# 13ஆவது திருத்தமானது நிர்ப்பந்தத்தினாலேயே அரச தலைவர்களால் கொண்டுவரப்பட்டது – கஜதீபன் தெரிவிப்பு



இலங்கை தனக்கென அரசியலமைப்பை கொண்டிருக்கும் நிலையில் அதன் கீழ் தமிழர்கள் ஒரு தேசிய இனமாகக் காணப்படுகின்றனர் என முன்னாள் வடமாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

13 வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வின் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், எமக்கென அரசியலமைப்பில் ஒதுக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றுமாறு இன்னொரு நாட்டு பிரதமருக்கு கடிதம் எழுதவும் இன்னொரு நாட்டு அரச தலைவரைக் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையுள்ளதாக அண்மையில் கனடா தூதுக் குழுவைச் சந்தித்த போது எடுத்துக் கூறியிருந்தேன்.

குறித்த 13 ம் திருத்தச்சட்டத்தைக் கொண்டுவர இலங்கையின் அரச தலைவர்களுக்கு விருப்பமின்றிய நிலை காணப்பட்டாலும் அன்றைய காலத்தில் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது இதைவிட எமது மூத்த தலைவர்களின் அழுத்தமும் காரணமாக அமைந்தது.

1986ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் பெருமளவானோர் சமஷ்டிக்கே ஆதரவளித்து வருகின்றனர்.

மாகாண சபை ஆட்சிக்காலம் இருந்த 5 வருடங்களில் எந்தவொரு அரச காணியும் இராணுவத்திற்கு வழங்கியது கிடையாது.

இதேவேளை பல பாடசாலைகளை தேசிய பாடசாலையாக்குவதற்கான முன்மொழிவுகள் வந்த போதும் மாகாணத்தில் சிறந்த பாடசாலைகளை உருவாக்குவதன் நோக்கிலேயே மாகாண சபையை அமைத்தோம் என்பதால் அவற்றை நிராகரித்தோம் மறுத்ததோடு நின்றுவிடாத தேசியப் பாடசாலைக்கு நிகராக மாகாண பாடசாலைகளை உருவாக்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டோம்.

நாம் மாகாணசபை ஆட்சியில் தவறிழைத்து விட்டோம் என்பதற்காக தேர்தலை நடாத்த மாட்டோம் என மத்திய அரசு கூற முடியாது.

குருந்தூர் மலையில் பொங்கலிட்டு வழிபட நீதிமன்றம் அனுமதியளித்திருந்த போதும் நேற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டிய காவற்துறை நடைமுறைப்படுத்த மறுக்கும் நிலை காணப்படுகின்றது.

மத ரீதியான மிக மோசமான கலவரத்தை ஏற்படுத்த காவற்துறையே முயற்சிக்கின்றது.

இவ்வாறான நிலைமைகள் தான் இன்று காணப்படுகின்றது. பண்டாரநாயக்காவும் தந்தை செல்வாவும் ஒப்பந்தம் செய்யும் போது சிங்கள தேசத்திலுள்ள எதிர்க்கட்சிகள் மட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை மாறாக இங்கு தமிழ்க் காங்கிரஸிம் அதற்கு எதிராக வேலை செய்தது.

டட்லி சேனநாயக்கா - தந்தை செல்வா ஒப்பந்தத்தின் போதும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் பண்டாரநாயக்காவுடன் இங்குள்ளவர்களும் குழப்பமடைந்தனர்.

13ம் திருத்தம் மட்டுமல்ல தமிழ்மக்களுக்குத் தீர்வாக எது வரினும் அதை எதிர்க்கும் மன நிலையில் உள்ளனர். எனவே இவ் வரலாற்றைத் தெரிந்து அதனூடாகப் பயணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சமஷ்டித் தீர்வுக்காக மக்கள் வாக்களிக்கும் நிலையில் அதற்காக நாம் களத்திலே வேலை செய்கின்றோம்.

தற்போது இராணுவம் மற்றும் அரச தரப்பால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு பாடசாலைகள் அபகரிப்பு, வைத்தியசாலைகளை தமது கட்டுப்பாட்டுக்குட்படுத்தல் போன்றவற்றை தற்காலிகமாக நிறுத்துவதற்கு இந்த தீர்வு நடைமுறையைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

அரச தலைவர்கள் இருக்கும் அனைத்து அதிகாரங்களையும் பிடுங்கிவிடவேண்டும் என்ற சிந்தனையோடு தான் வேலை செய்வார்கள்.

அரச தலைவரின் நேரடிப் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநர் அனைத்ததையும் எதிர்ப்பார்த்த நிலையில் எமது பயணத்தின் இறுதிஇல்கை அடையும் வரை தற்காலிகமாக இவ் முடிவுகளை எடுத்து முன்னேறிச் செல்ல வேண்டும்.

இரு அரசும் செய்துகொண்ட பன்நாட்டு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா அரசிற்கு தார்மீகக் கடப்பாடு காணப்படுகின்றது என தெரிவித்தார்.

# கிளிநொச்சி இளைஞர்களின் முன்மாதிரியான வீதி சீரமைக்கப்பட்ட செயற்பாடு – அனைவரும் பாராட்டு

பொதுமக்களால் சீரமைக்கப்பட்ட வீதி



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பரந்தன் முல்லை வீதியில் அமைந்துள்ள பாலமானது சில வருடகாலமாக புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

இதனால் மக்கள் தற்காலிக பாதையினை பயன்படுத்தி வந்தனர். குறித்த தற்காலிக பாதையும் மக்கள் பயணிக்கமுடியாத நிலையில் சேதம் அடைந்துள்ளது.



குறித்த பாலத்தின் அபிவிருத்தி பணிகளை நிறைவு செய்து தருமாறு பல தடவைகள் முறையிட்டபோதும் திருத்தப்படவில்லை.

இந்த நிலையில் தருமபுரம் பகுதி இளைஞர்கள் ஒன்றுதிரண்டு கிரவல் மூலம் தமது சொந்த நிதியினையும், நேரத்தினையும், ஆளணியையும் பயன்படுத்தி சேதமடைந்த பகுதிகளை புனரமைப்பு செய்துள்ளனர்.

இந்த இளைஞர்களின் செயற்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண நகரத்தில் டிதங்கத் தாத்தாவின் சிலையருகே ஆடிப்பிறப்பு விழா



யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள, தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலையருகே ஆடிப்பிறப்பு தின விழா இன்று காலை நடைபெற்றது.

தங்கத் தாத்தா பேரவையின் ஏற்பாட்டில், ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.எஸ். சிவஞானராஜா அவர்களது தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தங்கத் தாத்தாவின் சிலைக்கு மலர் சாற்றி, தங்கத் தாத்தா இயற்றிய "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்ற பாடல் பாடி, சூடம் ஏற்றி ஆடிக்கூழ் பரிமாறி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் 15 ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களை இயற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வரலாற்றில் முதலாவது பணியை நிறைவு செய்துள்ளோம் – முன்னாள் முதல்வர் மணிவண்ணன் பெருமிதம்

மரபுரிமை சின்னங்களை பாதுகாக்கும் நோக்கில் வரலாற்றில் முதல் பணியாக சங்கிலியன் தோரண வாயிலை புனரமைத்துள்ளோம் என யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் யாழ். மரபுரிமை மைத்தின் உறுப்பினருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயிலை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திறந்து வைத்து தலைமை உரையை ஆற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் மரபுரிமை சின்னங்களை பாதுகாப்பதற்காக மரபுரிமைகளை பாதுகாக்கும் மையத்தை இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிறுவியிருந்தோம்.

எமது அமைப்பினை நிறுவும்போது பலர் யோசித்தார்கள் இந்த அமைப்பு நிறுவியதுடன் அதன் செயற்பாடுகளும் முடிந்து விடும் என நினைத்தவர்களுக்கு எமது வரலாற்றின் முதல் பணியை செய்து முடித்துக் காட்டியுள்ளோம்.

சங்கிலியன் தோரணை வாயிலை யாழ். மரபுரிமை மையம் புனரமைக்க வேண்டும் என யோசித்தபோது யாரிடம் மிதி கேட்பது எம்மை நம்பி நிதி தருவார்களா என்ற சந்தேகங்கள் இருந்தது.

வைத்திய கலாநிதி ரவிராஜ் மரபுரிமை பாதுகாப்பு அமைப்பின் உப தலைவராக இருக்கின்ற நிலையில் நாங்களே முன் உதாரணமாக சங்கிலியன் தோரணை வாயிலை புனரமைப்போம் அதற்கு நான் நிதி தருகிறேன் என்றார்.

அவரின் பெருந்தன்மையும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியுடன் தமிழர் வரலாற்றின் எச்சமான சங்கிலியன் தோரண வாயிலை புனரமைக்க முடிந்தது.

வைத்திய கலாநிதி ரவிராஜ் உள்நாட்டுப் போர் உக்கிரமடைந்த காலப்பகுதியில் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லாமல் எமது மண்ணிலே நின்று மக்களுக்கு சேவையை வழங்கிய ஒருவர்.

எமது மண்மீதும் எமது வரலாறுகள் மீதும் ஆழ்ந்த சிந்தனை உள்ள ஒருவர் என்ற நீதியில் அவரின் விடாத முயற்சியும் அர்ப்பணிப்பும் சங்கிலியன் தோரண வாயிலை பொதுமக்கள் பார்வையிடக் கூடிய வகையில் திறந்து வைப்பதற்கு உதவியாக இருந்தது.

அதேபோன்று மாந்திரிமனை யமுனா ஏரி ஆகியவற்றையும் புனரமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது மரபுரிமை மையம் திட்டங்களை வகுத்துள்ள நிலையில் அதற்கு பாரிய நிதி பங்களிப்புத் தேவை.

மந்திரி மனையைப் புனரமைக்க வேண்டுமானால் சுமார் ஆறு தொடக்கம் எட்டு கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் குறித்த நிதியினை பெறுவதற்கு புலம்பெயர் உறவுகள் முன் வர வேண்டும்.

அவே அரசாங்கம் செலவழிப்பதற்கு நிதி பற்றாக்குறை என்கிற நிலையில் எமது மரபுரிமைகளை நாமே பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் எமது வரலாறுகளை அடுத்த சந்ததிகளுக்கு எடுத்த செல்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெபாஸ்கரன் , இந்தியத் துணைத்தூதரக அதிகாரி பிரவின் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுரன சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு திருமுருகன், தொல்பொருட் திணைக்களத்தின் யாழ்ப்பாணத்துக்கான உதவிப் பணிப்பாளர் பந்துலஜீவ யாழ். மாநகரசபை ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் நல்லூர் பிரதேச செயளாளர் எழிலரசி உற்பட அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் திருமணமாகி நான்கு மாதங்களேயான இளம் குடும்பப் பெண் மரணம்!

திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் உடல் சுகயீனம் ஏற்பட்டு இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், தெல்லிப்பழை - மாவை கலட்டி, கொல்லங்கலட்டி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில், அவருக்கு நேற்றையதினம் வலிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் நேற்றையதினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதன்பின்னர் அவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சுகிர்தராசா நிதர்சினி (வயது 27) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது மரணம் அப்பகுதியையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# வடக்கு மாகாண கல்வி அமைச்சில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்ட ஆடிப்பிறப்பு விழா!



வடக்கு மாகாண கல்வி அமைச்சில் ஆடிப்பிறப்பு விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சனின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆடிப்பிறப்பு விழா சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி வீதியில் உள்ள கல்வி அமைச்சில் இடம்பெற்ற ஆடிப்பிறப்பு நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன கலந்து கொண்டதோடு, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு திருமுருகன் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு ஆடிக் கூழ் மற்றும் கொழுக்கட்டை என்பன வழங்கி வைக்கப்பட்டன.





# யுத்த காலப்பகுதியில் கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு மாணவர்கள் செய்த சிறப்பான செயல்



"வாழும் போதே வாழ்த்துவோம் " என்ற தொனிப்பொருளில்

2009 காலப்பகுதிக்கு முற்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சி வேரவில் இந்து மஹா வித்தியாலயத்தில் கற்பித்த அதிபர் ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டும், கௌரவிப்பும், ஒன்று கூடலும் அப்பாடசாலையில் கல்வி கற்ற 2006 க.பொ.த சாதாரண தர மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வெகு விமரிசையாக அண்மையில் கொண்டாடப்பட்டது.

"வாழும் போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர். சிவகொழுந்து ஸ்ரீசற்குணராஜா அவர்கள் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியற்கல்லாரி பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களும், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரும் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்களும், கௌரவ விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி திரு. நா. கணேஸ்வரநாதன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்பொழுது ஆசிரியர்கள் மாணவர்களால் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் மாணவர்களும் ஆசிரியர்களால் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.






# 13 தொடர்பில் அரசியல் வாதிகள் நடைமுறை சாத்தியமான எதையும் முன்னெடுக்கவில்லை என்கிறார் வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

36 வருடங்கள் இந்த அரசியல்வாதிகள் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குரிய நடைமுறை சாத்தியமான விடயங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை என வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு சிவில் அமைப்பினரின் 13 வது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த கோரிய இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தினை, யாழ். இந்திய துணைத் தூதரிடம் கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

36 வருடங்கள் இந்த அரசியல்வாதிகள் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குரிய நடைமுறை சாத்தியமான விடயங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக இணைந்த வடகிழக்கில் அமைந்த மாகாணசபையில் ஒன்றரை வருடங்கள் மாத்திரமே மக்கள் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

பிரிந்த வடக்கு மாகாணத்தில் ஐந்து வருடம் மாத்திரம் செயற்பாட்டில் இருந்தது அந்த காலத்திலும் அது சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை அதிகாரங்களில் சில தடைகள் இருந்தாலும் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை என்ற கவலை நமக்குள்ளது என்றார்.



# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200வது ஆண்டினை முன்னிட்டு முத்திரை வெளியீடு!




வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டினை முன்னிட்டு விசேட தபால் முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு 17ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்பொழுது பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர்கள், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன் ஆகியோர் முத்திரை மற்றும் அஞ்சலுறையை பெற்றுகொண்டனர்.

இதன்பொழுது இலங்கை தபால்மா அதிபர் றுவான் சத்குமாரவினால் 200ஆவது ஆண்டினை முன்னிட்டு விசேடமாக வடிவமைக்கப்பட்ட முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியிட்டு வைக்கப்பட்டது. இதற்பொழுது.

இதன்பொழுது தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன் ,இலங்கை அஞ்சல்மா அதிபர் றுவான் சத்குமார, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், அஞ்சல்மா அதிபர் செயற்பாடுகள் ராஜித கே ரணசிசிங்க வடக்கு அஞ்சல் மா அதிபதி திருமதி. மதுமதி வசந்தகுமாரி, யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஏ.டி பெர்ணான்டோ, முத்திரை பணியக பணிப்பாளர் லங்காதி சில்வா, நுண்ணாய்வு பரிசோதகர் திரு. கே. செந்தில்குமார், கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கனடிய செய்திகள் Canadian News

## Minister Fraser Announces Appointment of Chair of Immigration and Refugee Board of Canada

# கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் தலைவர் நியமனத்தை குடிவரவு அமைச்சர் ஃப்ரேசர் அறிவித்தார்



Ottawa, July 14, 2023—The Honourable Sean Fraser, Minister of Immigration, Refugees and Citizenship, issued the following statement:

"I am very pleased to announce the appointment of Ms. Manon Brassard as Chair of the Immigration and Refugee Board of Canada (IRB) for a five-year term, effective July 23, 2023.

"Ms. Brassard began her public service career at the IRB in 1989, where she served in a number of roles, including senior legal adviser and director general of the Policy, Planning and Research Branch.

"Ms. Brassard went on to serve in executive roles in a number of public service organizations. In 2010, she was appointed assistant deputy minister (ADM) of Corporate Services at what was then Citizenship and Immigration Canada and, in 2013, she became ADM of Programs at Agriculture and Agri-Food Canada. In 2014, she moved to the Treasury Board of Canada Secretariat, where she served as ADM of the Compensation and Labour Relations sector.

"Ms. Brassard was appointed president of the Canada Economic Development Agency for Quebec Regions in 2016, a position she continues to hold today. She will remain in this role until she takes on her new position as Chair of the IRB.

"Ms. Brassard holds a Bachelor of Laws degree from the Université Laval and was called to the Barreau du Québec in 1984. She is also trained as a mediator and is a recipient of the Queen's Diamond Jubilee Medal in recognition of her contributions to Canada.

"I also wish to take this opportunity to thank outgoing Chair Richard Wex for his leadership of the IRB over the past five years.

"I look forward to working with the new chair in ensuring the continued integrity and efficiency of Canada's immigration and refugee determination systems."

---

ஒட்டாவா, ஜூலை 14, 2023 - கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் கௌரவ சீன் ஃப்ரேசர் அவர்கள் அவரது அமைச்சின் கீழ் வரும் குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் தலைவர் நியனத்தை அறிவிக்கும் பின்வரும் அறிக்கையை நேற்று வெளியிட்டார். தனது அறிக்கையில் அமைச்சர் அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் (IRB) தலைவராக திருமதி. மனோன் பிரசார்ட் அவர்களை ஐந்தாண்டு காலத்திற்கு ஜூலை 23, 2023 முதல் மேற்படி பதவிக்கு நியமித்ததை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

திருமதி. பிராசார்ட் 1989 ம் ஆண்டு கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபையில் இணைந்து தனது பொது சேவை வாழ்க்கையைத் தொடங்கினார், அங்கு அவர் மூத்த சட்ட ஆலோசகர் மற்றும் கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிக் கிளையின் இயக்குநர் நாயகம் உட்பட பல பதவிகளில் பணியாற்றினார்.

திருமதி. பிராசார்ட் பல பொது சேவை நிறுவனங்களில் நிர்வாகப் பதவிகளிலும் பணியாற்றினார். 2010 இல், அவர் அப்போதைய குடியுரிமை மற்றும் குடிவரவு கனடாவில் கார்ப்பரேட் சேவைகளின் உதவி துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார், மேலும் 2013 இல், அவர் விவசாயம் மற்றும் விவசாய உணவு கனடா திட்டங்களின் பிரதி அமைச்சரானார். 2014 இல், அவர் கனடா செயலகத்தின் கருவூல சபைக்குச் சென்றார், அங்கு அவர் இழப்பீடு மற்றும் தொழிலாளர் உறவுகள் துறையின் உதவி அமைச்சராக பணியாற்றினார்.

"அவர் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டில் கியூபெக் பிராந்தியங்களுக்கான கனடா பொருளாதார மேம்பாட்டு முகாமைத்துவ சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார், இந்த பதவியில் அவர் இன்றும் தொடர்கிறார். அவர் குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் தலைவராக தனது புதிய பதவியை ஏற்கும் வரை இந்தப் பொறுப்பில் இருப்பார்.

"மேலும், பிராஸார்ட் அ வர்கள் லாவல் பல்கலைக்கழகத்தில் இளங்கலை சட்டப் பட்டம் பெற்றவர் மற்றும் 1984 இல் Barreau du Québec க்கு அழைக்கப்பட்டார். அவர் ஒரு மத்தியஸ்தராகவும் பயிற்சி பெற்றவர் மேலும் கனடாவில் அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் ராணியின் வைர விழா பதக்கத்தைப் பெற்றவர்.

"கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் நிர்ணய அமைப்புகளின் தொடர்ச்சியான ஒருமைப்பாடு மற்றும் செயல்திறனை உறுதி செய்வதில் புதிய தலைவருடன் இணைந்து பணியாற்ற நான் தயாராகுகிறேன்."

---

For further information (media only), please contact:

Bahoz Dara Aziz<br>Press Secretary<br>Minister's Office<br>Immigration, Refugees and Citizenship Canada<br>Bahoz.DaraAziz@cic.gc.ca

Media Relations<br>Communications Branch<br>Immigration, Refugees and Citizenship Canada<br>(613) 952-1650<br>media@cic.gc.ca


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கல்விக்கு இடையூறு இல்லாமல் முன்மாதிரியான நிகழ்வு — தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முதல்வருக்கு பாராட்டு

கடந்த 24.06.2023 தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு வைபவத்தை பாடசாலை நேரத்தில் நடாத்தாமல் மாலை நேரம் பாடசாலைக் கல்விக்கு இடையூறு நடாத்திய பாடசாலை முதல்வருக்கு பழைய மாணவர்களாலும் பாடசாலை சமூகத்தினாலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இப்பாடசாலை நிர்வாகத்தினர் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எவ்வித இடையூறும் சனி மாலை, வேலைகளுக்கு சென்று வரும் பெற்றோர்கள் பழைய மாணவர்களும் நிகழ்வில் பங்கு பற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு 4 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை பரிசளிப்பு நிகழ்வினை நடத்தினர்.

இந்நிகழ்வினை நடாத்தி மாணவர்களுக்கு உரிய போக்குவரத்து ஒழுங்குகளுடன், தமது தனிப்பட்ட நேரத்தை அர்ப்பணிப்பு செய்து இந்நிகழ்வை நடாத்தி இருப்பதனை பழைய மாணவர்களும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் பாராட்டி கல்லூரி முதல்வருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அக்கடிதத்தில் “மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நீண்ட காலத்தின் பின்னர் மாலை தொடக்கம் இரவு வரை சிறப்பாக நடைபெற்றது.

தனக்கென நீண்ட பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் கொண்ட மகாஜனக் கல்லூரியின் ஆரம்ப காலம் தொடக்கம் இரவு வேளையில் மிக முக்கிய அரசு தலைவர்களை பிரதம விருந்தினர்களாக அழைத்து இந்நிகழ்வானது சிறப்பாக நடைபெற்று வருகின்றமை மரபாக இருந்தது.

இடையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகவும் இடப்பெயர்வுகள் காரணமாகவும் பகல் வேளையில் நடைபெற்றது.

இவ்வருடம் கல்லூரி நிறுவுனர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின்




பிறந்த நூற்றியம்பதாவது நிறைவை முன்னிட்டும் கல்லூரியின் பாரம்பரியம், மரபுகளை நிலை நிறுத்தும் பொருட்டும் அனைத்து மாணவர்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் கலந்து கொள்ளும் வகையிலும் மைதானத்தில் அமைந்தது.

நன்கு திட்டமிடப்பட்ட ஒழுங்குபடுத்தலில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. மாணவர்களின் பாதுகாப்பு, ஒழுக்கம், போக்குவரத்து என்பன தொடர்பாக ஆசிரியர்களின் பார்வையில் மாணவத் தலைவர்கள், சாரணர்கள், மாணவப் படையணிகள், மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மிகவும் சிறப்பான கட்டுப்பாடுகளுடன் வெகு சிறப்பாக பரிசளிப்பு விழா நடைபெற்றது.

தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை 2400ற்கும் மேற்பட்ட மாணவர்களையும் 100ற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும், கிட்டத்தட்ட 1000 பெற்றோர்களையும் பல நூற்றுக்கணக்கான பழைய மாணவர்களையும் ஒரே தரத்தில் உள்ளடக்கி சிறப்பான முறையில் மைதானத் திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது.

“மீண்டும் தொடங்கும் மிடுக்கு” என்ற மகாஜன கவிஞர் மஹாகவி யின் வரிக்கு புத்துயிர் கொடுக்கும் வகையில் மிகச் சிறப்பாக பரிசளிப்பு விழா நடைபெற்றமைக்கு ஒத்துழைத்த பாடசாலை முதல்வருக்கும் பாடசாலை நிர்வாகத்திற்கும் எமது பாராட்டுக்கள் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய இழுவை மடி தொழிலாளர்கள் எங்களுக்கு செய்கின்ற அடாவடித்தனங்களை கண்டித்து போராட்டம் நடத்தினால் அமைச்சர் டக்ளஸ் நேரடியாக வந்து அந்தப் போராட்டத்தை நிறுத்துகின்றார்

## அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம்.வி.சுப்பிரமணியம்



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்தியாவில் இருந்து வருகின்ற இழுவை மடி தொழிலாளர்கள் எங்களுக்கு செய்கின்ற அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் என்பவற்றை கண்டித்துபோராட்டம்நடத்தினால் அவர் நேரடியாக வந்து அந்தப் போராட்டத்தை நிறுத்தி அதனை முறியடிக்கின்றார். அத்துடன். உள்ளூர் இழுவை மடி தொழிலாளர்களிடம் சலுகையைப் பெற்றும், பினாமிகளை வைத்து அட்டை பண்ணைகளை அமைத்தும் வருவதாகவும் அறிகின்றோம் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

13ம் திகதி வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய நாட்டிலே மீனவர்கள் பல கோணங்களிலும் பல இன்னல்கள் சந்தித்து கொண்டு வருகின்ற இந்த நேரத்திலே, மீண்டும் மீண்டும் அவர்களுக்கு செயற்கையான துன்பங்களையும் துயரங்களையும் கொடுத்துக் கொண்டுவரும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது.

நாம் எமது கடற்தொழில் சம்பந்தமான விடயங்களையும் அதன் அபிவிருத்தி தொடர்பான விடயங்களையும் அரசிடம் இருந்து கேட்டுப் பெறுவதுமே வழக்கம். அந்த வகையிலே இதற்கென நியமிக்கப்பட்டுள்ள கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் சில விடயங்களை முன்வைத்த போதும் எந்தப் பலனும் கிட்டவில்லை.

இந்தியாவில் இருந்து வருகின்ற இழுவை மடி தொழிலாளர்கள் எங்களுக்கு செய்கின்ற அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் என்பவற்றை கண்டித்து போராட்டம் நடத்தினால் அங்கே கடத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்து அந்தப் போராட்டத்தை நிறுத்தி அதனை முறியடிக்கின்றார்.

உள்ளூர் இழுவை மாடி தொழில் செய்யக்கூடாது என்ற சட்டம் அரச வர்த்தமானி அறிவித்தலில் இருந்த போதும் கூட, உள்ளூர் இழுவை மடித்தொழிலைச் செய்து நமது எஞ்சிய வளங்களையும், வாழ்வாதாரத்தையும் உள்ளூர் இழுவைமடி தொழிலாளர்கள் சீரழித்து வருகின்றார்கள். இதற்கு எதிராக போராட்டம் நடத்தினால் அங்கேயும் வந்து குறுக்கே விழுந்து அந்தப் போராட்டத்தை தடுப்பதும் இல்லாமல் அந்த இழுவை மடி தொழிலாளர்களுக்கு தானும் ஊக்கம் கொடுத்து ஏதோ சலுகையைப் பெற்று, அந்தத் தொழிலை மீண்டும் மீண்டும் சட்டத்திற்கு முரணாக செய்வித்துக் கொண்டு வருகின்றார் கடற்தொழில் அமைச்சர்.



அட்டைப் பண்ணைகளால் தமக்கு ஏற்படுகின்ற இடையூறுகளை நாங்கள் தெளிவுபடுத்தி பல முறைப்பாடுகளை செய்தாலும் அதனை முறியடித்து அட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி கொடுப்பது மட்டுமில்லாமல் அதில் தானும் பினாமிகளை வைத்து, தனக்கு சொந்தமான அட்டைப் பண்ணைகளையும் போட்டு அங்கே மீனவர்களுடைய வாழ்வாதாரத்தையும் சுரண்டிக் கொண்டு வருகின்றார்.

எங்களுடைய பிரச்சனைகளை சொல்லக் கூடிய ஒருவராக மீன்பிடி அமைச்சர் இருக்க வேண்டிய நிலையில், நாங்கள் எடுக்கின்ற முயற்சிகள் அனைத்திற்கும் முட்டுக்கட்டையாக, எங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் குழி தோண்டி புதைக்கின்ற, எங்களை அழிவு பாதையில் இட்டுச் செல்கின்ற ஒரு வழியை வகுக்கின்ற இக்கட்டானவராகவே எமது மீன்பிடி அமைச்சர் காணப்படுகின்றார்.

என்று டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீன்பிடி அமைச்சராக பதவியேற்றதிலிருந்து வடபகுதியிலே என்னென்ன அபிவிருத்தியை செய்திருக்கின்றார் என நாங்கள் கோடிட்டு பார்க்க வேண்டும். வடபுலத்தில் எங்கேயாவது ஒரு மீன்பிடித் துறைமுகம் வந்திருக்கின்றதா?, அல்லது நங்கூரம் இடும் மையம் வந்திருக்கின்றதா?, அல்லது மீனவர்களுக்கு வசதியாக எரிபொருள் நிலையங்களை ஏற்பாடு செய்து கொடுக்கின்றாரா?, அல்லது அவர்களுக்கு குளிரூட்டி பெட்டிகள் ஏதாவது ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றாரா?, இது தவிர போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பல்லாயிரம் பேருள்ள நிலையில் இன்று வரை அவர்களுக்கான வாழ்வாதாரமாக ஏதாவது அரசிடமிருந்து தொழில் உபகரணங்களை பெற்றுக் கொடுத்திருக்கின்றாரா? எதுவுமேயில்லை.

இப்படியாக எங்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாக எங்கள் அபிவிருத்தியை வளர விடாமல் தடுக்கின்ற ஒருவராக தங்களது மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவாவனந்தா செயற்பட்டு கொண்டு வருகின்றார். அந்த வகையிலே அவரிடம் முறைப்பாடு செய்து எந்தவொரு செயல்பாடுகளையும் செய்ய முடியாது. ஆகையால் ஜனாதிபதியை சந்தித்து அவரிடம் சில முறைப்பாடுகளை செய்யலாம் என நினைத்திருக்கின்றோம் - என்றார்.

# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 34 வது வீரமக்கள் தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) 34 ஆவது வீரமக்கள் தினம் வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவாலயத்தில் இடம்பெற்றது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில், கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ஆர். இராகவன் ஈகைச்சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கட்சி தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய த. சித்தார்த்தன் உமாமகேஸ்வரன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினார். சம நேரத்தில் உயிரிழந்த தோழர்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி பிரமுகர்கள், ஆதரவாளர்கள், தோழர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.





## Rajeef Koneswaran, a well-established realtor and Broker/Owner of RE/MAX Community Inc in Canada, has launched RE/MAX in Sri Lanka

# RE/MAX Sri Lanka என்னும் வீடு விற்பனைத்துறை நிறுவனத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையில் RE/MAX பிராந்திய உரிமையின் பெருமைக்குரியவராக விளங்கும் ரஜீவ்

கனடாவில் ரஜீவ் கோணேஸ்வரன் என்னும் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவன முதல்வர் 22 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் சிறப்பாக இயங்கிவரும் **RE/MAX Community Inc** நிறுவனத்தின் தலைவராகவும் , 10 ஆண்டுகளுக்கும் மேலாக **RE/MAX Community Inc** தரகர் மற்றும் உரிமையாளராகவும் உள்ளார். அவர் வீடு விற்பனைத் துறை மீது கொண்ட உள்ளார்ந்த பேரார்வம் மற்றும் மற்றவர்கள் தங்கள் கனவுகளை அடைய உதவுவதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு கொண்டவர், இதன் மூலம் ராஜீவ் கோணேஸ்வரன் அவர்கள் வீடு விற்பனைத் தொழில்துறையில் நம்பிக்கை நிறைந்த ஒரு வெற்றியாளராக திகழ்கின்றார்.

**RE/MAX Hall of Fame** என்னும் வகைக்குள் நுழைந்த முதல் இலங்கை ரியல் எஸ்டேட் நிறுவனமும், உலகளவில் சுநு.்.ஆயுஓ உடன் இருக்கும் மிக நீண்ட இலங்கை ரியல் எஸ்டேட் நிறுவனமும் இவர்தான். கனடாவில் ஸ்காபரோ பிராந்தியத்தில் மிக உயர்ந்த செயல்திறன் கொண்ட **RE/MAX** அலுவலகங்களில் ஒன்றாக அவர் தனது நிறுவனத்தை வளர்த்துள்ளார். வீடு விற்பனைத் துறையில் தனது சிறந்த சாதனைகளுக்காக ரஜீவ் கோணேஸ்வரன் பல வருடங்களாக பல விருதுகளையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார். அவர் தற்போது இரண்டு அலுவலகங்களை நிர்வகித்து வருகிறார், ஒன்று ஸ்கார்பரோவிலும் மற்றையது டர்ஹாம் பிராந்தியத்திலும் உள்ளது. இரண்டிலும் 200க்கும் மேற்பட்ட முகவர்களுடன். சிறந்த வாடிக்கையாளர் சேவையாற்றும் மற்றும் அர்ப்பணிப்பைப் பகிர்ந்து கொள்ளும் இசைவான எண்ணம் கொண்ட துறைசார்ந்த வல்லுனர்களின் குழுவாக தனது நிறுவனத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கின்றார்.

ரஜீவ் கோணேஸ் அவர்கள் தனது தொழில் சார்ந்த வாழ்க்கை முழுவதும், பல்வேறு வீடு விற்பனைத்துறை சுழற்சி முறைகளை வழிநடத்தினார், வளர்ந்து வரும் வீடு விற்பனையாளரின் சந்தைவாய்ப்பு முதல் சவாலாக விளங்கும் வீடு மற்றும் சொத்துக்கள் வாங்குபவர்களின் சந்தைகள் வரை, எல்லா நிலைகளிலும் தனது அனுசரிப்பு மற்றும் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தினார். அவர் நீடித்த உறவுகளை உருவாக்குவதிலும், ஒவ்வொரு வாடிக்கையாளர் மற்றும் முகவர்களிடமும் மிகுந்த அக்கறையுடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வதே சிறந்தது என்றும் தொடர்ச்சியாக நம்பி வருகின்றார்.



அவரது தொழில் வாழ்க்கைக்கு வெளியே, ரஜீவ் கோணேஸ் அவர்கள் தனது சமூகத்தில் ஒரு செயலூக்கம் கொண்டவராகவும் விளங்குகின்றார். அத்துடன் பல்வேறு முயற்சிகளில் பங்கேற்று, உள்ளூர் தொண்டு நிறுவனங்களை ஆதரிப்பவர்களில் ஒருவராகவும் திகழ்கின்றார்.

தற்போது ஒரு புதிய முயற்சியாகவும், தனது வீடு விற்பனைத்துறை மீதான ஆர்வமாகவும், ரஜீவ் கோணேஸ் தற்போது **RE/MAX Sri Lanka** என்னும் வீடு விற்பனைத்துறை நிறுவனத்தை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் இலங்கையில் **RE/MAX** பிராந்திய உரிமையின் பெருமைக்குரிய உரிமையாளராகவும் விளங்குகின்றார். இது அவரது தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வெற்றிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் எட்டியுள்ளது என்பதற்கு அடையாளமாகும். இந்த முயற்சியானது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், புதிய வேலை வாய்ப்பை வழங்குவதற்கும், தான் பெற்றவற்றை நாட்டிற்கு திரும்பக் கொடுப்பதற்கும் உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

இதன் மூலம் நமது சமூகத்தில் ஒரு சாதனையாளராக திகழும் ரஜீவ் கோணேஸ்வரன் அவர்களை நாம் அனைவரும் வாழ்த்துவோமாக!




# ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரத்தை, காணி அதிகாரத்தை தர முடியாது என்று சொல்லி இருக்கின்றார்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

ரணில் விக்கிரமசிங்கவினுடைய கடந்தகால செயல்பாடுகளையும் அவரது கருத்துக்களையும் வைத்து இப்படி நடக்கும் என்று முன்பே நாங்கள் ஊகித்துக் கொண்டபடியால் தான் பேச்சு வார்த்தைக்கே நாங்கள் செல்லவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடப் பேச்சாளரும் சிரேஷ்ட சட்டத்தரணி ஆகிய கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் தனியார் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் எங்களைத் தவிர தமிழ் தேசியம் பேசுகின்ற அனைத்து கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைக்கு சென்று, ரணில் விக்கிரமசிங்கவையும் இலங்கையையும் சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச அமைப்புகளிடமிருந்து காப்பாற்றி, இலங்கைக்கு கடன் பெற்றுக் கொடுத்துவிட்டு இன்றைக்கு தமிழினத்தின் எதிர்கால இருப்பு இல்லாமல் மூழ்கடித்திருக்கின்றார்கள் என்று தான் கூற வேண்டும்.

தங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய பேச்சு வார்த்தைக்கு நிபந்தனை இல்லாமல் செல்வது அரசை காப்பாற்றுகின்ற ஒரு முயற்சியாக தான் அமையும். நாங்களும் தமிழ் மக்களும் சமஷ்டிக்கு குறைந்த எந்த ஒரு தீர்வையும் எண்ணி பார்ப்பதற்கு கூட தயார் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க வோடு தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, மற்றைய தமிழ் தேசிய ஜனநாயக கூட்டணி போன்ற காட்சிகள் ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 வது திருத்தத்தை பற்றி கதைக்குச் சென்றது மிகவும் பிழை. இது தமிழ் மக்களுக்கு செய்த ஒரு வரலாற்று துரோகம்.



ஆகவே இப்பொழுது சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு விட்டு ஒற்றை ஆட்சிக்கு கீழ் கதைக்க போனவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க செருப்பால் அடித்து துரத்தி இருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். பொலிஸ் அதிகாரத்தை, காணி அதிகாரத்தை தர முடியாது என்று சொல்லி இருக்கின்றார்.

ஆகவே இந்த தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகளிடம் வினையமாக விடுக்கின்ற கோரிக்கை என்னவென்றால் இனியாவது திருந்திக் கொள்ளுங்கள். நாங்கள் சொல்வதைக் கேட்டு நடவுங்கள்.

மீண்டும் மீண்டும் போய் ரணில் விக்கிரமசிங்கமையும் ராஜபக்சகளையும் சர்வதேசத்திடமிருந்து காப்பாற்றிவிட்டு தமிழினத்தை மீண்டும் மீண்டும் அடக்கு வைக்காதீர்கள் - என்றார்.

SILLALAI SOCIAL AND CULTURAL ASSOCIATION OF CANADA
62 Rosemont Drive, Scarborough, Ontario, M1K 2W9
Registration No. 001523122

சில்லாலை சமூக கலாச்சார கனடா சங்கத்தின் கோடைகால ஒன்றுகூடல் (get together)எதிர்வரும் சனிக்கிழமை July 22, 2023 Scarboroughவில் Morningside Avenue and Ellesmere ற்கு அருகாமையில் அமைந்துள்ள " Morningside Park" ல் தொகுதி #4 இல் இடம்பெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் சில்லாலை சமூக கலாச்சாரச் சங்கத்தினர் அழைக்கின்றனர்.

தொடர்புகளுக்கு:

Gration Alfred (416) 317-4692
இன்பம் Berkman Santhiyapillai (416) 526-5003
& Anne Vigitha Xavier (416) 882-3366

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா

**கடந்த 20 ஆண்டுகளாக எமது ஒன்றியத்தினால் தொடர்ந்து நடாத்தப்படும் தமிழ்மொழித் திறமைகாண் மற்றும் பண்ணிசைப்போட்டிகள் - 2023**

காலம்: 30-07-2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 9.00 மணி முதல்
இடம்: Delta Academy Inc.
1160 Tapscott Road, Unit-1 (At McNicoll Ave)
Scarborough, ON M1X-1E9


கனடா வாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியிலே தமிழ்மொழி அறிவையும் சைவசமயப் பற்றையும் வளர்க்குமுகமாகத் தமிழில் எழுத்துப்போட்டி, வாசிப்புப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் பண்ணிசைப்போட்டி என 17 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வழமைபோல வயது அடிப்படையில் நடாத்தப்படவிருக்கிறது. மேற்படி போட்டிகளிலே பங்கு பற்றிச் சிறப்பிக்க விரும்பும் இணுவில் பிள்ளைகள் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-042,
ப. கஜஜெயன்: (416) 732-5898
ஜயசாஜினி சந்திரகுமார்: (647) 522-8821



# கடித ராஜ தந்திரம்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



**சி**ல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் சுமந்திரன் சொன்னார்... வெளியுறவுக் கொள்கையைப் பகிரங்கமாக விவாதிக்க முடியாது என்று. வெளியுறவுக் கொள்கை ஒரு ராணுவ ரகசியம் அல்ல. ஆனால் வெளியுறவுச் செயற்பாடுகள் ரகசியமானவைகளாக இருக்கலாம். அவற்றைப் பகிரங்கப்படுத்தி விட்டுத்தான் செய்ய வேண்டும் என்று இல்லை.

அண்மையில் தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்கு கடிதம் எழுதின.இதில் முதலாவது கடிதத்தை அனுப்பிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடிதத்தை ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்தியது. தமது ராஜதந்திர நடவடிக்கைகளில் வெளிப்படுத்தன்மையை பேணுவதாக அக்கட்சி காட்டிக் கொள்ள விரும்பியிருக்கலாம். ஆனால் எல்லா ராஜதந்திர நடவடிக்கைகளையும் வெளிப்படையாகச் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்று இல்லை.

கடந்த வாரம் எனது கட்டுரையில் நான் எழு-தியது போல ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் அவர் இந்தியாவை நெருங்கிச் செல்வதற்கு முயற்சித்தார். பொதுவாக இலங்கைத்தீவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஒருவர் முதலில் உத்தியோகபூர்வமாக செல்வது இந்தியாவுக்குத்தான். கோத்தாபயவும் அதைத்தான் செய்தார். ஆனால் ரணில் பதவியேற்ற உடன் அவ்வாறு இந்தியா செல்வதற்கு அவருக்கு அழைப்பு வரவில்லை. ஆனால் அவருடைய கட்சியில் முன்பு முக்கியஸ்தராக இருந்தவரும், பின்னர் ராஜபக்சர்களோடு இணைந்தவரும், ராஜபக்சக்களால் இந்தியாவுக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டவரும் ஆகிய மிலிந்த மொரகொட தனது நாடு தனக்கு வழங்கிய பணியைக் கச்சிதமாகச் செய்து முடித்து விட்டார் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஏறக்குறைய ஓராண்டு கால இடைவெளிக்குப் பின் ரணில் இந்தியாவுக்கு செல்கிறார். ஜனாதிபதியாக வந்தபின் அவருடைய முதலாவது இந்திய விஜயம் இது. இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் இந்தியாவின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக பல காரியங்களை செய்திருக்கிறார்.கடந்த ஓராண்டு காலகட்டத்தில் மிலிந்த இந்தியாவை நெருங்கிச் செல்வதற்காக என்னென்ன செய்தார் என்பது பகிரங்கமாக விவாதிக்கப்படவில்லை.

ஏன் அதிகம் போவான் ரணிலுடைய இந்திய விஜயத்துக்கு முன்னதாக கொழும்புக்கு வருகை தந்த இந்திய வெளியுறவுச் செயலர் கொழும்பில் என்னென்ன கதைத்தார்? எதை முடிவு செய்தார்? என்று விவரங்கள் பெரும்பாலானவை வெளியே சொல்லப்படவில்லை. ராஜதந்திர நகர்வுகள் அப்படித்தான் இருக்கும். அவை பகிரங்கமாக விவாதிக்கப்படுகின்றவை அல்ல. இப்படிப்பட்ட ராஜதந்திர சந்திப்புகளில் யாருடன் என்ன பேசப்படும் என்பது வெளியில் தெரிய வருவதில்லை.

முன்னாள் பாகிஸ்தானிய பிரதமர் பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ - இவரும் பின்னர் பிரதமராக வந்தவர் - தன்னுடைய தகப்பன் பிரதமராக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை அவர் எழுதிய ஒரு நூலில் குறிப்பிட்டிருக்கிறார். ஒருமுறை அமெரிக்க ராஜதந்திரி பூட்டோவை தனி அறையில் சந்தித்து பேசிக் கொண்டிருந்திருக்கிறார். அது பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம். சந்திப்பு நிகழ்ந்த நேரத்தில் சிறிய பெண்ணாகிய பெனாசீர் பந்து விளையாடிக் கொண்டிருந்திருக்கிறார். பந்து தவறுதலாக சந்திப்பு நடந்த அறைக்குள் போய்விட்டது. அப் பந்தை எடுப்பதற்கு அறைக்குள் போன பெனாசீர் அங்கே அமெரிக்க ராஜதந்திரி தன் தகப்பனை கடுமையான, அச்சுறுத்தலான துணியில் வற்புறுத்துவதை கண்டிருக்கிறார். நாட்டின் தலைவரான தனது தகப்பனோடு ஒரு வெளிநாட்டுத் தூதுவர் அவ்வாறு அச்சுறுத்தலான தொனியில் உரையாடியமை சிறிய பெனாஸ் இருக்கு ஆச்சரியமாக இருந்திருக்கிறது. சந்திப்பு முடிந்ததும் அவர் தந்தையிடம் அது பற்றி விசாரித்திருக்கிறார். இந்த ராஜதந்திரிகள் வெளியரங்கில் நாகரிகமாக சிரித்தபடி காணப்படுவார்கள். ஆனால் உட்சந்திப்புகளில் சில சமயம் மிகக் கடுமையாக நடந்து கொள்வார்கள் என்று பூட்டோ சொன்னாராம். உட் சந்திப்புகளில் என்ன நடக்கின்றது என்பது வெளியில் தெரிய வருவதில்லை. ஊடகங்கள் ஊகிப்பவை சில சமயம் சரியாக இருக்கலாம்.

எனவே ராஜதந்திர நகர்வுகள் எல்லாருக்கும் தெரியக்கூடியதாக நடப்பவை அல்ல. எல்லாருக்கும் விளங்கக்கூடியதாகவும் நடப்பவை அல்ல. கடந்த ஓராண்டு காலமாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நெருங்கி செல்ல முயற்சித்தார். அதற்காக டெல்லியில் மிலிந்த மொரகொட கடுமையாக வீட்டு வேலைகள் செய்ய வேண்டி இருந்தது. எப்படிப்பட்ட வீட்டு வேலைகளைச செய்திருப்பார் என்பது வெளியில் பெரும்பாலும் தெரியாது. ஆனால் ரணிலின் இந்திய விஜயத்தின் பின்னணியில் மிலிந்தவின் கடும் உழைப்பு உண்டு.

ஓர் அரசுடைய தரப்பாகிய சிங்கள மக்களின் தலைவர்கள் அவ்வாறு கட்டமைப்புசார் உறவுகளுக்கு ஊடாக நாடுகளைக் கையாள முடிகிறது. ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் என்ன செய்கிறார்கள்?

தமிழ் கட்சிகள் இந்தியாவுக்கு கடிதம் எழுதியது சரி. ஆனால் வெளிவிவகாரம் எனப்படுவது கடிதங்களை விடவும் ஆழமானது. எழுதிய கடிதங்களை பத்திரிகைகளில் பகிரங்கமாக வெளியிடுவது என்பது ஒரு வெளிப்படை தன்மையைக் காட்டும். அதன்மூலம் தமது நிலைப்பாடு என்ன என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த குறிப்பிட்ட கட்சி விரும்பக் கூடும். ஆனால் எல்லா விடயங்களையும் அவ்வாறு வெளிப்படுத்த முடியாது. சில வெளியுறவு நகர்வுகள் வரலாற்றில் பல தசாப்தங்களின் பின்னர்தான் தெரிய வருகின்றன. ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் நிகழ்த்த பல அவ்வாறான நகர்வுகள் யாருக்குமே தெரியாமல் காலத்தின் மர்ம அடுக்குகளுக்குள் புதைந்து போய்விட்டன.

எனவே கடிதம் எழுதுவது சரி. ஆனால் கடிதத்துக்கும் அப்பால் உழைக்க வேண்டியிருக்கிறது. கடிதத்தை எழுதினோம் பத்திரிகைகளில் வெளிப்படுத்தினோம் என்பதோடு வெளியுறவு நடவடிக்கைகளை சுருக்கிக் கொள்ளமுடியாது. தம்மை ஒரு தேசமாகக் கருதும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து கடிதம் எழுதும் கட்சிகள், ஒரு தேசத்துக்குரிய ஒழுக்கத்தோடு வெளியுறவுச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஒரு கட்டமைப்பு வேண்டும். கட்டமைப்பு சார்ந்த சிந்தனையும் செயற்பாடும் வேண்டும்.இது இந்தியாவின் விடயத்தில் மட்டுமல்ல, சீனா,அமெரிக்கா, ஐநா உள்ளிட்ட எல்லா வெளித்தரப்புகளை கையாளும் போதும் பொருந்தக்கூடியதே.

இந்தியாவின் விடயத்தில் மட்டுமல்ல, ஐநா மனித உரிமைகள் பேரவையின் விடயத்திலும் தமிழ் கட்சிகளின் கடிதம் விடு தூது ராஜ தந்திரத்தின் இயலாமையை வெளிப்படுத்தும் ஒரு விடயத்தை இங்கு சுட்டிக் காட்டலாம். 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்று தமிழ் கட்சிகள் இணைந்து ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதத்தை அனுப்பின. அதில் முக்கியமாக இரண்டு விடயங்கள் கேட்கப்பட்டிருந்தன. ஒன்று பொறுப்புகூறலை சர்வதேச நீதிமன்றங்களுக்கு பாரபடுத்த வேண்டும் என்பது. இரண்டாவது சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்கு ஒரு பலமான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்பது.

இது தொடர்பாக கடிதம் எழுதிய மூன்று கட்சிகளும் அதன் பின் தமது கோரிக்கைகளை நோக்கி எந்தளவுக்கு உழைத்திருக்கின்றன? கடந்த சுமார் இரண்டரை ஆண்டு காலப் பகுதிக்குள் தமிழ் கட்சிகள் அது தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன? அதில் ரகசியமான நகர்வுகள் இருக்கக்கூடும். அதை அவர்கள் வெளிப்படுத்தத் தேவையில்லை. அந்த கடிதத்தில் கேட்கப்பட்ட ஒரு விடயத்தை அதன் பலவீனமான வடிவத்தில் ஐநா நிறைவேற்றியிருக்கிறது. சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கட்சிகள் கேட்டது விவகாரத்தை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போகுமாறு. ஆனால் மேற்படி அலுவலகமானது மனிதஉரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்கு உட்பட்டதுதான். அதாவது விவகாரம் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்துச் செல்லப்படவில்லை. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை அரைகுறையாகத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆயின், தமிழ் கட்சிகள் உழைத்தது காணாது என்று பொருள். அல்லது தமிழ் கட்சிகளின் லொபி எடுபடவில்லை என்று பொருள். அப்படித்தான் பொறுப்புக்கூ றலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போகும் விவகாரமும். கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் அதற்காக எவ்வளவு தூரம் உழைத்திருக்கின்றன? அவர்கள் செய்த ரகசிய நடவடிக்கைகளை வெளிப்படுத்தத் தேவையில்லை. ஆனால் அதற்காக எப்படிப்பட்ட கட்டமைப்புகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதையாவது வெளியே செல்ல வேண்டும். ஏனென்றால் கட்டமைப்புகள் இல்லாமல் ருவிற்றரில் கட்சிகளின் ஆதரவாளர்கள் போடும் குறிப்புகளை வைத்து ராஜதந்திர நகர்வுகளை மதிப்பிட முடியாது. ஏனென்றால் தமிழ் கட்சிகளின் ஆதரவாளர்கள் ருவிற்றரில் ஆங்கிலத்தில் போடும் குறிப்புகளைப் பார்த்தால் அவர்கள் யாரிடமும் எந்த ஒரு வெளியுறவு ஒழுக்கமும் இல்லை என்று தெரிகிறது. அவர்கள் எல்லாரும் பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு, ருவிற்றரில் வீரம் காட்டுகிறார்கள், அல்லது வெறுப்பைக் கொட்டுகிறார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே கடிதம் எழுத வேண்டும். அதைவிட ஆழமான பொருளில் தமது இறுதி இலக்கு என்று எதனை கட்சிகள் கூறுகின்றனவோ, அதை நோக்கிக் உழைக்க வேண்டும். அதற்காகப் போராட வேண்டும். அப்படிப் போராடத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். போராட்டம் தான் போராட்டத்தை வளர்க்கும். ஆனால் அந்தப் போராட்டம் ரணில் விக்ரமசிங்க திட்டமிடுவது போல, தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தை சிறிய சிறிய உடனடி நிகழ்வுகளின் மீது சிதறடிக்கும் தந்திரத்துக்கு தெரிந்தோ தெரியாமலோ பதில் வினையாற்றும் ஒரு போராட்டமாக இருக்கக் கூடாது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 13ஆம் திருத்தச் சட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் – சர்வேஸ்வரன் தெரிவிப்பு

13ஆம் திருத்தச் சட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதை நடைமுறைப்படுத்துங்கள் என்று தான் கோருகின்றோம். இது ஏன் வேண்டாம் இதில் என்ன குறைபாடுகள் உள்ளன போன்ற காரணங்கள் தான் சமஷ்டிக்கான படிக்கட்டுக்களாக இருக்கப் போகின்றது என முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரும் போது துரோகிகள், தமிழர்களுக்கு துரோகமிழைத்து விட்டார்கள் என இத் திருத்தச் சட்டத்தைப் பிரிவுபடுத்தி குறுகிய அரசியலாக நோக்குகின்றனர்.

35 ஆண்டுகளாக அரசியல் அமைப்பிலுள்ள விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கோரும் உரிமையும் பொறுப்பும் எங்களுக்கும், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கத்திற்கும் காணப்படுகின்றது.

ஆகவே இதை எதிர்க்கும் தரப்பினர் உணர்ச்சி வசப்படுகின்றார்களா அல்லது வாக்குகளைப் பெறுவதற்கான குறுகிய அரசியல் நோக்காகச் செயற்படுகின்றார்களா எனத் தெரியவில்லை.

இச் சட்டத்தில் வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை, காணி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் இயலுமை எமக்கில்லை.

30 ஆண்டுகளாக உயிர்கள், சொத்துக்களை இழந்தவர்கள் நாங்கள் தான். எமது தீர்வுக்காக இச் சட்டம் வந்தாலும் மாறாக இதன் நன்மைகளை தென்னிலங்கையே அனுபவித்தது.

எனினும் யுத்தம் நடைபெறும் போது வர்த்தகமானியூடாகவும் பரிந்துரைகளுாடாகவும் பல அதிகாரங்களை மத்திய அரசு மீள எடுத்துக்கொண்டது.

13ம் திருத்தச்சட்டமென்பது நாட்டின் நீதியுயர் சட்டத்தின் ஒரு பகுதியாகும். எனவே இதில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமாயின் பாராளுமன்றத்தினூடாகவே மேற்கொள்ள முடிவதுடன் மாறாக நிர்வாக நடவடிக்கைகளுாடாகவோ, வர்த்தகமானியூடாகவோ, பரிந்துரைகளூடாகவோ மாற்றியமைக்க முடியாது.

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தில் தமிழர்கள் சார்பில் கைச்சாத்திட்ட இந்தியா ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை தொடர்பில் அன்று. முதல் இன்று வரை ஏதோ ஒரு நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

அமெரிக்காவாயினும் ஐரோப்பிய ஒன்றியமாயினும் ஐக்கிய நாடுகள் சபையாயினும் சரி இந்தியாவை மீறி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது.

மாறாக இந்தியாவின் ஆலோசனைகள், விருப்பங்களில் தான் அனைத்தும் நடக்கும் என்பது சர்வதேச அரசியலில் தற்போதுள்ள யதார்த்தம்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் வரை ஈழமோ அதியுச்சபட்ச சமஷ்டியோ கிடைக்கலாமென்ற நம்பிக்கை இருந்தது. யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்தும் எந்த நாடும் தீர்வு பற்றி எதுவும் பேசவில்லை.

நாங்கள தான் நாடுகளை தேடி கண்டறிந்து எமது தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச அரசியலை எடுத்துக் கொண்டால் எந்தவொரு நாடும் தனது நலனிலே கவனஞ் செலுத்தும். அவர்களின் நலனோடு சேர்த்தோ ஒத்திசைவான திசையிலோ எமது பிரச்சினைகளையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலைப்பாடே உள்ளது.

இந்நிலையில் இந்தியா தமிழ் மக்களின் பிரச்சினையைக் கையாள்வதன் மூலம் இலங்கை அரசை கையாள முடியும் என்பது உண்மை.

ஐக்கிய நாடுகள் சபையில் பீட்டோ அதிகாரத்தை கொண்டிருக்கும் சீனா ஏனைய நாடுகளின் விடயத்தில் வாய் திறப்பதில்லை.

13ம் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்க முன்னர் இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளும் தேசியப் பாடசாலைகளாகவே காணப்பட்டது.

சட்டம் கொண்டு வந்ததன் பின்னர் 19 பாடசாலைகளே காணப்பட்டாலும் யுத்தத்தின் பின்னர் அகில இலங்கையிலே 350 வரையிலும் வடமாகாணத்தில் 20 பாடசாலைகள் வரை தேசியப் பாடசாலைகளாக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் தேசியப் பாடசாலையாக்கத்திற்கெதிராக மாகாணசபை நியதிச் சட்டத்தை மீறல், 13ம் திருத்தச் சட்டத்தை மீறல் எனும் சாராம்சத்தில் வழக்கைத் தாக்கல் செய்தேன்.

இதன் தீர்ப்புகளை கவனத்திலெடுத்து எதிர்வரும் காலங்களில் ஏனைய துறைகளுக்கும் இம் முறையைப் பிரயோகித்து பறிகப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முயற்சிக்கலாம்.

எனவே 13ம் திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு இந்தியாவிற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய கடப்பாடு உண்டு.

எனவே இவ்விடயத்தை எங்களுடைய கட்சிகள் எல்லாம் எந்த அளவிற்கு மேற்கொள்கின்றோம் என மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றையதினம் (15) வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் கல்வி கற்று வந்த மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் யாழ். வண்ணார் பண்ணை பகுதியைச் சேர்ந்த 22 வயதான மாணவன் என தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவிற்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் இருவர்

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த திருமதி. உமாச்சந்திர பிரகாஷ் மற்றும் வன்னியசிங்கம் பிரபாகரன் ஆகியோரின் பெயர்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த இருவரினதும் பெயர்களை ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாராவின் கையெழுத்துடன் அபிவிருத்தி குழுவுக்கு பங்கெடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலி பொலிஸ் நிலையம் முன்பாக பெற்றோல் ஊற்றி தீக்குளிக்க முற்பட்ட நபர்

யாழ்ப்பாணத்தில் நபர் ஒருவர் பெற்றோல் ஊற்றி தீக்குளிக்க முற்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. இச்சம்பவம் அச்சுவேலி பொலிஸ் நிலையம் முன்பாக இன்று காலை இடம்பெற்றுள்ளது.

தகராறு காரணமாக ஏற்பட்ட முரண்பாட்டில் காவல்துறையினர் பக்கச் சார்பாக தனக்கு எதிரான முறைப்பாட்டை மேற்கொள்வதாக தெரிவித்தே தீக்குளிக்க முற்பட்டுள்ளார்.

இதேவேளை அவர் அங்கிருந்தவர்கள் மற்றும் காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.



# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க தூதுவருடன் கலந்துரையாடல்

(18-07-2023)

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தரடநை உூரபெ ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் Julie Chung தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்க பதிவொன்றில் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

உண்மை, நல்லிணக்கம் மற்றும் வடக்கு கிழக்கு பகுதிகளின் அமைதி நிலைமை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் அதிகாரப்பகிர்வு, காணி விவகாரம், வலிந்து க ாணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் பிரச்சினைகள் மற்றும் புதை குழிகளுக்குள் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆனையிறவு ஏ – 9 நெடுஞ்சாலை பகுதியில் மரக்கன்றுகளுக்கு தீ வைத்து எரித்த மனிதாபிமானமில்லாத விசமிகள்!





ஏ-9 நெடுஞ்சாலை, ஆனையிறவு பகுதியில் நாட்டப்பட்டிருந்த மரக் கன்றுகளுக்கு விசமிகள் தீ வைத்ததில் அவை தீயில் கருகியுள்ளன.

தன்னார்வ அமைப்பொன்றினால் வீதியின் இருமருங்கிலும் நடப்பட்டு பராமரிப்புச் செய்யப்பட்டுவந்த மரக்கன்றுகளில் 28 மரக்கன்றுகளுக்கே இனந்தெரியாத நபர்கள் இவ்வாறு தீ வைத்து அழித்துள்ளனர்.

இயற்கை வளங்கள் அழிவுற்று வரும் நிலையில் மனிதர்களுக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த நோய்த்தாக்கங்களில் இருந்து மனிதர்களை பாதுகாப்பதில் மரங்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன.

மரங்கள் நாட்டப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கூறி, அதனை ஊக்குவித்து வருகின்ற நிலையில், இவ்வாறான ஒரு செயற்பாடானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழர்களின் தலைவிதியை இந்தியாவிடம் கையளித்துள்ள தமிழ்த் தலைமைகள்!



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

- பந்து இந்தியா பக்கம்.
- நான் ராஜபக்ஷ அல்ல ரணில் விக்ரமசிங்க
- வடக்குக் கிழக்கு இணைப்பு இல்லை.

தமிழ் நாட்டில் பெரும்பாலான மக்கள் காமராஜர் போன்ற தலைவர்களைத் தேடுகின்றனர். இது பற்றி வட்சப்பில் பதிவிட்டிருந்த நண்பர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். “காமராஜர் போல தலைவர்களைத் தேடுகின்றோமே தவிற .. அந்தக் கால வாக்காளர் போல் நாம் நேர்மையாக இல்லையே என்பதை உணர மறுக்கின்றோம்“ எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தின் ஒட்டு மொத்த அரசியல்வாதிகளை மட்டுமன்றி தமிழக வாக்காளர்களும் நேர்மை இன்றி இருப்பதினாலேயே தமிழகம் சீரழிந்து போய்க் கிடக்கின்றது என்பதை அனைத்து தரப்பினருக்கும் உறைக்கும் வகையில் இந்தப் பதிவு அமைந்துள்ளது.

காமராஜர் போன்ற தலைவர்களைத் தேடும் தமிழகம் போன்றே இலங்கையிலும் இன்று மக்கள் தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

- லீ குவான் யூ போன்ற ஒரு தலைவரை தேடும் தென்னிலங்கை

சுதந்திர இலங்கையின் 75 வருட கால வரலாற்றில் தென்னிலங்கை மக்கள் முதன் முறையாக தமக்கான நாட்டுக்கான ஒரு தலைவரைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் மாற்றத்தை நோக்கி அரகலயாக்களின் பின்னால் அணிதிரண்ட தென்னிலங்கை மக்கள் இலங்கையில் “சிஸ்டம் சேன்ஜ்“ மாத்திரமல்ல அதனைக் கொண்டு நடத்தக் கூடிய தலைவரையும் தேடினர். அவ்வேளையில் இலங்கைக்கு இன்று தேவை ஒரு லி குவான் யு என உதயனில் கட்டுரை வரைந்திருந்தேன். இன்று பெரும்பாலான தென்னிலங்கை மக்கள் தமக்கு லீ குவான் யூபோன்ற தலைவர் தேவை என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

லீ குவான் யூ போன்ற ஒரு தலைவரையே ஜனாதிபதித் தேர்தலில் முன் நிறுத்தியுள்ளதாக தென்னிலங்கையில் பெரிதளவில் பேசப்பட்டது. அந்த லீ குவான் யூ வேறு யாருமல்ல கோதாபய ராஜபக்சதான். அவ்வேளையில் இன்றைய வெளி நாட்டு அமைச்சர் அலி சப்ரி அவர்கள் பேசும் போது “தனி நபர்களால் நாடுகளின் தலைவிதியே மாற்றி அமைக்கப்பட்டது. அவ்வகையில் லி குவான் யு வால் சிங்கப்பூர் சிருஸ்டிக்கப்பட்டது.. மகாதீர் முகமட்டால் மலேசியா சிருஸ்டிக்கப்பட்டது.. அது போல் இலங்கை கோதாபய ராஜபக்சவால் மாற்றத்திற்குள்ளாகும். இலங்கையின் அடுத்த லீ குவான் யூ கோதாபய ராஜபக்ச என்று குறிப்பிட்டார். தென்னிலங்கை மக்களும் பல்வேறு எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் 69 இலட்சம் வாக்குகளால் கோதாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கினர். மக்களின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போகவே 75 வருடகால சுதந்திர இலங்கையில் மக்கள் எழச்சியால் தூக்கி வீசப்பட்ட ஜனாதிபதியாக கோதாபய ராஜபக்ச வரலாற்றில் பதிவானார்.

ஆரகலய மக்கள் எழுச்சியுடன் இலங்கையில் புதிய யுகம் மலரும் என எதிர்பார்த்த தென்னிலங்கை மக்களுக்கு கிடைத்ததோ பெருத்த ஏமாற்றமே. “புதிய போத்தலில் பழைய கள்“ பாணியாகக் கூட அமையாது “பழைய போத்தலில் பழைய கள் “சிஸ்டமே“ தென்னிலங்கை மக்களுக்கு மீண்டும் கிடைத்துள்ளது. ஆனால் தென்னிலங்கை மக்கள் தமக்காக லீ குவான் யூ வைத் தேடும் தாகத்தை “பழைய கள்“ அரசியலால் தடுத்துவிட முடியவில்லை.

- தமிழ் மக்கள் தமக்கான தலைவரைத் தேடுகின்றனர்.

தமிழக மக்கள் போன்று தென்னிலங்கை மக்கள் மாத்திரமல்ல இலங்கையில் தமிழ் மக்களும் தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

நவக் கிரகங்களாக நிற்கும் தமிழ்த் தலைமைகளிடையே கடந்த 14 வருடங்களாக தமிழ் மக்களும் தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். நேர்மை இன்றி இருக்கும் தமிழ்த் தலைமைகளின் பின்னால் தமிழ் மக்களும் பிரிந்து நின்று தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான தமிழ் மக்களின் மனங்களில் “தலைவர்“ போன்று இன்னொரு “தலைவர்“ வரமாட்டாரா என்ற ஏக்கமே குடி கொண்டுள்ளது.

தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் தமிழர் விரோதப் போக்கு இலங்கை அரசின் இயந்திரக் கட்டமைப்பின் இனவாத செயற்பாடுகள் பேரினவாதத்தின் கடும் போக்கு என தென்னிலங்கையின் அணைத்து கட்டமைப்புக்களும் தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத்தியுள்ள போர் என்பன தமிழ் மக்களின் சிந்தனைகளில் பழைய பிம்பங்கள் மீண்டும் உருவேறத் தொடங்குகின்றன. இதற்கான முழுப் பொறுப்பையும் தென்னிலங்கை சக்திகளும் தற்போதைய தமிழ் தலைமைகளுமே ஏற்க வேண்டும்.

2009 இல் கிளிநொச்சி படைகள் வசம் வந்த போதே தமிழ் மக்களுக்கென விசேட பிரச்சனைகள் எதுவும் இல்லை என சிங்கள புத்திஜீவிகளில் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்களில் பெரும் பகுதியினரும் பேசத் தொடங்கிவிட்டனர்.

13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த இந்தியாவிடம் கோரிக்கை முன்வைப்பதற்கென யாழில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது உரையாற்றிய சுரேஸ் பிரெமச்சந்திரன் பேசுகையில் போர் முடிவடைந்ததை அடுத்து சம்பந்தன் ஐயாவும் தானும் சந்திரிகா அம்மையாரைச் சந்தித்து “தற்போது போர் முடிவடைந்துவிட்டது. தமிழர் விவகாரத்துக்கு தீர்வு காணுவது தொடர்பாக பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தால் என்ன“ என்று வினவியுள்ளனர். அதற்கு சந்திரிகா அம்மையார் “போர்தான் முடிவடைந்து விட்டதே. இனி என்ன பேசுவதற்கு உள்ளது“ என்று பதில் அளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்தவரை பேச்சு வார்த்தைக்கு இறங்கி வந்த தென்னிலங்கை அரசியல் சக்திகள் போர் முற்றுப் பெற்றவுடன் பேச்சு வார்த்தையும் இல்லை தமிழருக்கென பிரச்சனையும் இல்லை என்ற நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கின. இந்தத் தலைமைகள்தான் தமிழர் விவகாரத்தக்குத் தீர்வு காண்பர் என்று தமிழ்த் தலைமைகளில் வெளிப்படையாக இணக்க அரசியல் நடத்துபவர்களும் மறைமுகமாக இணக்க அரசியல் நடத்துபவர்களும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருக்கின்றனர்.

- தென்னிலங்கை தலைமைகளின் இராஜதந்திரம்.

தென்னிலங்கைத் தலைமைகளைப் பொறுத்து ஐ.நா. மனித உரிமை பேரவை கூட்டத் தொடர் நடைபெறும் போதும் அல்லது இந்தியாவுக்கான உத்தியோகப் பயணத்தின் போதும் தமிழ்த் தலைமைகளை அழைத்துப் பேசுவதும் பயணம் முடிந்த பின் தமிழர் விவகாரத்தை கிடப்பில் போடுவதும் வழமையான இராஜதந்திர காய் நகர்த்தலாகும்.

அந்தவகையில் மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்றக் குழுவினால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபின் ரணில் விக்ரமசிங்க இந்தியப் பயணத்துக்கான வெள்ளோட்டமாக தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்துப் பேசத் தொடங்கினார். 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்தார். பிறகு இந்த விவகாரத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்.

- இந்தியாவிடம் சரணடைந்த தமிழ்க் கட்சிகள்

தற்போது இந்தியப் பயணத்தக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகள் தனித்தும் கூட்டாகவும் இந்தியப் பிரதமருக்க 13ஐ முழுமையாக அமல்படுத்துவது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளன. கஜேந்திர குமார் பொன்னம்பலம் அணி 13 தொடர்பாக 30க்கும் மேற்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்களைச் சுட்டிக்காட்டியும் சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் குறித்த வலியுறுத்தலுடன் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. மொத்தத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழர் விவகாரத்துக்கான தீர்வு குறித்து இந்தியாவிடம் சரணடைந்துள்ளன.

இதனை தமிழ்க் கட்சிகள் என்றோ செய்திருக்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் ஐயா இந்த நகர்வை மேற் கொண்டிருக்க வேண்டும். மக்கள் ஆதரவும் இருந்தது. அதேவேளையில் நாடாளுமன்ற ஆசனங்களும் இருந்தன.

- தமிழர் ஒற்றுமை எங்கோ நிற்கிறது.

ஆனால் இன்று பலம் வாய்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை. தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் மற்றும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் தமிழ்க் கட்சிகளில் ஒன்றாக தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவராக சம்பந்தன் ஐயா களத்தில் நிற்கின்றார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)






# அதிகார பகிர்வு: ரணில்–சம்பந்தர் நேரடி மோதல், அரசின் முன்மொழிவும் நிராகரிப்பு

- நடராசா லோகதயாளன்



தமிழ் மக்களிற்கான அதிகார பகிர்வு தொடர்பில் வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் கட்சிகளுடன் ரணில் விக்ரமசிங்க நடத்திய கூட்டத்தில் அவருக்கும் இலங்கையின் மிக மூத்த தமிழ் அரசியல் தலைவரான சம்பந்தர் அவர்களுக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் எழுந்துள்ளதாக அறிய முடிகிறது.

கடந்த புதன்கிழமை (18) ஜனாதிபதி செயலகத்தில் நீண்டகாலமாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சனைக்கான தீர்வு உட்பட பல விடயங்கள் தொடர்பில் உரையாட அந்த தமிழ் கட்சிகளை இலங்கை ஜனாதிபதி அழைத்திருந்தார். அந்த கூட்டத்தில் முதலில் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை ஜனாதிபதி தொடங்க, அதிகார பகிர்வு குறித்து முதலில் உரையாடலாம் என தமிழ் கட்சிகள் கூறியதை அடுத்து அது முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதிகாரப் பகிர்வு என்ற பெயரில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து நடைமுறைப்படுத்துவதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைகளைத் தமிழரசுக் கட்சி அடியோடு நிராகரித்தது. அதுமட்டுமின்றி இதன் போது ஜனாதிபதி ரணில் மற்றும் சம்பந்தர் ஆகியோரிடை-யே கடும் வாக்குவாதமும் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் கூட்டணி அந்த யோசனை-களைச் செயற்படுத்தினால் அதற்குத் தமது கட்சி ஆதரவளிக்கும் என்று தெரிவித்தது. அரச பங்காளிகளான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோர் ரணிலின் யோசனைகளை ஆதரித்தனர். ஜனநாயகக் கூட்டணி எந்தக் கருத்தையும் தெரிவிக்காது அமைதி காத்தது. ரணிலின் கருத்தை அந்தக் கட்சி எதிர்க்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்வதற்கு முன்பாகத் தமிழ் அரசியல் கட்சியினரைச் சந்திப்பதற்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த கூட்டத்தில் தமிழ் தலைவர்களுடன் பேசி ஒரு இணக்கப்பட்டை ஏற்படுத்தி அதை தமது வெற்றியாக இந்தியா செல்லும் போது அதன் பிரதமர் மோடியிடம் காட்டிக்கொள்ள ரணில் விழைந்தார், ஆனால் இந்த கூட்டத்தில் அவர் எதிர்பார்த்த அந்த இணக்கப்பாடு ஏற்படவில்லை என்று கூட்டம் குறித்த தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகக் கூட்டணி, ஈபிடிபி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, சுசில் பிரேமஜெயந்த, பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் தொடக்கத்தில் ஜனாதிபதி ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பேச்சைத் தொடங்கினார். அதில் பெரும்பாலானவை வடக்கு கிழக்கில் அரசு செய்வதற்கு உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பானவை. 10 வருடத் திட்டங்கள் உட்படப் திட்டங்கள் குறித்தும் அவர் பேசினார். அந்த நிகழ்ச்சி நிரலின் இறுதிப் பகுதியி-லேயே அதிகாரப் பகிர்வு குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் உரையின் இடையில் குறுக்கிட்ட தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன், "இன்று நாங்கள் பேச வந்தது அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவல்ல, அதிகாரப் பகிர்வு தொடர்பாகவே எனவே அதைப் பற்றிப் பேசுங்கள். அதிகாரப் பகிர்வு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால் அபிவிருத்தியும் தானாகவே நடக்கும். எனவே முதலில் தீர்வு குறித்துப் பேசலாம்" என்றார்.

அதனை அடுத்து அதிகாரப் பகிர்வு என்ற தலைப்பின் கீழ் ஆளும் தரப்பினர் செய்வதற்குத் திட்டமிட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி சபையில் முன்வைத்தார். பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஆளும் தரப்பு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளையும் அவர் விவரித்தார்.

அதிகாரப் பகிர்வுக் குழு மற்றும் அமைச்சரவை ஆகியவற்றில் இந்த அதிகாரப் பகிர்வு குறித்து ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்தார். பொலிஸ் அதிகாரங்களைத் தவிர்த்து 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதைப் பாதுகாக்கும் வகையில் அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றார் ரணில்.

மாகாணச் சட்டங்களின் கீழ் ஒருங்கு நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் பலவற்றையும் மாகாண நிரலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். உதாரணமாக கல்வி, விவசாயம் போன்ற விடயங்களில் முழு அதிகாரமும் மாகாண சபைகளிடமே ஒப்படைக்கப்படும் என்றார். இதேவேளை காணி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்பது அரசு வழங்கிய உத்தேச தீர்வு ஆவணத்தில் இல்லை.

கல்வித்துறையில் பெரும்பாலான விடயங்கள், பல்கலைக்கழகங்களை உருவாக்குவது உள்ளிட்ட அதிகாரங்கள் மாகாண சபையின் நிரலுக்குக் கீழேயே கொண்டுவரப்படும். கல்விக் கொள்கைகள் சார்ந்த விடயங்களை மத்திய அரசு தீர்மானிக்கும் என்று அந்த முன்மொழிவு ஆவணம் கூறுகிறது.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவது மற்றும் அதை அடித்தளத்தில் இருந்து மேம்படுத்தவது தொடர்பான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

மாகாண சுற்றுலா வளர்ச்சித் துறையை உருவாக்குவதற்கான சட்டமூலம் கொண்டு வரப்படும்.

தொழிற்துறை முதலீட்டில் 250 மில்லியன் டொலர் வரையிலான முதலீடுகளை சிறிய மற்றும் நடத்தர வர்த்தகத்திற்காகக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை வழங்கும் சட்டமூலம் உருவாக்கப்படும்.

மாவட்டச் சபைகளை உருவாக்குவதற்கான சட்டமூலமும் முன்வைக்கப்படும்.

அதேபோன்று மாகாண சபைகளுக்குரியவைகளாக இருந்தபோதும் மத்தியால் நிர்வகிக்கப்பட்டுவரும் பல விடயங்களை மீண்டும் மாகாணங்களுக்கே ஒப்படைக்கும் வகையிலான அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்படும்.



அதுதான் அதிகாரப் பகிர்வு தொடர்பான எமது முதல் கட்டம். இரண்டாவது கட்டம் அபிவிருத்தி தொடர்பானது. மீள் சக்தி உருவாக்கத்துறையில் வடக்கு மாகாணத்திற்கு முதலீடுகளை வரவைப்பது, பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியா உற்பத்தியை ஊக்குவிப்பது, மீள் சக்தி உருவாக்கத்திற்கான (சூரிய கல மின் உற்பத்தி) மத்திய நகரமாக பூநகரி உருவாக்கப்படும்".

யாழ்ப்பாணத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்திற்காக பூநகரியில் ஒரு தண்ணீர் தாங்கி உருவாக்கப்படும். காங்கேசன் துறைமுக அபிவிருத்தி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா விமான நிலையங்களின் அபிவிருத்தி, தென்னிந்தியாவுக்கும் வடமாகாணத்திற்கும் இடையிலான போக்குவரத்து இணைப்பு, காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய இடங்களில் பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் உருவாக்குதல், சுற்றுலாத்துறை யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் மேம்படுத்தல், தெங்குச் செய்கையை வன்னியில் ஊக்குவித்தல், யாழ்ப்பாணத்தைப் பல்கலைக்கழக நகரமாகத் தரமுயர்த்துதல் ஆகியவற்றை அபிவிருத்தித் திட்டங்களாக ஜனாதிபதி அந்த ஆவணத்தில் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், "ராஜபக்ச ஆட்சி காலத்தில் மூன்று தடவைகள் இந்தியாவுடன் சேர்ந்து 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும், அதையும் தாண்டி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாகவும் மகிந்த ராஜபக்ச வாக்குறுதியளித்திருந்தார். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு தேவை என்று அவர் சொல்லும்போது, 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால்கூட அது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வாக இருக்க முடியாது என்பதே பொருள்" என்றார். அப்படியிருக்கும்போது பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத 13 என்பது குறைப்பிதே தவிர அதிகரிப்பதாகாது என்று சுட்டிக்காட்டினார்.

2015இல் உங்களது ஆட்சியில் அதி-காரப் பகிர்வு தொடர்பில் பல இணக்கங்கள் எட்டப்பட்டன. அந்த அறிக்கைகளும் இருக்கின்றன. அதில் பொலிஸ் அதிகாரம் குறித்து ஒரு உப குழு நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டது, தீர்வு காணப்பட்டது. அதன் பின்னர் பொலிஸ் அதிகாரங்கள் இல்லை என்பது அர்த்தமற்றது என்றார்.

இதற்குப் பதிலளித்த ரணில், "நான் ரணில் விக்கிரமசிங்கவே தவிர ரணில் ராஜபக்ச அல்ல, ஜனாதிபதி ராஜபக்ச சொல்லியவற்றின் பின்னால் நான் செல்ல முடியாது, நான் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக முதலில் கூறியபோது பெரும் குழப்பங்கள் வெடித்தன. அதனால் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பின்னர் தீர்மானிக்கலாம் என்று நாம் முடிவு செய்தோம், ஏனைய அதிகாரங்கள் குறித்து இங்குள்ள அமைச்சர்களால் இரு நாள்களுக்கு முன் ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. நானும் அதை ஏற்கிறேன். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களாக இருந்தால் அது குறித்து நாம் முன்னேறியச் செல்லலாம். பொலிஸ் அதிகாரங்கள் குறித்துத்தான் முரண்பாடு இருக்கிறது. மற்றெல்லாவற்றையும், மத்திய அரசு எடுத்தவை உள்ளிட்ட எல்லாவற்றையும் தருவதற்கு நான் தயார்" என்றார் ரணில்.

நீங்கள் பெப்ரவரியில் ஒரு காலக்கெடு கொடுத்தீர்கள், அதற்குள் எதுவும் நடக்கவில்லை. அதன் பின்னர் கடைசிக் கூட்டத்தில் ஜூலை முடிவதற்குள் என்று சொன்னீர்கள், இதுவரையில் எதுவும் நடக்கவில்லை எனவே முடிவில்லாத இந்த விடயத்தில் நாங்கள் பங்கெடுக்கவிரும்பவில்லை. அதற்காக நாம் இதனை எதிர்க்கவும் இல்லை என்று சுமந்திரன் அவருக்கு மறுமொழி அளித்தார்.

"ஜூலை 31க்கு முன்னர் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதாக நான் உறுதியளிக்கவில்லை. முன்மொழிவுகளை வைக்கிறேன் என்றுதான் சொன்னேன். அதனை இப்போது வைத்திருக்கின்றேன். அதற்கு நீங்கள் ஆதரவளிக்கிறீர்களா இல்லையா என்பதே கேள்வி" என்றார் ஜனாதிபதி.

இந்த முன்மொழிவுகளை நேர்மையான அதிகாரப் பகிர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நேரடியாகவே பதிலளித்தார் சுமந்திரன். அதற்காக இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக நாங்கள் நிற்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தருணத்தில் ஏனைய கட்சித் தலைவர்கள் அமைதி காத்ததைத் தொடர்ந்து மற்றைய கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் நான் அறிய விரும்புகின்றேன் என்றார் ரணில் சற்றுக் கோபமாக.

இந்தக் கட்டத்தில் 13ஐப் பலப்படுத்தும் எந்த விடயத்திற்கும் அதனை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளுக்கும் தனது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சி முழு ஆதரவையும் வழங்கும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இதனை நிறைவேற்றவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு, "இன்னும் இரண்டு வாரங்களில் அமைச்சர்களுடன் இந்த விடயம் குறித்துக் கலந்தாலோசித்து இதனை முன்கொண்டு செல்லலாம், அப்போது மற்றவர்களுக்கும் அழைப்பு விடுக்கலாம் யாருக்கு வர விருப்பம் இருக்கிறதோ அவர்கள் வரலாம் மற்றவர்கள் விட்டுவிடலாம். ஆனால் இதனை முன்கொண்டு செல்வதில் நான் அர்ப்பணிப்புடன் இருக்கின்றேன்" என்றார் ரணில்.

அப்போது பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் "இந்தப் பிரச்சினைக்கு நீண்ட கால மற்றும் குறுகிய காலத் தீர்வுகளை முன்வைப்பீர்கள் என்று கூறியிருக்கிறீர்கள், அதில் குறுகிய காலத் தீர்வாக இது இருக்கும்" என்று தான் கருதுவதாக கூறினார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தர், ஜனாதிபதியின் செயற்பாடுகளை ஒரு பிடி பிடித்தார். கடும் கோபத்தோடு கருத்துக்களை முன்வைத்தார். "முடிவின்றித் தொடரும் இந்த முயற்சிகளை நிராகரிக்கின்றோம், இந்தச் செய்தி நீங்கள் செல்லும் இடத்திற்கு உங்களுக்கு முன்பாகச் சென்று சேரும்".

இவை தொடர்பான செய்தி வீடியோக்களை ஊடகங்களிற்கு அனுப்பி வைத்த ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு ஜனாதிபதியின் குரலை அனுப்பி வைத்துள்ளபோதும் வேண்டுமென்றே திட்டமிட்ட முறையில் சம்பந்தனின் வீடியோவில் இருந்த குரலை முழுமையாக நீக்கியே ஊடகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



# வவுனியா சீனித் தொழிற்சாலையால் மனித–யானை மோதல் அதிகரிக்கும் என வனத்துறை எச்சரிக்கை

- நடராசா லோகதயாளன்


வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF WILDLIFE AND FOREST RESOURCES CONSERVATION
No. 1090, Sri Jayewardenepura Mawatha Rajagiriya.
My No. MWFRC/ADM/06/06/64 | Your No. CP 23/1455/931/015 | Date 2023.06.26

Sutech Sugar Industries
2023.06.05

3.1, 3.2 3.3 3.4

1980 47

11/12

சுற்றாடல் அமைச்சு
Ministry of Environment

**வ**வுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க ரணில் விக்ரமசிங்க அரசு எடுத்துள்ள முயற்சி தொடர்ந்து சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. அந்த தொழிற்சாலை அங்கு அமைக்கப்பட்டால் அப்பகுதியின் நீர்வளம் மிகவும் பாதிக்கப்படும் என்று பல்துறை வல்லுநர்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர்.

இப்போது வனஜீவராசி அமைச்சும் இது குறித்த எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளத்து "நயினாமடு சீனித் தொழிற்சாலைக்காக 500 ஏக்கர் காடு அழப்பால் மனித-யானை மோதல் உருவாகும்" என வனவளம் மற்றும் வன ஜீவராசி அமைச்சு அறிக்கையில் கூறியுள்ளது.

வவுனியா வடக்கில் சீனித் தொழிற்சாலைக்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டிருக்கும் 200 ஹெக்டேயர் காட்டினையும் அழத்தால் அதனை அண்மித்த பகுதி மனிதர்களிற்கும் யானைகளிற்குமான மோதல் ஏற்படும் களமாக மாறும் என வனவளம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சட்டத்தரணி பவித்திரா வன்னியாராச்சி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

2023-06-26 ஆம் திகதிய MWFRC/ADM/06/06/64 இலக்க கடிதம் மூலமே இவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் "சீனித் தொழிற்சாலைக்காக தெரிவு செய்யப்பட்ட 200 ஹெக்டேயர் அல்லது 500 ஏக்கர நிலப் பிரதேசத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்ததில் அந்த இடம் காடு சார்ந்த வனப்பகுதி எனபதோடு ஏற்கனவே மத்திய தர வகுப்பினருக்கு வழங்குவதற்காக விடுவிக்கப்பட்ட காணிகளாகும். பாவணை முறைமைக்கு மாறாக்காடாகும். அதனூடாக காடுகள் அழிப்பு என்பது மனிதர்கள் யானைகளுடனான மோதல்கள் தீவிரமடையும் எனக் கண்டறிகின்றேன்" என்று தனது அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே காடுகள் அல்லாத காணகளை இதற்கு தெரிவு செய்வதே சிறந்தது என அவதானிக்கப்படுகின்றது. எனப் பரிந்துரைக்கப்பட்டபோதும் இறுதியில் வேறு காணிகள் தேட முடியாவிட்டால் இதனை முன்மொழிய 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைய சுற்றாடல் விதிமுறைக்கேற்ப பரிந்துரைக்கின்றேன் என்று கூறி பவித்ரா வன்னியாராச்சி அந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதேநேரம் வவுனியா வடக்கில் அமையும் சீனித் தொழிற்சாலையின் உற்பத்திக்கான கரும்புச் செய்கைக்கு 74 ஆயிரம் ஏக்கர் நிலம் எடுப்பதற்கும் அமைச்சரவை தனது அனுமதியை வழங்கியிருப்பதனால் இதே பிரச்சணை மேலும் அதிகரித்தே தீரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த பகுதியில் இந்த சீனித் தொழிற்சாலையை அமைக்கும் பிரேரணை தனது ஆட்சிகாலத்தில் விவாதிக்கப்பட்டு, அது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டது என்று வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் முன்னர் தெரிவித்திருந்தார்.

அதே போன்று, வடக்கு மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சரான பொன். ஐங்கரநேசனும் இந்த தொழிற்சாலைக்கு தனது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் சார்ப்பாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். இந்த சீனித் தொழிற்சாலை வவுனியாவில் அமைந்தால் அந்தப் பகுதி நிலமே முற்றாக சீர்கேடு அடைந்து மக்களின் இன்னல்கள் மேலும் பெருகும் என்று அவர் எச்சரித்திருந்தார்.

காடுகளிற்கு அருகில் எந்த தொழிற்சாலையை அமைப்பது ஏற்புடையதல்ல என்று ஐ நாவின் சுற்றுச்சூழல் தீர்மானம் கூறுகிறது. அவ்வாறு அமைக்கப்படும் போது, அது வனஜீவராசிகளின் வாழ்வாதாரத்தை பாதித்து மனித-மிருக மோதலை அதிகப்படுத்தி, அந்த விலங்குகளின் எதிர்காலத்தை பாதிப்பதுமட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் சங்கிலியை கடுமையாக பாதிக்கும் என்கிறது ஐ நா அறிக்கை.

இலங்கையில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்படுவதால், அங்கு வசிக்கும் யானைகள் மனித குடியிருப்புகள் இருக்கும் பகுதிகளிற்கு வந்து அங்கு தொடர்ந்து சேதங்களை ஏற்படுத்தி வருகிறது என்பதை நாடறியும். மேலும், யானைகள் தமது பகுதிகளிற்கு வந்து விவசாய நிலங்களை பாதிக்காமல் இருப்பதற்காக தடை செய்யப்பட்ட வெடிபொருட்களை பயன்படுத்தி யானைகளும் கொல்லப்படுகின்றன. சட்டவிரோதமான மின்சார வேலிகளில் சிக்கியும் யானைகள் உயிரிழக்கின்றன.

கடந்த ஓராண்டில் மட்டும் இலங்கையில் 300க்கும் அதிகமான யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி திணைக்களத்தை மேற்கோள்காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகில் நிரப்பரப்பிற்கு ஏற்ப ஒப்பீட்டளவில் அதிகமான யானைகளை கொண்டுள்ள நாடுகளில் இலங்கை முன்னிலை வகிக்கிறது. ஆனால், தொடர்ந்து நாட்டில் யானைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதும் அவதானிக்கப்படுகிறது.

தற்போது வவுனியாவில் சீனித் தொழிற்சாலை, வனஜீவராசிகள் அமைச்சின் எதிர்ப்பையும் மீறி அமையுமாயின், அது யானைகளின் எண்ணைக்கை மேலும் குறைய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.


சிவபாலா ஆன்மீக சுற்றுலா
வட தென்னிந்திய திருத்தல யாத்திரை, கேரளா உட்பட

புறப்படும் திகதி: 12-09-2023 திரும்பும் திகதி: 06-10-2023

மும்பை: சீரடி சாய்பாபா, சனீஸ்வரன் கோவில்
காசி: விஸ்வநாதர் கோவில், விசாலாட்சி கோவில் அன்னபூரணி கோவில்
மதுரை: மீனாட்சி அம்மன் கோவில், ஆறுபடை வீடுகள், ஆதிபராசக்தி கோவில்
கும்பகோணம்: கும்பேஸ்வரர் கோவில், மாமாங்கம்,
நவக்கிரக கோவில்கள் ஒன்பது,
கோவிந்தபுரம் பாண்டுரங்கன் கோவில்
இராமேஸ்வரம்: சிவன் கோவில்
காரைக்குடி: பிள்ளையார் பட்டி கோவில்
காஞ்சிபுரம்: ஏகாம்பரேஸ்வரர் கோவில், காமாட்சி கோவில்,
வரதராஜனுப்பெருமாள் கோவில்
வேலூர்: ஶ்ரீ நாராயணி பீடம், பொற்கோவில்

திருவண்ணாமலை: அருணாசலேஸ்வரர் கோவில்
திருநெல்வேலி: குற்றாலம், தென்காசி, நெல்லையப்பர் கோவில்,
அகத்தியர் அருவி, நவ திருப்பதிகள்
கன்னியாகுமரி: பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம்,
ஆஞ்சநேயர் கோயில்
திருவனந்தபுரம்: பத்மநாபர் கோவில்
குருவாயூர்: கிருஷ்னர் கோவில்
கேரளா: சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவில்
ஆலப்புழா: படகு சவாரி
தஞ்சாவூர்: பெரிய கோவில்
சிதம்பரம்: நடராஜர் கோவில்

யாத்திரையில் பங்குகொள்ள விரும்புவோர்
09-08-2023ற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சிவா 416.854.5015 பாலா 647.450.8757

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் விமரிசையாக இடம்பெற்ற இரு நூல்களின் வெளியீட்டுவிழா

மறைந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகனின் ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் மற்றும் அவரது பாரியார் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி. புனிதவதி சண்முகனின் ஆனந்தக் கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை (14.07.2023) மாலை-03.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வில் யாழ். வேலணை மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் சி. கிருபாகரன் வாழ்த்துரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் நூல் வெளியீட்டுரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி. செல்வமனோகரன், கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் குருஷேத்திரம் நடனாலய இயக்குனர் கலாபூஷணம். செல்வி. பேரின்பநாயகி சிவகுரு ஆகியோர் நூல் நயப்புரைகளையும் ஆற்றினர்.



நூல்களினை பேராசிரியர் கி. விசாகரூபன் மற்றும் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்.







குப்பிழான் ஐ. சண்முகனின் ஓர் இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் நூலின் முதற் பிரதியினை எழுத்தாளர் ஜேசுராஜா பெற்றுக் கொண்டார். தொடர்ந்து திருமதி. புனிதவதி சண்முகனின் ஆனந்தக் கூத்து நாட்டிய நாடகத் தொகுப்பு நூலின் முதற் பிரதியினை யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்க செயலாளரான ரவீந்திரகுமார் செல்வநாயகி பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் நல்லூர் துதி, ஆனந்தக் கூத்து ஆகிய நாடக ஆற்றுகைகளும் இடம்பெற்றன. திருமதி. புனிதவதி சண்முகனின் ஏற்புரையினை தொடர்ந்து யாழ் பல்கலை விரிவுரையாளர் அஜந்தகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் அனைத்தும் இனிதே நிறைவடைந்தன.

# சமூகம் எங்கே போய்கொண்டிக்கின்றது ஆனால் இன்னும் தட்டேந்திக்கு கொண்டு நிக்கின்ற சூழல் காணப்படுகின்றது — பீடாதிபதி ரகுராம் அறிவுரை



சமூகம் எங்கே போய்கொண்டு நிக்கின்றது. ஆனால் இன்னும் தட்டேந்திக்கு கொண்டு நிக்கின்ற சூழல் காணப்படுகின்றது என யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியராக கடமையாற்று உள்ள ரகுராமுக்கான கௌரவிப்பு 14.07.2023 அன்று நாச்சிமார் ஆலயத்தில் அருகாமையில் அமைந்துள்ள தனியார் விடுதியில் மூத்த பத்திரிகையாளர் சி. பாரதி தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் கலந்துகொண்டர். இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகத்துறையில் நான் பல காலங்கள் இருந்து வந்தது பல அனுபவங்களை எடுத்துக்காட்டுகின்றது.

அதனை ஒப்பிட்டு பார்க்கும் போது எனக்கான ஒரு அடையாளத்தினை எடுத்துக்காட்டியது இந்த ஊடகம் தான். மேலும் ஊடகத்துறையில் இருந்த வேகமும் எனக்கான ஒரு அடையாளத்தினை எடுத்துக்காட்டியது.

இதற்காக கூட கீழே இருந்து மேலே படிப்படியாக உயர்வதற்கு காரணம் பத்திரிகைத்துறையும், தொலைக்காட்சி செய்திப் பிரிவாகவும் காணப்படுகின்றது.

இதில் எதற்காகவம் பின்நிற்பது இல்லை. எதனையும் என்றாலும் செய்வோம் என்ற நம்பிக்கைதான் எனக்குள் இருந்தது.



மாற்றங்களை மாற்றவேண்டிய தேவையிருக்கின்றது. அதுவும் பல்கலைக்கழக மாணவர்களுடன் கதைக்கும் போது இவ்வாறான எண்ணங்கள் எழுகின்றன.

ஊடகத்துறை என்பது எல்லோருக்கும் சாதகமான பாதைதான் இது. உங்களுடைய ஊடகத்துறையில் நேர்மையாக இருந்துகொள்ளுங்கள்.

நிறைய சொல்லவேண்டியதாக இந்த சமூகத்திற்கு இருக்கிறது. செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆனால் அது தற்போது நான் வகிக்கு பதவிநிலை இடையூறாக இருக்கிறது. இதில் இருந்து கதைத்தால் கதை வேறுமாதிரி போய்விடும் என்ற தயக்கம் தான்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைபீடம் என்பது இலங்கையின் நரம்பு மையமாக காணப்படுகின்றது. அதில் உங்களை எதிர்பார்க்கின்றது. நான் சமூகம் என்ற ஆசிரியர் கட்டுரையும் எழுதியிருக்கின்றேன். இன்று வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து வருகின்ற இளம்மாணவர்கள் அதிகம் அதனால் தான் அவர்களை நல்வழிப்படுத்துவோம் என்றதுதான் எனது முழுநோக்கமாக இருக்கிறது.

சமூகம் எங்கே போய்கொண்டு நிக்கின்றது. ஆனால் இன்னும் தட்டேந்திக்கு கொண்டு நிக்கின்றது.

யாழ்ப்பாணத்திலே படித்த சமூகம் தட்டேந்தி வீதியில் நிக்கின்றாங்களா? ஆனால் யாழ். பல்கலைக்கழகத்தில் இரவு 11 மணியளவில் தட்டேந்தி சாப்பாடு கேட்கின்றளவு மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இதற்கு நாங்கள் அவர்களுக்கு உழைக்க, அல்லது கற்க கொடுக்கின்றமோ என்பதுதான் இன்றைய நிலை. முரண்பாடான சமூகத்தில் தான் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இதற்காக கேட்கவேண்டியதை கேட்போம், உடைக்க வேண்டியதை உடைப்போம். அதன் ஊடாக மாணவர்களின் வளமான எதிர்காலம் சிறக்கும் என்றார்.

# வடமாகாண பனைஅபிவிருத்தி வாரம் மாகாணசபையின் ஏற்பாடு கைவிடவோ மாற்றியமைக்கவோ திணைக்களத்துக்கு அதிகாரமில்லை

## பொ. ஐங்கரநேசன் கண்டனம்



வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சு கூட்டுறவுத் திணைக்களத்தையும் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களையும், பனை அபிவிருத்திச்சபையையும் இணைத்து ஆண்டுதோறும் யூலை 22 தொடங்கி 28 வரையான ஒரு வார காலப்பகுதியை வடமாகாண பனைஅபிவிருத்தி வாரமாக 2015ஆம் ஆண்டிலிருந்து மிகச்சிறப்பாகக் கொண்டாடி வந்துள்ளது. ஆனால், கடந்த சில வருடங்களாகப் பனை அபிவிருத்தி வாரத்தின் நோக்கத்தைச் சிதைக்கும் வகையில் அதனைக் கொண்டாடாமல் தவிர்த்தோ அல்லது மாற்றியமைத்தோ மாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது பனைஅபிவிருத்தி வாரம் வடக்கு மாகாண அமைச்சரவையின் ஒப்புதலுடன் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். இதனைக் கைவிடவோ, மாற்றியமைக்கவோ கூட்டுறவுத் திணைக்களத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் ஆடிப்பிறப்பை முன்னிட்டு யூலை 14 தொடங்கி 16 வரையான மூன்று நாட்கள் நல்லூர் கிட்டு பூங்காவில் பனையுற்பத்திப் பொருட்களின் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்மக்களின் பண்பாட்டைப் "பனைப் பண்பாடு" என்று சொல்லும் அளவுக்கு உணவு முதல் உறையுள் வரை எமது வாழ்வியலில் பிரதான இடம் பிடித்துவந்த பனைவளம் தற்போது எமக்கு அந்நியமான ஒரு வளமாக மாறியுள்ளது. பனைப் பொருட்களின் பயன்பாடு அருகிவருவதன் காரணமாக, இப்பனை வளத்தைத் தொழில் மூலாதாரமாகப் பயன்படுத்தி வந்த மக்கள் திரளின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. அத்தோடு, போரக்காலத்தில் பெரும் அழிவைச் சந்தித்த எமது பனைவளம் போருக்குப் பின்னரும் அனுமதியின்றிப் பெருமளவுக்கு அழிக்கப்படுகிறது. இது இயற்கைச் சூழலின் சமநிலையைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டே பனை வளத்தைப் பெருக்கவும், நவீனகாலத்துக்கு ஏற்பப் பனைப் பயன்பாட்டை நுகர்வோரை ஈர்க்கும் வகையில் அபிவிருத்தி செய்யவும், இதன்மூலம் பனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் அறிஞர்களினதும் பொதுமக்களினதும் கவனத்தை ஈர்க்கும் விதமாக ஆண்டுதோறும் தாலகாவலர் அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்களின் நினைவு தினமான யூலை 22ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலப்பகுதியை வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாகக் கடைப்பிடிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை 2015ம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்கள் பனை அபிவிருத்திச்சபை தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே தனியொருவராகத் தமிழர் தாயகம் முழுவதும் பனை விதைகளை விநியோகித்து பனந்தோப்புகள் உருவாகக் காரணமாக அமைந்தார். இவர் பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர்களில் ஒருவராகவும் இருந்து பனை அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவர். இவர் ஆற்றிய பணிகளுக்காக அமரத்துவத்தின் பின்னர் இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. தாலகாவலரான அன்னாருக்கு உயரிய கௌரவம் வழங்கும் பொருட்டே வடமாகாண பனை அபிவிருத்தி வாரத்துக்குரிய காலப்பகுதியாக, அவரது நினைவு தினமான யூலை 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையான காலப்பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஒப்புதலுடன் உயரிய நோக்குடன் கொண்டாடப்பட்டு வந்த பனை அபிவிருத்தி வாரத்தைத் தனியே ஆடிப்பிறப்புக் கூழுக்குத் பனங்கட்டி விற்பதுடன் சுருக்கிக் கொள்வது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. இதன் பல்பரிமாணத்தை வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் புரிந்துகொண்டு அடுத்த ஆண்டிலிருந்தாவது உரிய காலப்பகுதியில், உரியமுறையில் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், ஆய்வரங்குகளோடு மிகச் சிறப்பாகக் கொண்டாட முன்வர வேண்டும். தவறின் தமிழரின் மாண்புமிகு அடையாளமான பனைக்குத் தவறிழைத்த வரலாற்றுப் பிழையைச் சுமக்க நேரிடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# தேர்தல் தினம் ஜூலை 27 ஆகும்

# தட்ஷா நவநீதனுக்கு

## வாக்களியுங்கள் / *VOTE*

# THADSHA NAVANEETHAN

Doug Ford இன் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், குடியிருப்புகளுக்கான செலவு வானளவாக உயர்ந்துள்ளது, மருத்துவமனையில் காத்திருப்பு நேரம் அதிகமாகி உள்ளது, மேலும் அவர் தன்னுடன் மிக நெருங்கிய தொடர்புள்ளவர்களுக்கு வெகுமதி அளிப்பதற்காக எங்கள் இயற்கைப் பிரதேசங்களை (Greenbelt) நேர்மையின்றி அழிக்கவுள்ளார்.

தட்ஷா நவநீதனுக்கு 10 வயதாக இருந்த போது, இலங்கையில் நடந்த இனப்படுகொலையில் இருந்து தப்பி, அவரது குடும்பத்தினருடன் அகதியாக Guildwood வந்தடைந்திருந்தார். தற்போது, அவரும் அவரது துணைவர் நீதன் சண்ணும் (Neethan Shan) ஸ்காபரோவில் தங்கள் இரண்டு இளம் மகன்மாரை வளர்த்து வருகின்றனர்.

தட்ஷா நவநீதன் ஸ்காபரோவில் நீண்ட காலம் வாழும் ஒரு சமூக ஆதரவாளர், செயற்பாட்டாளர் ஆவார். அவர் Cedarbrae CI இல் பாடசாலை நேரத்தின்பின் கிடைக்ககூடிய மாணவர்களுக்குரிய திட்டங்களை உருவாக்கினார், தற்போது மாகாணத் தொழிலாளர் சங்கத்தின் மனித உரிமை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுகின்றார். சிறந்த ஆரோக்கியப் பராமரிப்பு, கல்வி, குடியிருப்புவசதி மற்றும் மிகவும் கட்டுப்படியாகக்கூடிய வாழ்க்கைக்குத் தட்ஷா துணை நிற்பார் என்று நாம் நம்பலாம்.

தட்ஷா நவநீதனும் NDP யும் வாழ்க்கையை மிகவும் கட்டுப்படியானதாக மாற்றும் திட்டத்தையும், ஸ்காபரோ மக்களுக்காகப் போராடுவதையும் தமது திட்டமாகக் கொண்டுள்ளனர்.

தட்ஷா:

- மிகவும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் குடியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதன் மூலமும், வாடகைக் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டு வருவதன் மூலமும், நீங்கள் ஒரு குடியிருப்பை வாங்குவதை அல்லது வாடகைக்கு எடுப்பதை எளிதானதாகவும் கட்டுப்படியானதாகவும் மாற்றுவார்
- மருத்துவமனைக் காத்திருப்பு நேரத்தைக் குறைப்பார் அத்துடன், அதிகமான மருத்துவர்கள் மற்றும் தாதியர்களைப் பணிக்கமர்த்துவார்
- எங்கள் அரசாங்கப் பாடசாலைகளின் நிதிப் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டு வருவார், அதனால் எங்கள் பிள்ளைகள் இயலுமானளவில் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்வார்கள்.

Authorized by the CFO for the Ontario NDP



647-956-3727
3178 Eglinton Ave East
thadsha@ontariondp.ca

**thadsha.ontariondp.ca**

**ஒன்ராறியோ NDP**

ONTARIO NDP

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்)
## ஐயனார் அலங்கார உற்சவம்
## (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

கொடியேற்றம் (ஐயப்பன்)
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

ஐயனார் உற்சவ ஆரம்பம்
28-07-2023 வெள்ளி

தேர்த்திருவிழா
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிஷேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)
06-08-2023ஞாயிறு

அபிசேகம்
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

பூங்காவனம்:
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை

வைரவர் மடை
08-08-2023 செவ்வாய் மாலை

## கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.

# தமிழர்களின் தலைவிதியை இந்தியாவிடம் கையளித்துள்ள தமிழ்த் தலைமைகள்!

(13ம் பக்கத் தொடர்ச்சி)
எனவேதான் 13 வது திருத்தம் தவிற வேற விடயங்கள் கறித்து ரணில் விக்ரமசிங்க பேசியபோது சம்பந்தன் ஐயா அவர்கள் எங்களை தொடர்ந்தம் ஏமாற்றாதிர்கள் என்று கடும் கோபத்தடன் கூறியுள்ளார்.

அரச தரப்புடனான கடந்த காலப் பேச்சு வார்த்தைகளின் போது சம்பந்தன் ஐயா கத்திப் பேசினார் மேசையில் கோபமாக அறைந்தார் என நடைபெற்ற சம்பவங்களின் போது அமைதியாக இருந்த தென்னிலங்கை தலைமைகள் போல் அல்லாது அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க “பேச விரும்பினால் பேசுங்கள். இல்லையேல் நீங்கள் எழுந்து செல்லுங்கள்“ என்று பதில் அளித்தள்ளார். இது தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கத் தேடிக் கொடுத்த வெகுமதி.

அதேவேளையில் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதிஇ நான் ரணில் ராஜபக்ஷ அல்ல ரணில் விக்கிரமசிங்க என்று கேலியாக பதில் அளித்தள்ளார்.

13ஐ முழுமையாக அமல்படுத்துவது குறித்து பேச சென்ற தமிழ்க் கட்சிகளிடம் வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வைத் தீர்மானிக்குமாறு தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் வடக்குஇ கிழக்கு பிரதேசங்களில் உள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான விரிவான பிரேரணையை ஏற்கனவே முன்வைத்துள்ளதாகவும், அதனை முன்னெடுப்பதா இல்லையா என்பது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

பரிசீலிப்பதாகவும் அவர் கூறினார்.

மொத்தத்தில் இந்திய பயணத்துக்கு முன் 13ஐ முழுமையாக அமல்படுத்துவதைத் தவிற வடக்குக் கிழக்குக்கான மக்கள் நலன் நோக்கிய அணைத்து அபிவிருத்திகள் குறித்த திட்டங்களை தமிழ்க் கட்சிகளின் முன் ஜனாதிபதி வைத்துள்ளார்.

அரசியலமைப்பில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் இடம்பெற்றுள்ள நிலையிலும் நடைமுறைக்கு வராத 13வது திருத்தச் சட்டத்தை இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு 36 வருடங்களுக்குப் பிறகும் நடைமுறைப்படுத்துவதற்கு தென்னிலங்கைத் தலைவர்கள் பின்னடிக்கின்றனர் என்பதையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இன்றைய நிலைப்பாடும் வெளிப்படுத்துகின்றது.

அரசியலமைப்பில் உள்ள 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு இன்றைய நிலையிலும் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களினதும் இணக்கம் அவசியம் என்று கூறுவதும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு வேண்டும் எனக் கூறுவதெல்லாம் தமிழ் மக்கள் சிந்திய இரத்தமும் இழந்த உயிர்களும் தியாகங்களும் கிள்ளுக் கீரைக்குச் சமன் என்ற தென்னிலங்கையின் வெற்றி மமதையின் வெளிப்பாடாகவே உள்ளது.

மொத்தத்தில் 13ஐ முழுமையாக அமல்படுத்துவது கேள்விக்குறியே.

இப்பொழுது பந்து இந்தியா பக்கம் உள்ளது. ஏனெனில் தமிழர்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து முதன் முறையாக இந்தியாவிடம் கையளித்தள்ளன.

Email : vathevaraj@gmail.com
20th July 2023

- மாகாண சபைகளின் செயல்பாடுகள், தேசிய ஒருமைப்பாடு
- மற்றும் நல்லிணக்க அலுவலகம், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை.
- காணாமல் போனோர் அலுவலகம்
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு சட்டமூலங்கள் மற்றும் திட்டங்களை அவர் விளக்கினார்.
- மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர் வழங்கல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி.
- முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் மற்றும் சுற்றுலாத் துறையை மையமாகக் கொண்ட திட்டங்கள் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்முயற்சிகளை ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

13ஐ நடைமுறைப்படுத்துவது பற்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பின்வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கு விளக்கியுள்ளார்.

- அனைத்துக் கட்சித் தலைவர்களும் விரிவான அதிகாரப் பகிர்வுக்கு இணங்கினால் மட்டுமே 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும்..
- வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் பாராளுமன்றத்தின் முழுமையான ஆதரவை விவாதம் மற்றும் கருத்தொற்றுமை மூலம் பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளார்.
- பொலிஸ் அதிகாரங்களைத் தவிற பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் வழங்குவது சாத்தியமாக இருந்த போதிலும் பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்குவதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் இணக்கம் தேவைப்படும்.
- இவ்வாறான தீர்மானங்களுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பது குறித்து அரசாங்கம் விவாதிக்கவோ அல்லது அதற்குத் தயாராகவோ இல்லை என்று தெளிவுபடுத்தினார்.
- வடக்கு மற்றும் கிழக்கில் நீதி வழங்குவதில் வெளிநாட்டு நீதிபதிகளை ஈடுபடுத்த அரசாங்கம் தயக்கம் காட்டுவதாகவும்.ஆனால் தெற்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் நடைமுறையில் உள்ள முறைமைகளைப் பின்பற்றி வெளிநாட்டுகண்காணிப்பாளர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெறுவது குறித்து






**மின்சார வாகனங்கள் மற்றும் பற்றரிகளைத் தயாரிப்பது தற்போதும் எதிர்காலத்திலும் வேலைகளை உருவாக்கி வருகின்றது.**

**மேலும் அறிக ontario.ca/BuildingOurEconomy**

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

**Ontario**


# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
04 - 12 - 1951


உதிர்வு
11 - 07 - 2023

## திரு. ஸ்கந்தகுமார் சிதம்பரம்

எங்கள் OSTBA உறுப்பினர் #306 ஜூலை 11, 2023 அன்று காலமானதைத் வருத்தத்தோடு தெரிவிக்கின்றோம்.
அவரது பூதவுடல் தகனம் ஜூலை 17, 2023 அன்று மிசிசாகாவில் நடைபெற்றது.
அவரது ஆத்மா சாந்தியும் அமைதியும் அடைய நாம் அனைவரும் இறைவனை பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

Ontario Senior Tamils Benevolent Association (OSTBA)
ostba2019@gmail.com www.ostb5.ca 416-473-6880

# Epic Wildfire in Canada



Canada's recent Wildfires, that started in Shelburne County, Nova Scotia on May 27, 2023, has now spread over 250 square kilometres, becoming the largest wildfires in all of Canada. The wildfires, caused by both lightning and human activity have continued to increase as the air quality in Canada and USA continue to decline immensely.

Canada now holds sixth worst air quality in the world, slowly decreasing while USA suffers the effects of the Canadian wildfires. Apple takes this opportunity to add an "Air Quality Index" in its Weather apps; now reporting the daily air quality and health risk around location. This feature is now available to many countries with IOS 14.7.

The environmental impact of the wildfires leaves forests, homes, and ecosystems; destroyed furthermore reducing harvests for food and vast effect on the national health system. Nova Scotia takes majority impact as more than two hundred homes have been destroyed with Quebec and Ontario coming in second and third.

The release of carbon monoxide and other greenhouse gases are now causing a disturbance in the Earth's atmosphere, potentially causing long-term outcomes, caused by the wildfires. Furthermore, the lives of Canadians are at a greater health risk like never before and communities have been destroyed. How will this wildfire potentially affect the lives of US citizens? What is the Canadian government doing to address and aid this situation?

- Athisayaa Prabagar, Intern

## ஆசிரியர்
## (குறள் வெண்செந்துறை)

---

ஆசிரியர் என்போர் ஆண்டவன்
அருட்கொடை
காசினியில் கல்வியைக் கண்போல் காப்பவர்.
அன்பின் ஆசான் ஆரவாரம் இல்லார்
இன்முகம் காட்டியே இதயத்தைக் கவர்வர்
பாடத்தில் மட்டுமல்ல பழகும் விதத்திலும்
சோடை போகாச் சொல்லின் செல்வர்
அறிமுகம் இல்லா நம்மை அணைத்தே
அறியாமை இருள்நீக்கி அறிவு தந்தவர்
சிறுவரியாய் இருந்தவரை சிரிக்கும் சித்திரமாய்
சிறப்பாக வரைந்த சீரிய ஓவியர்
கரைகாணாத் தோணியாய் கடலில்
நின்றவரை
கரைசேர்த்து விட்ட கலங்கரை விளக்கம்
ஆணியாய் மூளையில் அடித்த அறிவு
ஏணியாய் எம்மை ஏற்றி வைக்கும்
பாலையாய் இருந்த பாலர் எம்மை
சோலையாய் மாற்றிச் சுகம்பெற வைத்தவர்
நாங்கள் காணும் நிறைவு வாழ்வு
நீங்கள் தந்த நிகரிலாக் கல்வியே!
உமது ஆயுளும் உழைப்பும் தொடரட்டும்
எமது தாய்மொழி தமிழைப் போலவே!

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# Canada's Increasing Unemployment Rate



Canada's unemployment rate increases by 5.4% in June 2023, even with 60,000 new job opportunities that were added in the past month. As the labour force grows rapidly, many Canadians are continuing to face unemployment as employers struggle to find enough jobs for employees.

With the increase of workers coming to Canada, the unemployment rate has increased greatly as more workers mean fewer opportunities for each and every one of them. The recovery from the COVID-19 pandemic still leaves a lingering effect as many industries are experiencing a decline in recovery leading to unemployment.

The economy adding 60,000 jobs in June is encouraging to Canadian citizens as it motions the workforce is expanding and promises an increase in long term economic activity. Construction, Professional services, and Healthcare, were the majority of industries that had new jobs added to them. After the COVID-19 Pandemic, more remote opportunities were also introduced, providing work for those who preferred to do it from home.

The Canadian governments future plans to aid businesses and individuals in the labour market include finding employees in key sectors as well as workplace inclusion for persons with disabilities. Furthermore, creating and introducing jobs that allow opportunity for all Canadians in new industries.

- Athisayaa Prabagar, Intern

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அருங்காட்சியகத்தில் 23 தமிழ் மன்னர்களுக்கு சிலை வைத்து வரலாற்றை பொறித்த வேளை விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டேன் - ஆறு. திருமுருகன் பகிரங்கம்

வரலாற்று அடையாளங்களை சரியாகப் பேணாவிட்டால் அதை புனைவதற்கு ஒரு அணி தயாராகவுள்ளது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பற்றி எமக்கிருக்கின்ற சான்றாதாரங்களாக இலக்கியங்களும் தோரண வாயில் போன்ற சான்றுகளும் இன்றும் எம் கண்முன்னே இருக்கின்றன.

யாழ்ப்பாண வைபவ மாலையில் ஆண்ட மன்னர்கள் கோயில்களை எவ்வாறு கட்டினார்கள் என்பதை ஆராய்வதற்கு உதவியாக உள்ளது.

கடைசி மன்னனான சங்கிலி மன்னன் வீழ்ந்த காலத்திலிருந்து நாம் இடப்பெயர்வுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். தமிழ் மன்னன் என்று வீழ்ந்தானோ அன்று முதல் எங்கள் இனம் சுதந்திரமின்றி விடிவின்றி ஓடிக்கொண்டிருக்கின்றது.



மொழிக்காக இனத்திற்காக பண்பாட்டிற்காக பலர் தமது உயிரையும் வாழ்வையும் அர்ப்பணித்தனர். எனவே அடையாளச் சின்னங்களை நாம் காப்பாற்றவில்லையெனின் அது துர்ப்பாக்கிய நிலைக்குரியது.

எம் மத்தியில் பல வரலாற்று அடையாளச் சின்னங்கள் காணப்பட்டாலும் அதை அறியாமல் பலருள்ளனர். யமுனா ஏரிக்கு அண்மையிலே நல்லூர் ஆலய அத்திவாரம் காணப்பட்டது. ஆனாலும் இன்று அங்கு தேவாலயம் எழுந்து நிற்கின்றது.




35 ஆண்டுகளாக சேர்த்த தொன்மைப் பொருட்களை பாதுகாக்க அருங்காட்சியகங்களை அமைக்க அரசியல் தலைவர்கள் உட்பட பலரிடம் உதவி கோரிய போதும் யாரும் முன்வரவில்லை. இறுதியில் பாரிய முயற்சியில் நாவற்குழியில் அரும்பொருட்காட்சியகம் அமைக்கப்பட்டது.

அங்கு 23 தமிழ் மன்னர்களுக்கு சிலை வைத்து வரலாறுகளைப் பொறித்தோம். அதற்காக பல முறை யார் அந்த மன்னர்கள் எனவும் எங்கிருந்து நிதி பெறப்பட்டதென விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன்.

மரபுரிமைச் சொத்து அரசியலுக்கானதல்ல இனத்திற்கானது. வரலாற்று அடையாளங்களை சரியாகப் பேணாவிட்டால் அதை புனைவதற்கு ஒரு அணி தயாராகவுள்ளது. எனவே வரலாற்று தொன்மைகளைப் பாதுகாக்க அனைத்து கல்விமான்களும் முன்வர வேண்டும் - என்றார்.



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் விநியோகம்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதாரரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழிபசி தீர்த்தல் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஞாயிற்றுக்கிழமை (16.07.2023) நாவற்குழி வடக்கு மற்றும் அராலி மேற்கு ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் அடங்கிய இப்பொதிகளைக் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அப்பகுதிகளுக்குச் சென்று வழங்கிவைத்துள்ளார்.

ஏற்கனவே பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்கள் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மணிப்பூரில் பழங்குடிப் பெண்களுக்கு கொடூர அவமதிப்பு: கண்டனப் பேரணியில் குவிந்த மக்கள்

மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட கொடூர வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து, அம்மாநிலத்தின் சூர்சந்த்பூர் வீதிகளில் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் கண்டனப் பேரணி நடத்தினர்.மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இதனைத் தொடர்ந்து கொதித்தெழுந்த பழங்குடியினர் நீதி கேட்டு போராட்டம் நடத்த வீதிகளுக்கு வந்துள்ளனர்.இந்த நிலையில், 26 விநாடிகள் ஓடும் அந்த வீடியோ ஆதாரத்தின் அடிப்படையில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்து சென்றவர்களில் முக்கிய நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஹிராதாஸ் (32) என்ற அந்த நபர் வியாழக்கிழமை தெளபால் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டதாகவும், அவர் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் முக்கிய பங்காற்றியிருக்கலாம் என்றும் மணிப்பூர் போலீஸ் தெரிவித்துள்ளது. மேலும், கைது செய்யப்பட்டவர் மீது கடத்தல், பாலியல் வன்கொடுமை, கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வீடியோவில் உள்ள பிற நபர்களைப் பிடிக்க 12 குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மணிப்பூர் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கொடூரமான சம்பவம் குறித்த வீடியோ வெளியான நிலையில், மனிதாபிமானமற்ற முறையில், அவமரியாதை செய்யப்பட்ட இரண்டு பெண்களுக்காக எனது இதயம் கலங்குகிறது'' என்று தெரிவித்துள்ள மணிப்பூர் முதல்வர் என்.பிரேன் சிங், ‘‘குற்றவாளிகளுக்கு எதிராக மரண தண்டனை கிடைக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதி கூறுகிறேன். இதுபோன்ற கொடூரமான செயல்களுக்கு நமது சமூகத்தில் இடம் இல்லை என்பதை




புரிந்து கொள்ளவேண்டும்“ என்றும் தெரிவித்துள்ளார். பிரதமர் வேதனை: இந்த துயர்மிகு சம்பவம் குறித்து பிரதமர் மோடி தனது வேதனையையும் கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டுத் தொடர் தொடங்கும் முன்பாக பேசிய பிரதமர் மோடி, ‘‘மணிப்பூரில் நடந்துள்ள சம்பவம் நாகரிக சமூகத்துக்கான அவமானம். இதற்காக நாடு வெட்கப்படுகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க கடுமையான சட்டங்களை இயற்றும்படி நான் அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.இந்தச் சம்பவம் ராஜஸ்தான், சத்தீஸ்கர், மணிப்பூர் எங்கு வேண்டுமானாலும் நடந்திருக்கலாம், குற்றவாளிகள் நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் தப்பக் கூடாது. நான் நாட்டுக்கு உறுதியளிக்கிறேன். சட்டம் அதன் முழு பலத்துடன் தனது கடமையைச் செய்யும். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது'' என்று பிரதமர் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றம் காட்டம்: தேசிய அளவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள அந்த வீடியோ, உச்ச நீதிமன்றத்தையும் கிளர்ந்தெழச்செய்துள்ளது. இதுகுறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, ‘‘விரோதத்தை தீர்த்துக்கொள்ள பெண்களை வன்முறையின் கருவியாக பயன்படுத்தப்படுவது அரசியலமைப்பு ஜனநாயகத்தால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத மனித உரிமை மீறல். அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நாங்கள் எடுப்போம்“ என்று சம்பவத்துக்கான தங்களின் கடுமையான கண்டனங்களை பதிவு செய்துள்ளது.இந்தப் பின்னணியில், பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் அளித்துள்ள பேட்டியில், ‘‘கொலைவெறியுடன் எங்கள் கிராமத்துக்குள் ஒரு கும்பல் புகுந்தது. அந்த கும்பலில் போலீசாரும் இருந்தார்கள். அவர்கள்தான் எங்களை அந்த கும்பலிடம் பிடித்துக் கொடுத்தார்கள்'' என்று தெரிவித்துள்ளார்.

மணிப்பூரின் கங்போக்பி மாவட்டத்தில் உள்ள பி பைனோம் என்ற கிராமத்தில் வாழும் குகிஜோமி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அப்பெண்கள். இவர்களில் ஒருவருக்கு 20+ வயதும், மற்றவருக்கு 40+ வயதும் ஆகிறது. மைதேயி சமூகத்தவர்களை பழங்குடி பட்டியல் சமூகத்தவர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை எதிர்த்து குகி பழங்குடி மக்கள் சார்பில் மே 3ம் தேதி மாபெரும் பேரணி நடைபெற்றதை அடுத்து, மே 4ம் தேதி பி பைனோம் கிராமத்துக்குள் நுழைந்த மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், அங்கு தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதில், பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களில் ஒருவரின் தந்தையும் சகோதரரும் அந்த கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்கள். இதையடுத்து, அந்த கும்பல் இரண்டு பெண்களையும் நிர்வாணப்படுத்தி வயல்வெளிக்கு இழுத்துச் சென்று அங்கு, பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில், இந்தக் கொடூர வன்முறைச் சம்பவத்தைக் கண்டித்து, அம்மாநிலத்தின் சூர்சந்த்பூர் வீதிகளில் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் கண்டனப் பேரணி நடத்தினர். வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் நடந்து வரும் மைதேயி குகி இனக் கலவரத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் சூர்சந்த்பூர் ஒன்றாகும். காங்கிரஸ் முக்கியத் தலைவரும், வயநாடு முன்னாள் எம்பியுமான ராகுல் காந்தி கடந்த மாதம் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்கு 2 நாள் பயணமாக சென்றார். இந்த சூரசந்த்பூருக்கு செல்லும் வழியில்தான் அவரது வாகனம் போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவோம்: ‘தமிழ்நாடு நாள்’ வாழ்த்துச் செய்தியில் முதல்வர் உறுதி



தமிழ்நாடு நாள் விழாவையொட்டி முதல்வர் ஸ்டாலின் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க பாடுபட உறுதியேற்போம் என தெரிவித்துள்ளார்.ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 18ம் தேதி ‘தமிழ்நாடு நாள்’ விழாவாக நடத்தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி, ‘தமிழ்நாடு நாள்’ விழா,மாநிலம் முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி,முதல்வர் ஸ்டாலின் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்தியில், ‘‘தமிழ்நாடு சொல்அல்ல. அது தமிழரின் உயிர். 1967ல்இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு மாநிலக் கட்சியாக, திமுக ஆட்சியைப் பிடித்தது. ஜூலை 18ல்‘தமிழ்நாடு’ என பெயர் சூட்டப்பட்டது. மறைமலை அடிகள், பெரியார், சோமசுந்தர பாரதியார், சங்கரலிங்கனார், மபொசி என இந்தப் போராட்டத்தின் வேர் மிகவும் ஆழமானது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நாளில் தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க பாடுபட உறுதியேற்போம்'' என்று கூறியுள்ளார்.இதேபோல், திக தலைவர் கி.வீரமணி, விசிக தலைவர் திருமாவளவன், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் ஆகியோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு நாள் விழா மற்றும் கருத்தரங்கம் சென்னை மாநிலக் கல்லூரியில்நேற்று நடைபெற்றது. விழாவுக்கு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமை வகித்தார். சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

விழாவையொட்டி, கல்லூரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘தமிழ்நாடு நாள்’ புகைப்படக்கண்காட்சியைப் பார்வையிட்ட அமைச்சர்கள், பின்னர், கல்லூரி அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தமிழன்னை உருவப்படத்துக்கு மலர்தூவி மரியாதை செய்தனர்.தொடர்ந்து, நிகழ்வில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்களுக்கு ‘இந்துதமிழ் திசை’ வெளியிட்ட ‘மாபெரும்தமிழ் கனவு’ என்ற புத்தகத்தை, தமிழ் வளர்ச்சித் துறை செயலர் செல்வராஜ், நினைவு பரிசாக வழங்கினார். பின்னர், ‘தமிழ்நாடு நாள்’ குறித்த சிறப்பு மலர், மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து, கல்வித்துறையில் பயன்படும் வகையில் புதியமென்பொருளை உருவாக்கிய திருச்சியைச் சேர்ந்த ஏ.ஆரோக்கியதாஸ் என்பவரைப் பாராட்டி அவருக்கு, ‘முதல்வர் கணினித் தமிழ் விருது’, ரூ.2 லட்சத்துக்கான காசோலை மற்றும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கு, உயர் கல்வியின்போது மாதம்தோறும் ரூ.1000 ஊக்கத்தொகை ‘புதுமைப்பெண்’ திட்டத்தில் வழங்கப்படும் என முதல்வர் அறிவித்திருந்தார். அதன்படி நடப்பாண்டில் மட்டும் 2 லட்சத்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் பயன் பெற்றுள்ளனர். அந்தவகையில் தற்போது கல்லூரிகளில் மாணவிகளின் சேர்க்கையும் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.இந்நிகழ்வில் செய்தித்துறை இயக்குநர் த.மோகன், தமிழ் வளர்ச்சித் துறை செயலர் இரா.செல்வராஜ், இயக்குநர் ந.அருள், மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், மாநிலக் கல்லூரி முதல்வர் இரா.ராமன், திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், தமிழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மா.ராஜேந்திரன், எழுத்தாளர் ஆழி செந்தில்நாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பாஜக உடனான கூட்டணி நிலவரம்: ஓபிஎஸ் கருத்து

பாஜகவால் முறித்துக்கொள்ளும் வரையில் அவர்கள் கூட்டணியில் தொடருவோம் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார். சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையத்துக்கு வந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்



செல்வம் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "மணிப்பூர் கலவரத்தை நிறுத்தி, நிரந்தர அமைதி ஏற்படுத்த மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். கொலை போன்ற குற்றச்செயல்களை தடுப்பது மாநிலத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் என இன்னும் என்னைத்தான் தேர்தல் ஆணையம் கூறுகிறது. இது பற்றி உங்களுக்கு (பத்திரிகையாளர்கள்) புரியும் எனக் கருதுகிறேன்.

ஆனால், புரியவேண்டியவர்களுக்கு புரியவில்லை. பாஜகவால் முறித்துக்கொள்ளும் வரையிலும் நாங்கள், அவர்கள் கூட்டணியில் தொடர்வோம். திமுக அமைச்சர்கள் மீதான வழக்குகளை எதிர்கொண்டு வெற்றி அடைய வேண்டியது அவர்களின் பொறுப்பு. ஓ.பி.ரவீந்திரநாத் எம்பி தகுதி நீக்கம் குறித்து நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும்" என்று கூறினார்.

# இலங்கைக்கான கனடா தூதரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கிறார் இனவாதி சரத் வீரசேகர

- நடராசா லோகதயாளன்







இலங்கைக்கான கனடா தூதுர் எரிக் வால்ஷ்' நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும. என்று இனவாத கருத்துக்களை தொடர்ந்து கக்கிவரும் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

வட மாகாணத்திற்கு இந்த வாரம் விஜயம் செய்த கனேடிய தூதர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட பலரை சந்தித்து சமகால அரசியல், சமூக செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

கனேடாவில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஒன்றான மார்க்கம் பகுதி வாழ் தமிழர்களின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதிய மார்பக சிகிச்சை சிறப்பு பிரிவை அவர் தொடங்கிவைத்தார்.

முன்னதாக அவர் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞாம் சிறீ-தரனை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார். அதன் போது ஈழத்தமிழர்களின் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரன் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்து கொண்டதாக தனது டிவிட்டர் பக்கத்தில் படங்களுடன் அவர் பதிவு ஒன்றை செய்திருந்தார்.

இதன் போது இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கனேடிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுசேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநோச்சி மாவட்டக்கிளையினால் நடாத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகல் நினைவுகூர்ந்திருந்தார்.

தனது டிவிட்டர் பக்கத்தில் இது தொடர்பில் மேலும் விரிவாக பதிவுகளைச் செய்திருந்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், "ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்டுதல், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றின் காலத் தேவை 13வது திருத்தச் சட்டத்துக்கும் சமஸ்டி முறைமைக்கும் இடையி-லான நடைமுறை வேறுபாடுகள், 13வது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா அமெரிக்கா, பெல்ஜியம் போன்றா நாடுகளில் பின்பற்றப்படும் சமஸ்டி முறை-மையை அடிப்படையாகக் கொண்டு அதிலும் குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஸ்டியை நடைமுறைபடுத்த வேண்டியுள்ள யதார்த்த புறநிலைகள், குறிப்பிடத்தக்கது".

இந்த கலந்துரையாடலின் போது, போருக்கு பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009க்கு பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விவரண அறிக்கை ஒன்றையும் சிறீதரன் கனேடிய உயர்ஸ்தானிகள் எரிக் வால்ஷிடம் கையளித்திருந்தார்.

இதேவேளை தனது வட மாகாணத்திற்கான பயணம் குறித்து கனேடிய தூதரும் தனது டிவிட்டர் பக்கத்தில் படங்களுடன் செய்திகளை பகிர்ந்துள்ளார். அதிலும் குறிப்பாக பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்துறை மக்களிடமிருந்து கேட்டறிந்ததாகவும் பதிவு செய்திருந்தார்.

இவற்றின் பின்புலத்திலேயே சரத் வீரசேகரவின் இனவாத கருத்துக்கள் வெளியாகியுள்ளன. தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள், அபிலாஷைகள் ஆகியவை தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் கரிசனை செலுத்திவரும் வேளையில், இப்படியான இனவாதிகளின் கருத்துக்கள் மேற்குலக நாடுகள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளை அதிருப்தியடைச் செய்துள்ளன.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி அவர் தொடர்ச்சியாக சர்ச்சைக்குரிய பல கருத்துக்களை கூறி வருகிறார்.

இலங்கையில் தற்போது மிகவும் மோசமான இனவாத கருத்துக்களை அதிகம் பரப்பிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அவப்பெயருக்கு அவர் ஆளாகி வருகிறார். அண்மையில் தமிழ் நீதிபதி தொடர்பில் மிகவும் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை அவர் வெளியிட்டிருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி சட்டவிரோதமாக குருந்தூர் மலையில் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரை தொடர்பிலான விசாரணை ஒன்றை நீதவான் முன்னெடுத்துக்கொண்டிருந்த வேளையில் தானும் அந்த விடயத்தில் கருத்து கூற வேண்டும் என்று அழைக்கப்படாமல் அங்கு சென்றிருந்த சரத் வீரசேகர கோரியதை நீதவான் மறுத்துவிட்டார். நீதிமன்ற விசாரணையில் அரசியல்வாதிகளின் கருத்துக்களிற்கு இடமில்லை, அதற்கு இடமளிக்க முடியாது என்று நீதவான் மறுத்த நிலையில் அவரை பற்றிய இனவாத கருத்துக்களை நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சரத் வீரசேகர கூறியிருந்தார்.

"அந்த தமிழ் நீதிபதி இது சிங்கள பௌத்த நாடு என்பதை உணர வேண்டும்" என்று மோசமான கருத்தை தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த கருத்திற்கு வடக்கு கிழக்கு சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்ட நிலையில் அதே நாடாளுமன்ற உறுப்பினர் தற்போது கனேடியத் தூதுவர் தொடர்பிலும் கருத்துரைத்துள்ளார்.

கனேடிய தமிழ் வமசாவளி நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரிக்கு இலங்கை அரசு அண்மையில் விசா மறுத்தது. கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தமிழ் இன அழிப்பு மாதம் தமது நாட்டின் அனுசரிக்கப்படுவதை ஆதரித்திருந்தார்.

கனடாவிற்கு எதிராக தொடர்ந்து மோசமான கருத்துக்களை வெளியிட்டுவரும் இனவாதிகளை இதுவரை நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அவர் உறுப்பினராக இருக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவோ கண்டிக்கவில்லை.

ஓம் சக்தி

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

கனடாவின் தாய் மன்றம் — வழிபாட்டு மன்றம் (எண் 3181)

80(E) Nashdene Rd. Unit #99, Scarborough, Tel: 647.436.9647

ஆடிப்பூர பெருவிழா



21-07-2023 வெள்ளிக்கிழமை அன்று ஆடிப்பூர பூஜை காலை 9 மணியளவில் நடைபெறும்.

23-07-2023 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆடிப்பூர ருதுசாந்தி சிறப்பு பூஜை காலை 8:00 மணி தொடக்கம் நடைபெறும்.

அத்துடன் ஆடிச்செவ்வாய் மாலை 5:30 மணிக்கு சிறப்பு பூஜை நடைபெறும்.

கஞ்சி கலசம் எடுக்கும் சக்திகள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். அத்துடன் அன்னைக்கு வேப்பிலை, தேசிக்காய், பழங்கள், பூப் போன்றவையும் அன்பளிக்கலாம்.



அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெற்றுய்யமாறு வேண்டுகின்றோம்.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch )

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரம்மோத்ஸவ விஞ்ஞாபனம்
## 16.07.2023 ஞாயிறு முதல் 30.07.2023 ஞாயிறு வரை

### விசேட உற்சவ நேரமாற்ற விபரம்

**நர்த்தன கணபதி உற்சவம் – நாட்டிய அஞ்சலி**
**22.07.2023 சனிக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம்

**கப்பல் திருவிழா**
**23.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**சங்கீத கணபதி உற்சவம் – சங்கீத ஆராதனை**
**24.07.2023 திங்கட்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம்

**மஞ்சத் திருவிழா**
**25.07.2023 செவ்வாய்க்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**நம்பியாண்டார் நம்பி உற்சவம் – திருமுறை சமர்ப்பணம்**
**26.07.2023 புதன்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, நாடகம், வீதிவலம்

**மாம்பழத் திருவிழா – நாடகம்**
**27.07.2023 வியாழக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, நாடகம், வீதிவலம்

**சப்பறத் திருவிழா**
**28.07.2023 வெள்ளிக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**தேர்த் திருவிழா**
**29.07.2023 சனிக்கிழமை**
காலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, 9:00 மணிக்கு தேர்


**தீர்த்த உற்சவம்**
**30.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, தீர்த்த உற்சவம்

**கொடியிறக்கம் – திருவூஞ்சல்**
**30.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 6:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, திருவூஞ்சல்











திருவிழாக் காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள், மற்றும் 29.07.2023 தேர்த்திருவிழாவின்போது காவடி, கற்பூரச்சட்டி எடுக்க விரும்பும் அடியார்கள், வெளிவீதியில் தண்ணீர் பந்தல் அமைக்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

LIVE ON
www.analaiexpress.ca

**மஹோற்சவப் பெருவிழா நேரடி ஒளிபரப்பு**
**தினமும் மாலை 7:00 மணிமுதல் 9:30 மணிவரை**
**தேர்த்திருவிழா காலை 6:30 மணிமுதல் 2:00 மணிவரை, தீர்த்தத் திருவிழா காலை 6:30 மணிமுதல் 2:00 மணிவரை www.analaiexpress.ca இணையத்தளங்களில் காணலாம்.**

சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா வாகனத்தரிப்பிடம்




P1: 3200 Kennedy Rd. (School)
P2: 2000 McNicoll Ave. (Community Center)

அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம்
சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு. ஆலயஸ்தாபகர். முதல்வர்
அறங்காவலர் சபை.





Tel: 416-291-8500 www.facebook.com/vinaayagar

கனடிய செய்திகள் Canadian News

# "அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் மொழிபெயர்ப்புகள் தான் உலகெங்கிலும் திருக்குறளை உண்மையாகப் போற்றவும் பயனடையவும் உதவின"

**கனடாவின் Prince Edward தீவில் உள்ள Bedeque என்னும் நகரத்தில் கடந்த சனிக்கிழமை "அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் திருவருட்சிலையை திறந்து வைத்த வைபவத்தில் உரையாற்றிய சிவன் இளங்கோ தெரிவிப்பு. மேற்படி சிலை திறப்பு விழாவிற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களும் வாழத்து தெரிவிப்பு.**







"அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் மொழிபெயர்ப்புகள் தான் உலகெங்கிலும் திருக்குறளை உண்மையாகப் போற்றவும் பயனடையவும் உதவின என்றால் அது மிகையாகாது. அத்துடன் அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்கள் தமிழ் மொழியையும், அதன் செழுமையையும் தனது மொழிபெயர்ப்பின் மூலம் உலகுக்குக் கொண்டு வந்த முதல் அறிஞர் என்றும் குறிப்பிடலாம். அதற்காக நாம் எப்போதும் அவருக்கு நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

சிறந்த தமிழறிஞரான அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய அளவுகடந்த பங்களிப்பைப் போற்றும் வகையில் அவரது நினைவுச்சின்னத்தை உத்தியோகபூர்வமாகத் திறப்பதற்கு இந்த வரலாற்று நாளில் இங்கு வந்திருப்பது எமக்கு முழுமையான கௌரவத்தையும் மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் தருகின்றது என்றும் நாம் நம்புகின்றோம்".

இவ்வாறு, கனடாவின் Prince Edward தீவில் உள்ள Bedeque என்னும் நகரத்தில் கடந்த சனிக்கிழமை "அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் திருவருட்சிலையை திறந்து வைத்த வைபவத்தில் உரையாற்றிய சிவன் இளங்கோ தெரிவித்தார்.

மேற்படி சிலை திறப்பு விழாவிற்கு ரொறன்ரோ மாநகரிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் இங்கிருந்து பயணித்து அங்கு கலந்து கொண்டனர். ஒரு வாரப்பயணமாக அங்கு சென்றிருந்த எம்மவர்கள் எமது மொழிக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு மேல்நாட்டு அறிஞருக்கு சிலை நிறுவிய பெருமையோடு ரொறன்ரோ திரும்பியுள்ளனர்.

மேற்படி வைபவத்தில் அங்கு உரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் தலைவரும் மேற்படி சிலை அமைப்புக் குழுவின் தலைவருமான அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு தெரிவித்தார்.








வள்ளுவன் தந்த திருக்குறளை உலகுக்கு ஆங்கிலத்தில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்திய G.U. போப் அவர்களுக்கு நன்றி மறவாத கனேடியத் தமிழர்கள் அவர் பிறந்த இடமான Prince Edward தீவில் உள்ள டீநுனுநுஞரநு என்னும் இடத்திலே இன்று சனிக்கிழமை காலை அறிஞரின் திருவருட்சிலையை திறந்து வைக்கிறார்கள். இதற்காக வுழசழவெழ உட்பட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தமிழர்கள் நூற்றுக்கணக்கில் வந்து குவிந்திருக்கிறார்கள்.

இன்றைய வரலாற்று நிகழ்விற்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இன்று எங்களுடன் இணைந்திருக்க நேரம் ஒதுக்கியதற்கு தங்கள் அனைவருக்கும் நன்றி.

உலகளவில் 90 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் தமிழ் மொழி உலகின் செம்மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மிகவும் பழமையானது மற்றும் சொல்லின் சிறந்த மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழி தமிழ் இன அடையாளத்தின் ஒருங்கிணைந்த ஒரு முக்கியமானதாகும், மேலும் இது எங்கள் தாய் மொழி என்று தெரிவிப்பதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம்.

ஏறக்குறைய 2,000 ஆண்டுகள் பழமையான தமிழ்ச் செம்மொழி உரையான திருக்குறள் தனிமனிதனின் ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளைப் பற்றி பேசுகிறது மற்றும் அதில் உள்ள ஞானம் மிகுந்த வார்த்தைகள் அது எழுதப்பட்டபோது இருந்ததைப் போலவே இன்றும் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாகவே விளங்குகின்றது.

குறளில் அனைத்துமே அடங்கியிருக்கிறது, இல்லாதது எதுவுமே இல்லை என்று சொல்வதுதான் மிகவும் பொருத்தமானது. இதுவரையும் திருக்குறள் 40 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இது உலகளாவிய நெறிமுறை புத்தகமாக பரவலாக கருதப்படுகிறது. லியோ டால்ஸ்டாய் மற்றும் மகாத்மா காந்தி உட்பட பல முக்கிய பிரமுகர்கள் திருக்குறளை விரும்பிப் படித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் மொழிபெயர்ப்புகள் தான் திருக்குறளை உண்மையாகப் போற்றவும் பயனடையவும் உலகெங்கிலும் உதவியது. ஜி.யு.போப் தமிழ் மொழியை, அதன் செழுமையைத் தனது மொழிபெயர்ப்பின் மூலம் உலகுக்குக் கொண்டு வந்த முதல் அறிஞர், அதற்காக நாம் எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்கள், நாலடியார் மற்றும் திருவாசகம் போன்ற பிற சின்னமான தமிழர்களின் நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார், இது இந்துக் கடவுளரின் மும்மூர்த்திகளில் ஒருவரான சிவனுக்காக எழுதப்பெற்ற ஒரு பாடல் ஆகும். அவர் பல புத்தகங்களை, சில தமிழிலும் மற்றும் சில ஆங்கிலத்திலும். எழுதியுள்ளார்.

கனடாவில் தமிழர்களின் குரலாகச் செயல்படும் ஒரு அமைப்பாக கனடிய தமிழர் பேரவை, நமது மொழியான தமிழுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பைப் போற்றும் வகையில், அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்கும் இந்த வரலாற்றுத் திட்டத்தை மேற்கொள்வது நமது கடமையாகும் எனக் கருதுகின்றது.

எங்களைப் பொறுத்தமட்டில், தமிழ் மொழிக்கு உரிய பங்களிப்பைச் செய்த ஒரு தனி மனதரான இவரை அங்கீகரிப்பதுடன் நன்றியுணர்வை வெளிப்படுத்தவும் இது ஒரு வாய்ப்பாகும் என்றே கருதுகின்றோம்.

கனேடியத் தமிழர் பேரவையானது, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை ஆரம்பித்து ஜி.யு. வட அமெரிக்காவில் ஒரு தமிழ் அறிஞருக்காக நிறுவிய முதல் நினைவுச்சின்னமாகும். நினைவுச்சின்னம் தவிர, பெடெக் வரலாற்று அருங்காட்சியகத்தில் ஒரு கண்காட்சி மற்றும் அருட்தந்தை. ஜி.யு. போப் அவர்களின் சிலையையும் நாங்கள் காட்சிப்படுத்துகிறோம்" என்று தனது உரையில் தெரிவித்தார்.

இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.



மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

வாய்மையே வெல்லும்

நாள்: 13–7–2023

திருக்குறளை உலகறியச் செய்த பெருமைக்கு உரியவர் திரு. ஜி.யு. போப் அவர்கள், அவருக்கு அவரது பிறந்தகமான கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவில் உள்ள பெடெக் நகரத்தில் திருஉருவச்சிலை அமைக்கப்படுவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. ஜி. யு. போப் அவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி அளப்பரியது. அவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஆவார். அவரது மொழிபெயர்ப்பு உன்னதமான மொழிபெயர்ப்பாக இன்றும் போற்றப்படுகின்றது. அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பன்னிரெண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது அரிய இப்பணி, தமிழ் மொழியை தமிழர் அல்லாதவர்களிடமும் கொண்டு சேர்த்தது.

போப் ஐயர் என்று அன்போடு அழைக்கப்பட்ட இவர், ஏறத்தாழ 40 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றினார். அதன் பின்பும், இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, அப்போது முதலமைச்சராக இருந்த பேறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு, திரு. ஜி.யு. போப் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் அவரது முழு உருவச்சிலையை நிறுவி அவரது புகழுக்கு பெருமை சேர்த்தது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வரும் எங்கள் திராவிட மாடல் அரசு, தமிழ் இலக்கிய நூல்களை, பல்வேறு வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டு தோறும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஜி.யு.போப் அவர்களின் பெயரில் விருது வழங்கியும் சிறப்பித்து வருகிறது.

அத்தகைய பெருமைக்குரிய திரு. ஜி.யு. போப் அவர்களை சிறப்பித்து கனடா வாழ் தமிழ் மக்கள், அவரது பிறந்தகத்திலேயே உருவச்சிலையை அமைக்க இருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது. இம்முயற்சியை முன்னெடுக்கின்ற கனடியத் தமிழர் பேரவைக்கும், கனடா வாழ் தமிழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாணவியை கொடூரமாக தாக்கிய மண்கும்பான் பாடசாலை அதிபருக்கு உளவள சிகிச்சை தேவை – ஊர்காவற்துறை நீதிபதி

நிதானமிழந்து 9 வயது மாணவியை தாறுமாறாக தாக்கிவிட்டேன் என, தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட மண்கும்பான் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

9 வயது மாணவியை தாறுமாறாக அடித்து துன்புறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எஸ் லோன் பைப்பினால் மாணவியை 20 தடவைகள் தாக்கியதாக அதிபருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலனுக்காக மேலதிக வகுப்பு நடத்தியாகவும், அப்போது ஒரே விடயத்தை 3 தடவைக் சொல்லியும் தவறிழைத்ததால், நிதானமிழந்து மாணவியை தாக்கியதாக நீதிமன்றத்தில் அதிபர் தெரிவித்துள்ளார்.

நிதானமிழப்பதும் ஒரு வகை நோயே, இதற்கு உளவள சிகிச்சை பெற வேண்டுமென அறிவுறுத்திய நீதவான், 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் அதிபரை விடுவித்து, வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இதேவேளை, இந்த பாடசாலையில் கல்வி கற்கும் ஏனைய 9 மாணவிகளுக்கும் அதிபர் அடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் யாழ். பொதுசன நூலகத்திற்கு விஜயம்!



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை (18) யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார்.

இதன்போது நூலகத்தில் யாழ். மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸை வரவேற்று கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பில் யாழ். பொதுசன நூலக நூலகர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்த விஜயத்தின் போது கனடிய உயர் ஸ்தானிகர் நூலகத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து ஒவ்வொன்றையையும் உன்னிப்பாகப் பார்த்து அவை பற்றி மாநகர ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்டதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.



# அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தா பிரஸ்தாபித்ததை அடுத்தே மண்டைதீவு காணி அளவீட்டுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டது – ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரஸ்தாபித்ததை அடுத்தே மண்டைதீவு கடற்படையினருக்கு சுவீகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காணி அளவீட்டுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டதே தவிர அரசியல் பிரதிநிதிகளின் அறிக்கைக்காக இடைநிறுத்தப்படவில்லை என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் செவ்வாய்கிழமை (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வேலணை பிரதேச செயலகத்தக்கு உட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம பிரிவில் கடற்படையினர் முகாம் அமைந்துள்ள தனியார் காணி அளவீட்டுப்பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் அதற்கு பொதுமக்களும் அரசியல் பிரதிநிதிகளும் அதை எதிர்த்து இடைநிறுத்துவதற்கு போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சில அரசியல் பிரதிநிதிகள் உடகங்களுக்கு அறிக்கை விடுத்திருந்தனர்.

ஆனாலும் இவ்விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அமைச்சரவையில் பிரஸ்தாபித்து மக்களின் நிலங்கள் மக்களுக்கே உரியவை அதனடிப்படையில் இந்த காணியும் அவர்களுக்கானதென சுட்டிக்காட்டியிருந்ததுடன் அக்காணிகளை அபகரிப்பதோ, சுவீகரிப்பதோ நீதிக்கு புறம்பான விடயம்.

அத்துடன் அவ்விடயம் தொடர்பாக அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் என்னிடம் ஏற்கனவே, அதனை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். அதனையடுத்தே காணி அளவீட்டுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கோப்பாய் தேசோதய சபையினால் விளையாட்டு சீருடைகள், விளையாட்டு உபகரணம் வழங்கல்




கோப்பாய் தேசோதய சபையினால் உரும்பிராய் கிழக்கு ஜெயபுரம் அண்ணா ஸ்ரார் உதைபந்தாட்ட அணிக்கு தேவையான விளையாட்டு சீருடைகள், மற்றும் விளையாட்டு உபகரணம் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் தேசோதய சபைத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கோப்பாய் தேசோதய சபை உறுப்பினர்களும் சமூக செயற்பாட்டாளருமான தே. நமணதாசன், மற்றும் சமாதான நீதவான் சா.தவசங்கரி ஆகியோர் கலந்து கொண்டு சீருடைகள் மற்றும் உபகரணங்களை வழங்கிவைத்தனர்.

இதற்கான நிதியினை கொலண்ட் நாட்டில் வசிக்கும் மு. லலிதா நன்கொடையாக வழங்கிவைத்திருந்தார்.

இதேவேளை உரும்பிராய் கிழக்கில் பாரிசவாத நோயால் பாதிக்க பட்ட முதியவர் ஒருவருக்கு நான்கு சக்க நட்சக்கர வண்டில் ஒன்றும் அக்குடும்பத்தினரின் வேண்டுதலின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ள விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறை

## இந்திய விவசாய ஆர்வலர்திருமதி மாரிமுத்து ரேவதி அம்மையார் செயன்முறையுடன் கூடிய பயிற்சியினை நடாத்தவுள்ளார்

உயிர்த்தெழும் பூமி வேளாண்மை என்னும் தொனிப்பொருளில் யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் புதன்கிழமை (20) மெற்றும் நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

வடமாகாண பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அஞ்சனா தேவி ஸ்ரீ ரங்கன் தலைமையில் ஆளவாழ்தல் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் இருநாள் தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இத்தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறைக்கு வளவாளராக இந்திய விவசாய ஆர்வலரும், 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நேரடியாக விவசாயம் தொடர்பான களவிஜயம் மேற்கொண்டதுடன் பல சர்வதேச பல்கலைகழகங்களில் சூழல்நேயமான நிலைபேறான விவசாய செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொண்டு வருபவருமான திருமதி. மாரிமுத்து ரேவதி அம்மையார் அவர்கள் கலந்து செயன்முறையுடன் கூடிய பயிற்சியினை நடாத்தவுள்ளார்.

குறித்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. சுகந்தினி செந்தில்குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்பயிற்சி பட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப்பயன்பாடு, பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப்பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் என பலகோணங்களில் புத்துயிர்ப்பூட்டும் விவசாயக் கருத்துக்களை விவசாய ஆர்வலர்களுக்கு வழங்கவுள்ளார். இத்தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறையில் விவசாயிகள் மற்றும் விவசாய ஆர்வலர்களை கலந்து பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*



Had he intended to say that the power could be excluded by contract, he would surely not have failed to refer to de Dohsev. Reg1and to Dunn v. Macdonald 2, both cases in which the contrary opinion had been strongly expressed.

In Gould v. Stuart itself, Lord Hobhouse, in delivering the judgment of the Privy Council observed that " servants of the Crown hold their offices during pleasure ; not by virtue of any special prerogative of the Crown, but because such are the terms of their engagement, as is well understood throughout the public service ", But the case itself concerned an office the tenure of which was regulated by the Civil Service Act of New South Wales, the provisions of which were inconsistent with the power to dismiss at pleasure. The power of dismissal being thus excluded by statute, it was not material to decide the precise base on which the power rested. Moreover, it is not easy to understand why an arbitrary power of dismissal is to be implied in a contract of employment except upon a supposition that such a power exists aliunde. And if such a power does exist, it is only the prerogative to which the power is fairly referable.

With much respect, therefore, I doubt whether the dictum of Lord Hobhouse can now be regarded as authority for the proposition that the terms of the engagement of servants of the Crown impose on the Crown contractual obligations, the breach of which may properly be the subject of dispute in Petitions of Right or (in Ceylon) in suits against the Attorney-General.

I do not consider it useful to refer to other cases cited during the argument, many of which were concerned with alleged wrongful dismissals of servants of the Crown. It suffices for me that we have not been referred to any decision holding, despite objection directly taken on behalf of the Crown, that a Petition of Right or civil suit lies against the Crown to enforce the performance of the terms of the engagement of a servant of the Crown, not being terms laid down by statute.

The Ceylon decision in Fraser 's case is thus quite exceptional. The decisions of the Privy Council in the appeals from India lay down clearly the principle that the provisions of the covenants and rules governing the public service are not enforceable by action. This principle must apply to all such provisions, including those which prescribe rates of pay and increments, and it denies to this plaintiff a right to sue for the increment alleged to be due to him under the Minutes. There remains one possibility to which I must advert, namely whether the provisions of the Ceylon Constitution have affected the operation in Ceylon of the principle formerly applicable. (i (1897) 68 L. J. Q. B. 422. * (1897) 66 L. J. Q. B. 423.)

Section 57 of the Order in Council declares that (with some exceptions not here relevant) every person holding office under the Crown holds the office during Her Majesty's pleasure. Sections 58 and 60 establish a Public Service Commission, and vest in the Commission "the appointment, transfer, dismissal and disciplinary control of 'public officers", i.e., of persons holding a paid office......... as a servant of the Crown in respect of the Government of Ceylon (vide s. 3, definition). Section 61authorises the Commission to delegate any of its powers, subject to the right of appeal to the Commission itself. Thus, the powers of appointment and dismissal, which were those of the Sovereign in early English law, are now exercisable by the Commission. It is not disputed that the plaintiff in this case is a public officer within the meaning of these provisions.

Neither in Part VII of the Order in Council, under the title "The Public Service", nor in any other provision of the Order, is there express statutory declaration vesting in any specified authority the power to
prescribe the salaries and conditions of service of public officers. But Part V, which is entitled "The Executive", vests in Ministers the subjects and functions which may be assigned to them by the Prime Minister.

The subject of "the public service" has been so assigned to the Minister of Finance, and I have no difficulty in assuming that the Minutes and Circulars referred to in this case, which were issued by the Secretary to the Treasury or his Deputy, were in fact issued under the authority of the Minister of Finance. Under s. 51, the Secretary to the Treasury, who is also the Permanent Secretary to the Ministry of Finance, exercises control over the departments of Government in charge of his Minister and is thus the head of the Public Service, subject only to the special powers reserved by s. 60 to the Public Service Commission. The Minister of Finance, or his Permanent Secretary, in the exercise of their powers of control and administration of the public service, have necessarily to adhere to decisions of Parliament, particularly those decisions which are incorporated in the Appropriation Acts which appropriate funds for various public purposes ; they have also to adhere to decisions of the Cabinet, which under s. 46 of the Order in Council is charged with the general direction and control of the government of the Island. There has been no suggestion during the argument of this appeal that the act of the plaintiff's head of department in withholding the plaintiff's increment in any way infringes or usurps powers which under the Constitution are vested in Parliament, the Cabinet, the Public Service Commission, or the Minister of Finance. The head of department acted under the provisions of a Circular issued by an authority fully competent to issue it.

I find nothing in the relevant provisions of the Constitution (which have just been examined) which can in any way be construed as altering or affecting, either expressly or by implication, the principle that the terms of a public officer's engagement to serve the Crown in Ceylon do not entitle him to institute a suit to recover earned wages or to enforce the terms of his engagement. The case of Silva v. The Attorney -General is easily distinguishable, for we are not here concerned with anything resembling the dismissal from service of a public officer by an authority not legally competent to dismiss him.

Counsel for the plaintiff argued that, although the Crown or the Executive Government in Ceylon has a power freely to alter the terms and conditions of service prescribed in the relevant minutes in force at the time of the plaintiff's promotion to the Executive Clerical Class, that power was unlawfully exercised when the Treasury Circular No. 560 was issued in December, 1961. The ground of this argument was that the Circular was issued for the purpose of the implementation of the Official Language Act, No. 33 of 1956. Referring to the terms of the Circular itself, and to those of a Cabinet memorandum containing directions as to the implementation of that Act, Counsel submitted that the Treasury Circular had to be issued under the compulsion of the Act and relying upon certain decisions in the United States, he further submitted that anything done under the compulsion of an invalid statute is itself invalid, despite the fact that what is done may be valid if done in the exercise of some ordinary contractual right or other power.
(To be continued)



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் பலஸ்தீன மக்களுக்கு நாங்கள் மிக மிக நீண்ட காலமாக எங்களுடைய ஆதரவை தொடர்ந்து கொடுத்து வந்திருக்கின்றோம்

## பலஸ்தீனத்தின் விடுதலை சம்பந்தமாக த. சித்தார்த்தன் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை



நன்றி தலைவர் அவர்களே!

நண்பர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் அவர்களால் கொண்டுரப்பட்டிருக்கின்ற இந்த தீர்மானம் ஒரு மிகவும் முக்கியத்துவமான ஒரு தீர்மானமாகும்.

நான் நினைக்கின்றேன் இலங்கைப் பாராளுமன்றத்தில் இவ்வளவு தூரம் ஏறக்குறைய ஐந்து மணித்தியாலங்களுக்கும் மேலாக விவாதிக்கப்படுகின்ற ஒரு பிரேரணை.

ஓத்திவைப்புப் பிரேரணையாக இருந்தாலும் கூட அதிலே பாலஸ்தீன மண்ணில் மேற்கொள்ளப்படுகின்ற அழிவை உடனடியாக நிறுத்தவும், சுதந்திர பலஸ்தீன அரசாங்கத்தை வழங்க ஐக்கிய நாடுகள் சபை எடுத்த தீர்மானங்களை அது தொடர்பான உலகளாவிய கருத்துக்களை நடைமுறைப்படுத்த வெற்று வார்த்தைகளுக்குப் பதிலாக நடைமுறைச் செயற்திட்டத்தின் அவசியம் பற்றி சபை இந்த ஒத்திவைப்பு வேளையிலே பிரேரிக்கின்றது என்று அவர் கூறியிருந்தார்.

அதை இந்த சபையின் இரு பக்கங்களிலும் இருக்கக்கூடியவர்கள் லேறு எந்த ஒரு விடயத்திலும் ஒன்றாக கருத்துச் சொல்ல முடியாதவர்கள் சொல்லாதவர்கள் அனைவருமே இந்த விசயத்திலே மிகத் தெளிவாக இந்த பிரேரணையை ஆதரிக்கின்றார்கள்.

எங்களை, தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் பலஸ்தீன மக்களுக்கு நாங்கள் மிக மிக நீண்ட காலமாக எங்களுடைய ஆதரவை தொடர்ந்து கொடுத்து வந்திருக்கின்றோம். எங்களுடைய கட்சிகளாக இருக்கலாம் இயக்கங்களாக இருக்கலாம் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வந்திருக்கின்றோம். என்னைப் பொறுத்தமட்டில் இங்கு சபையிலே முன்னால் இருக்கக்கூடிய டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தமட்டில் நாங்கள் நேரடியாக பலஸ்தீன இயக்கங்களின் தோழர்களுடன் அந்த மக்களுடன் வாழ்ந்தவர்கள், இருந்தவர்கள், அங்கேயெல்லாம் போய் பழகியவர்கள். அவர்களுடைய உணர்வுகளை நன்றாக உணர்ந்தவர்கள். அறிந்தவர்கள். எவ்வளவு தூரம் தங்களுடைய ஒரு தனிநாட்டை அடைய வேண்டும் என்பதிலே அவர்களுக்கு இருக்கின்ற அந்த ஆர்வம் அக்கறை உணர்வு இவைகளை நேரடியாக பார்த்தவர்கள்.

ஆகவே, இந்த இரண்டு பக்கங்களிலும் சபையில் இருக்கக்கூடிய அங்கத்தவர்கள் ஒற்றுமையாக முழு மனதாக இந்த பிரேரணையை ஆதரித்துப் பேசுவது என்பது ஒரு மிகப்பெரிய காரியாகமாகவே நான் பார்க்கின்றேன்.

எங்களுடைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் முதன்முதலாக பலஸ்தீன இலங்கை நட்புறவு சங்கத்தை உருவாக்கியவர்கள். பலஸ்தீனருடன் மிக நெருங்கிய நட்பாக இருந்தவர்கள். அவர் அப்படி இருக்கின்ற போதெல்லாம் எங்களுக்கு ஒரு மனதுக்கு திருப்தியாக இருக்கும், ஏனென்றால் ஏறக்குறைய ஐயாயிரம் கிலோமீற்றர்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய மக்களுக்காக இவ்வளவு உணர்வாக கதைக்கின்றவர்கள் நிச்சயமாக இந்த நாட்டுக்குள்ளே இருக்கக்கூடிய தமிழ் தேசியப் பிரச்சினைக்கு ஒரு ஜனநாயமான தீர்வை நோக்கியாவது கதைப்பார் என்று பலரும் எதிர்பார்த்திருந்தார்கள். அது நடக்கவில்லை.

அவர் மாத்திரமல்ல இந்த சபையிலே நாங்கள் பார்க்கின்றோம். பலஸ்தீனர்களுக்காக கதைக்கின்றார்கள். நல்லது. வரவேற்கின்றோம். அது கதைக்கப்பட வேண்டிய விசயம் என்பதையும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் தமிழ் மக்களுடைய நியாயமான பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதிலே அவர்களுக்கு அக்கறையில்லை. ஏன் நான் இதைக் கூறுகின்றேன் என்றால், நீங்கள் உங்கள் நாட்டிலே இருக்கக்கூடிய இன்னொரு இனத்தை அதாவது தமிழ் பேசுகின்ற மக்களை தமிழ் மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக ஒடுக்குவது மாத்திரமல்ல அவர்களுடைய சகல உரிமைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக பறித்து இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கிக் கொண்டு நீங்கள் இன்னொரு நாட்டிற்கு அந்த நாட்டில் உரிமையைக் கொடு என்று சொன்னால் அதாவது அந்த நாட்டுக்கு ஒரு தனிநாட்டைக் கொடு என்று சொன்னால் உலகத்திலே எவரும் அதைக் கேட்க மாட்டார்கள். ஏனென்றால் நீங்கள் ஒரு விசுவாசமாக அதைச் சொல்லவில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அதை விசுவாசமாக சொல்ல வேண்டும். சொல்வதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். உதாரணத்துக்கு பல விசயங்கள் உள்ளன.

இன்று பாலஸ்தீன ஜெனின் கேம்பிலே ஜூலை மாதம் 3ம் திகதி ஆரம்பித்த அழிவைப்பற்றிச் கதைக்கின்றோம். ஜூலை மாதம் 3ம் திகதி பத்துப்பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயப்பட்டிருக்கிறார்கள். 30 வீதத்திற்கும் மேல் குழந்தைகள் தாய்மாரும். அதைவிட பொருட்சேதங்களும், இப்படியாக எல்லாம் அங்கு அழிவு ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறை 48 இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின்பும் 68 இஸ்ரேலிய அரபு யுத்தத்திற்குப் பிறகும் பலஸ்தீனர்களுடைய தாயகபூமிகள் முழுக்க காசா ஸ்ரீட், வெஸ்ட்பாங், எரிசலம் ஈஸ்ட் இப்படியாக இடங்கள் எல்லாம் பாலஸ்தீன மக்கள் விரட்டியடிக்கப்பட்டு அந்தப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. பாலஸ்தீனர் எவரைக் கேட்டாலும் அவர்கள் இந்த இடத்தைச் சொல்லி சொல்லமாட்டார்கள். இஸ்ரேல் என்றும் கதைக்க மாட்டார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள் என்று சொல்வார்கள்.

அப்டியான ஒரு நிலைப்பாடு எங்களுடைய பகுதிகளிலும் நடக்கின்றது. யுத்தத்திற்குப் பிறகு பல மக்கள் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். சரித்திர ரீதியாக பார்க்கின்றபோது உலகத்திலேயே தாயக பூமியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அகதிகள் அவர்கள் அரபு நாடுகளிலும் மற்றைய இடங்களிலும் வாழுகிறார்கள். ஆகக்கூடிய அகதிகள் பலஸ்தீனியர்கள். அதேபோல தமிழர்களும் மிகப்பெரிய தொகையான ஏறக்குறைய 15 லட்சம் மக்களுக்கும் மேல் அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றார்கள். வெளிநாடுகளிலே சீவிக்கிறார்கள். அது இந்தியாவாக இருக்கலாம் ஐரோப்பாவாக இருக்கலாம், கனடாவாக இருக்கலாம் சீவிக்கின்றார்கள். ஆகவே, இந்த பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கும் எங்களுக்கும் இடையிலே ஒரு மிக நெருங்கிய ஒற்றுமைகள் இருக்கின்றது. அதுதான் காரணமோ தெரியாது எங்களுடைய இயக்கங்களை சார்ந்த தோழர்கள் இளைஞர்கள் எண்பதுகளிலேயே தொண்ணு10று வரையும் பலர் அங்கு சென்று தோழர்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள். அங்கு இருந்திருக்கின்றார்கள். அதை எந்த இயக்கம் என்று அல்ல. பீ.எல்.ஓ செயார்மன் அரபாத்தினுடையதோ அல்லது பீ.எவ்.எல்.ரி யோ இப்படியாக பல வழிகளிலே நாங்களும் அவர்களும் மிக ஒற்றுமையாகவே இருக்கின்றோம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் விசேசம் ஒன்று இருக்கின்றது. என்னவென்றால், இலங்கையிலே யுத்தம் ஆக உச்சத்திலே நடந்து கொண்டிருந்த போதும்கூட தென்னிலங்கை அரசுக்கும் வடகிழக்கிலே இருக்கக்கூடிய மக்களுக்குமிடையிலே யுத்தம் நடந்து கொண்டிருந்த போதுகூட இரண்டு பக்கமுமே ஒற்றுமையாக பலஸ்தீனர்களுடைய விடுதலைக்காக குரல் கொடுத்துக்கொண்டுதான் இருந்தோம். நான் கொழும்பிலே காலஞ்சென்ற அஸ்ரப் அவர்கள் நடாத்திய ஒரு கூட்டத்திலே பங்குபற்றியிருந்தேன். அதிலே பல பலஸ்தீனியர்கள் அரபு நாட்டவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அப்போது அநுர பண்டாரநாயக்கவும் அங்கு இருந்தார். அப்போது நான் சொன்னேன். ஏதிர்க்கட்சித் தலைவர் அநுர பண்டாரநாயக்க இருக்கிறார், நானும் இருக்கிறேன். நாங்கள் ஒற்றுமையாக உங்களை ஆதரிக்கின்றோம். ஆனால் எங்களுக்குள்ளே வேற்றுமை இருக்கின்றது. எங்களுக்குள்ளே யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. இருந்தாலும் நாங்கள் உங்களை ஆதரிப்பதிலே ஒரு ஒற்றுமை இருக்கிறது என்று.


அந்த ஒற்றுமையை மனதிற் கொண்டு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காணுவதன் மூலம்தான் இலங்கை எடுக்கக்கூடிய சரியான நடவடிக்கைகளும் நிச்சயமாக சர்வதேச ரீதியாக எற்றுக் கொள்ளப்படும், நிமிர்ந்து பார்க்கப்படும். இலங்கை வெறும் வாய்ச் சவாடல் இல்லாமல் அதை சொல்லவேண்டும். சொல்லுவதற்கு நியாயமாக அவர்களுக்கு ஒரு மோரல் ரைட் இருக்க வேண்டும். மோரல் ரைட் உடன் அதைச் சொன்னால்தான் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

நான் சொல்லவில்லை ஏதோ இவர்கள் இதை விரும்பவில்லை, அவர்கள் பாசாங்கு பண்ணுகிறார்கள் என்று அப்படி அல்ல. அவர்களுக்கும் பலஸ்தீனர்களுக்காக பேச விருப்பம் இருந்தாலும் கூட அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணாமல் இருக்கும் வரையும் பலஸ்தீனர்கள் அல்ல, வேறு எந்த ஒரு வெளிநாட்டு விடுதலைப் போராட்டத்தையும் ஆதரிக்க வெளிக்கிட்டால் அதை ஒருவருமே சரியான முறையிலே பார்க்க மாட்டார்கள்.

ஆகவே முதலில் எங்களுடைய பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வு காண்போம். அதேநேரத்தில் பலஸ்தீனர்களுடைய விடுதலைக்காக நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிலே ஆதரிக்கலாம். புல விசயதங்களைச் செய்யலாம். ஏனென்றால் சில வேளைகளில் அரசாங்கங்களுக்கு பிரச்சினை வரலாம். இஸ்ரேல் நாடு இங்கு வந்து உதவியிருக்கிறது. யுத்த காலத்திலே எங்களுக்கு பெரியளவிலே உதவினார்கள். ஆகவே நாங்கள் என்ன செய்வது. பூாலஸ்தீனிய இயக்கங்கள் கூடுதலாக இந்த தமிழ் இயக்கங்களுடன் தானே இருந்தார்கள். இப்படியான சிந்தனைககள் அவர்களுக்கு இருக்கலாம். ஏனென்றால் சிலர் இவ்வாறு சொல்லி கேட்டிருக்கின்றேன். அதை எல்லாம் மறந்து ஒரு நியாயமான தீர்வைக் கண்டு, தொடர்ந்தும் பாலஸ்தீன விடுதலைக்காக உழைப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அவரது உரை அமைந்திருந்தது.

# யாழ்ப்பாணத்தில் பக்கவாதத்துக்குரிய மருந்துகள் தட்டுப்பாடு காணப்படுகின்றமை ஒரு துர்ப்பாக்கிய நிலை என்கிறார் நரம்பியல் நிபுணர் அஜந்தா கேசவராஜ்



யாழ்ப்பாணத்தில் பக்கவாதத்துக்குரிய மருந்துகள் தட்டுப்பாடு காணப்படுகின்றமை ஒரு துர்ப்பாக்கிய நிலை என நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜ் தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பக்கவாதம் ஏற்பட்ட நோயாளிகளை நான்கரை மணித்தியாலத்திற்குள் அந்த சிகிச்சை வழங்கக்கூடிய ஒரு வைத்தியசாலைக்கு, அதாவது நரம்பியல் சிகிச்சை குழாம் உள்ள வைத்தியசாலைக்கு நேரடியாக எடுத்துச் செல்வதன் மூலம் உடனடியாக உரிய பரிசோதனை மேற்கொண்டு மூளையில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனை இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

முக்கியமான ஒரு விடயத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன், 85 வீதமான பக்க வாதம் ஏற்படுவதற்கு காரணம் மூளையில் ஏற்படுகின்ற இரத்த அடைப்பு ஆகும். எனவே இந்த பக்கவாதத்தை குணப்படுத்துவதற்குரிய மருந்துகள் தற்பொழுது உலகளாவிய ரீதியில் வழங்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையிலும் இது சம்பந்தமான மருந்து சிகிச்சை முறைகள் தற்பொழுது மக்களுக்காக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதிலே தற்பொழுது துர்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்பொழுது உள்ள பொருளாதார இன்னல் காரணமாக இதற்குரிய மருந்துகளிற்கு சற்று தட்டுப்பாட்டு நிலை காணப்படுகின்றது.

ஆகவே இந்த தட்டுப்பாடுகளை நாங்கள் கருத்தில் கொள்ளாமல் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சையினை நாங்கள் வழங்குகின்றோம்.

அதேபோல அவர்களுக்குரிய ஏனைய மருந்து பொருட்களும் இங்கே சேமிப்பில் வைத்திருக்கின்றோம். எனினும் தற்போது இந்த பக்கவாதத்துக்குரிய மருந்து தட்டுப்பாடானது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் ஆழியவளைக்கு விஜயம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் இன்றையதினம் ஆழியவளைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் அமைந்துள்ள ளுமு மாதிரி பண்ணையின் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பில் பார்வையிட்டார்.

அக்கிராமத்தை சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கி, சர்வதேச தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டு வரும் குறித்த மாதிரி பண்ணையை அவர் பார்வையிட்டார்.

இதன்போது, குறித்த பண்ணை நிர்வாகி மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மாத்தறையை சேர்ந்தவரது சடலம் வடமராட்சி கடலில் மீட்பு




யாழ்ப்பாணம், வடமராட்சி - பருத்தித்துறை துறைமுக கடற்பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டிருந்த ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தவர் மாத்தறையை சேர்ந்தவர் என அவரது குடும்பத்தினரால் 19ம் திகதி புதன்கிழமை அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுக இறங்கு தளத்தையொட்டியதாக ஆண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கரையொதுங்கிய நிலையில் இது தொடர்பில் தகவல் கிடைத்ததை அடுத்து பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கிரிசாந் பொன்னுத்துரை சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டு மேல் நடவடிக்கைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்துது.

சம்பவம் தொடர்பில் பருத்திதுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை (19) காலை உறவினர்கள் வருகைதந்து குறித்த சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டிருந்தவர் மாத்தறையைச் சேர்ந்த சுஜீவ அபயவர்த்தன விக்கிரமசிங்க (வயது-55) என்பவர் என அடையாளம் காட்டினர்.

குறித்த மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.




# இணுவில் பகுதியில் போதை ஊசி ஏற்றிய இளைஞன் சடலமாக மீட்பு

இணுவில் பகுதியில் உள்ள விடுதியில் போதை ஊசி ஏற்றிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான விடுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு பழக்கமான குறித்த இளைஞன் புதன் இரவு விடுதிக்கு வந்துள்ளார்.

எனினும் பின்னர் அவரை காணாத நிலையில், அவரை தேடிச் சென்றபோது விடுதியின் ஒரு பக்கத்தில் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அவரின் அருகில் ஊசி மூலம் போதை ஏற்றியதற்கான அடையாளங்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாண கல்லூரியில் திறந்து வைக்கப்பட்ட சூரிய மின் பிறப்பாக்கி

யாழ்ப்பாண கல்லூரியின் 1986ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர மாணவர்களின் பல மில்லியன் ரூபா நிதியியல், யாழ்ப்பாண கல்லூரியில் அமைக்கப்பெற்ற சூரிய மின் பிறப்பாக்கி இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

புவி வெப்பமுறுதல், நாட்டில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மின்சார பிரச்சினைகள் என்பவற்றுக்கு தீர்வு வழங்கும் முகமாக இந்த மின் பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.



அத்துடன் பாடசாலையின் பழைய மாணவர் ஒருவர் இசையமைத்த பாடல் இறுவட்டும் வெளிடப்பட்டது.

இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன், கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சிக்கூடத்தை பார்வையிட்ட கனேடிய தூதுவர் எரிக் வோல்ஸ்




யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஸ் புதன்கிழமையன்று யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சிக்கூடத்தை பார்வையிட்டார்.



மேலும் பனை அபிவிருத்தி சபையினுடைய எதிர்கால செயற்பாடுகள், புதிய பனைசார் உற்பத்திப் பொருட்கள் கண்டுபிடிப்புக்கான நிதிஉதவிகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இதன்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவர், உதவிப் பணிப்பாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேற்படி தனது விஜயத்தின்போது கனடியத் தூதுவர் பனை மரத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் பயனுள்ள பல தயாரிப்புக்களைப் பார்த்து வியப்புடன் மேலும் கேட்டறிந்து கொண்டார். கனடிய அரசாங்கத்தின் பல உதவித் திட்டங்களினால் இலங்கையில் சிறுகைத் தொழில் செய்பவர்கள் பலர் பயனடைந்துள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# வடக்கில் பனைமர விருத்திக்கு பாதிப்பாக அமையும் சீமைக்க ருவேலமரங்களை அழிப்பதற்கு நடவடிக்கை!

வடக்கில் பனைமர விருத்திக்கு பாதிப்பாக அமையும் சீமைக்கருவேலமரங்களை அழிப்பதற்கு அவற்றின் அடர்த்தி மற்றும் பரப்பளவு என்பன குறித்த தரவுகள் சேகரிக்கப் படுகின்றன என ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

சீமைக்கருவேலமரங்கள் பனைமரங்களுக்குப் பாதிப்பாக அமைகின்றன . அவற்றை அழித்து பனை வளத்தை பெருக்குவதற்கு ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தற்போது சீமைக்கருவேலமரங்கள் குறித்த தரவுகள் திரடப்படுகின்றன.

பனைமரங்கள் தனியார் காணிகளில் உள்ளன. பெரும்பாலான காணி உரிமையா ளர்கள் வெளிநாடுகளில் வசிப்பதால் குறித்த நடவடிக்கைளை மேற்கொள்வ தில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. வெகுவிரைவில் இதற்கான அனைத்துப் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாணத்திலிருந்து மேலும் ஒரு தொகுதியினர் தமிழ்நாட்டில் தஞ்சம்

**- எமது யாழ்ப்பாணம் செய்தியாளர்**



இலங்கையில் தொடரும் அரசியல்-பொருளாதார-சமூக நெருக்கடிகள் காரணமாக தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு சென்று தஞ்சம் அடைவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அவ்வகையில்,யாழ்ப்பாணத்தில் இருந்து சனிக்கிழமை (14) அதிகாலை எட்டுப்பேர் அகதிக-ளாக சென்று தமிழ்நாட்டின் தனுஷ்கோடியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

உள்நாட்டில் வேலை வாய்ப்புகுள் குன்றிய நிலையிலும், சுயமாக தமது காணிகளில் தொழில் செய்ய இயலாத நிலையால் ஏற்பட்டுள்ள பொருளா-தார நெருக்கடி காரணமாக ஈழத்தமிழர்கள் வாழ வழியின்றி தமிழகத்தை நோக்கி பயணிக்கும் செயற்பாடு, போர் முடிந்து 14 ஆண்டுகள் ஆகியும் தொடரும் நிலையே தாயத்தில் உள்ளது என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொருளாதார ரீதியாக ஓரளவிற்கு வசதியாக உள்ளவர்கள் கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சுவிஸ், பிரான்ஸ், யேர்மனி, நோர்வே உட்பட பல மேற்குலக நாடுகளிற்கு தமது உறவினர்களின் தயவில் புலம் பெயர்ந்து செல்லும் சூழல் காணப்படுகிறது.

ஆனால், சமூக பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ளோர், இருக்கும் சொத்துக்களையும் விற்று அருகிலுள்ள அண்டை நாடான இந்தியாவிற்கு சென்றாவது பிழைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன், ஆயிரக்கணக்கான ரூபாவை படகோட்டிகளிடம் அளித்து இரவு நேரங்களில் நாட்டைவிட்டி வெளியேறி தமிழகத்தி ராமேஸ்வரம் கடற்பகுதியை சென்றடைகின்றனர்.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் ராமேஸ்வரத்தை அடுத்த தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் இலங்கையில் இருந்து படகு மூலம் சென்ற எட்டு பேர் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளதனர்.

தமிழக போலீசாருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் அங்கு சென்ற போலீசார் எட்டு ஈழத் தமிழர்களையும் மீட்டு விசாரணை ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தமிழகம் சென்ற இரு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு பேர்களில் இரு பெண்களும், இரு ஆண்களும் 4 சிறுவர்களும் விசாரணைக்கு பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட உள்ளனர்.

தமிழகம் சென்ன யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பங்கள் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் மற்றும் ஆணைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டிற்கு அவர்கள் சென்று, முகாம்களில் தங்கினாலும், அங்கும் எந்தளவிற்கு அவர்களால் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொண்டு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதில் பல கேள்விகள் உள்ளன.

தமிழகத்தின் முகாம்களில் மட்டும் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் இன்னும் அகதிகளாக உள்ளனர்.




# முல்லைத்தீவு நீதிபதியை அவமதித்த சரத் வீரசேகரவின் கருத்துக்கு சிறீதரன் எம்.பி. கடும் கண்டனம்

**- எமது யாழ் செய்தியாளர்**

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீ-திபதி சரவணராஜா அவர்கள், கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூ ர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதி நாடாளுமன்றில் உரையாற்றிய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சருமான சரத்வீரசேகர, தமிழ் நீதிபதிகளின் அதிகாரப் பரப்பைக் கேள்விக்குட்படுத்தியுள்ளமை கடும் கண்டனத்திற்குரியது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற கட்டளையை மீறி இராணுவ உதவியுடன் பௌத்த பிக்கு ஒருவர், தமிழர்களின் பாரம்பரிய பூமியான குருந்தூர்மலை பகுதியை ஆக்கிரமித்து அங்குள்ள ஆதிசிவன் ஐயநான் கோவிலுக்கு அருகில் பெரிய பௌத்த விகாரை ஒன்றை கட்டியுள்ளார். அந்த கோவிலுக்கு தமிழர்கள் சென்று தமது வழிபடுவதற்கும் பொலிசாரும், இராணுவமும் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களிற்கு முன்னர் கூட அங்கு பொங்கல் வைத்து வழிபடச் சென்ற தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

இப்படியான சூழலில் இவ்வாரம் செவ்வாய்க்கிழமை (18) நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உரையில் மேலும் கூறியுள்ளதாவதது.

“தமிழ் நீதிபதிகள் தமது அதிகார வரம்புக்குட்பட்டு நியாயமான தீர்ப்புகளை வழங்கமுடியாதென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவின் கருத்துகள் சரியானவை என்றால், இந்தநாட்டின் நீதித்துறையை முழுமையாக சிங்களமயப்படுத்தப் போகிறீர்களா?” என்று கேள்வி எழுப்பிய சிறீதரன், உரிய அதிகாரங்கள் தடுக்கப்பட்டு, தமிழ் நீதிபதிகளும், நீதிமன்றத் தீர்ப்புகளும் தொடர்ச்சியாக அவமதிக்கப்படுகின்றமை இந்த நாட்டின் அகோரமான இனவாதச் செயலாகவே தென்படுகிறது என்றும் கடுமையாகச் சாடியுள்ளார்.

நூற்றி இருபது ஆண்டுகளிற்கு முன்னரே குருந்தூர் மலைப் பகுதியில் ஆதிசிவன் கோவில் இருந்ததையும், அங்கு தமிழர்கள் விழிபாட்டில் ஈடுபட்டனர் என்பதையும் அவர் ஆதாரங்களுடன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

“கடந்த 04ம் திகதி குருந்தூர் மலைக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தலைமையிலான இனவாதக் குழுவினரும், குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த 14ம் திகதி பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட பொதுமக்கள்,குறிப்பாக பெண்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மீது பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனங்களும் தமிழர்களின் உரிமைகளை மறுப்பதும் அவமதிக்கும் செயலாகும். வழிபாட்டு உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்று. 1905ஆம் ஆண்டு குருந்தூர்மலையில் நிகழ்ந்த ஆய்வுகளிலேயே, அம்மலையில் சதுர ஆவுடையாரைக் கொண்ட சிவலிங்கமும், நந்தியும் காணப்பட்டதென மிகத்துல்லியமாக காண்பிக்கும் வரலாறுகளை அடியோடு மறுத்து, அடாத்தாக அவ்விடத்தில் விகாரை அமைத்ததோடு, தமிழர்களின் வழிபாட்டுரிமைகளைப் பறிப்பதும் இன நல்லிணக்கத்தைக் கேள்விக்குட்படுத்தி, இந்த நாட்டின் மிகமோசமான இனவாத முகத்தை தோலுரித்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது”.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்திற்கு தனது கண்டனத்தையும் அவர் நாடாளுமன்றத்தில் பதிவு செய்தார். “முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்களின் கருத்துகளை மறுதலித்து, இந்த உயரிய சபையில் சரத்வீரசேகர பதிவுசெய்த இனவாதக் கருத்துகளுக்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன் என்றும், தயவுசெய்து இந்த நாட்டின் நீதித்துறையையாவது சுயாதீனமாக இயங்கவிடுங்கள்”.

குருந்தூர்மலைக்கு சரத் வீரசேகர விஜயம் செய்த போது, அங்கு ஆய்வில் ஈடுபட்டிருந்த நீ-தவான் சரவணராஜாவிடம், சில கருத்துக்களை தான் பதிவு செய்ய வேண்டும் என்று கூறினார். ஆனால், அது ஆய்வுக் கூட்டம் அங்கு அரசியல்வாதிகள் கருத்துக்கூற முடியாது என்று முல்லைத்தீவு நீதவான் மறுத்த நிலையில், அவரிடம் அங்கு கடுமையாக முரண்பட்டார்.

பிறகு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர “இந்த நாடு ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை அந்த நீதிபதி உணர வேண்டும்” என்று இனவாத ரீதியில் கருத்தை, தமது நாடாளுமன்ற சிற்ப்புரிமையை பயன்படுத்தி தெரிவித்தார். அது கண்டனத்தை தோற்றுவித்தது. சரத வீரசேகர தமது நாடாளுமன்ற சிறப்புரிமையை தவறாகவும் முறையற்ற வகையிலும் பயன்படுத்துகிறார் என்று அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

## கடந்தவையும் கடப்பவையும் (63)

எத்தனையோ உயிர்த் தியாகங்கள்
மெத்தப் பெரும் பொருள் அழிவுகள்

களத்துக்கு போகவில்லை ஆனாலும்
கொடுத்தனர் பலர் தமதுயிரை - அன்று

புதுப்புது விமானங்கள் பல வந்து
எடுத்துச் சென்றன உயிர்களை - எங்கும்

இடிமுழக்கம் போல் உக்கிர தாக்குதல்கள்
வெடிச்சத்தம் இல்லாத பொழுதில்லை

கோட்டையை அண்டிய இடமெல்லாம் - மனித
வேட்டை யே நடந்தது ஆகாய மார்க்கமாய்.

கோட்டைக்கு உள்ளிருப்போர் உயிர்களும்
ஆட்டம் காணத் தொடங்கின

உண்டி சுருங்க மனநிலையில் - பெரு மாற்றம் வர
கொண்ட உறுதி தளர்ந்து போக இறந்தனர் படையினர்

பொருளாதாரத்தடைப் பெரு வலியை
பெருமளவில் உணர்ந்தவராயும் இறந்தனர்

நீண்ட நிலவறைகள் ஊடாக மாண்டவர்கள்
கொண்டு செல்லப் பட்டதோடு

‘உண்ணாமல் உயிர் துறந்த திலீபன்
அண்ணாவின் நினைவு நாளன்று’

‘கோட்டையைப் பிடித்தனர் பெடியள்’ என - சுதந்திர
வேட்கையெனும் நூல் அன்றைய கோட்டையின் களநிலையைச்
செய்திகளைச் சொல்ல

வெற்றி பெற்ற பெருமிதத்தில் போகவில்லை - அன்று
சுற்றியுள்ளன வெடிகளால் அச்சம் - ஆனால்

சுற்றுலாப் பயணியாக இன்றேனும் பார்க்வேனுமென
உச்சி வெய்யிலில் ஒல்லாந்தர் காலப்

பெருஞ் சுவர்கள் பிரிக்கும் அந்த
வெறும் பாதை ஊடே சூழவுள்ள ஆழமான

அகழிகளைத் தாண்டி முன்னேறிப் போக
வெகுளிபோல் இருந்த தம்பி ஒருவன்

‘அடையாள அட்டை என்றான்’ - ஏன் என்றேன்? - பார்ப்பதற்கு
விடைகொடுக்க வேண்டுமெனில் என்றான்

‘யாழ்ப்பாணத்தில் பிறந்தவள் நான்’ என்றேன்
‘கேட்பதைக் காட்டு’ என்றான்

அடுத்த கதை கதைக்க விடாது
தடுத்தார் - கூடவந்தவர்
எடுத்தும் கொடுத்தார் அந்நிய நாட்டாருக்கான

நுளைவுக் கட்டணத் தொகையை - உள்
நுளைவதா விடுவதா மனம் குடைய

வேறு வழியின்றி நுளைகின்றேன்
ஆறுதலாய் அவனிருக்கும் அலுவலகப் பகுதிக்குள் - அங்கு


கண்டவற்றை காட்டும் வரை...

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# “அதிகாரங்களைப் பகிர்வதற்கு ரணிலிற்கு அழுத்தம் கொடுங்கள்” மோடியிடம் இலங்கை தமிழரசுக் கட்சி கோரிக்கை

- நடராசா லோகதயாளன்


R Sampanthan
Member of Parliament – Trincomalee District

812, Mahagamasekera Mw
Colombo 7
+94112559787

July 17, 2023

His Excellency Shri Narendra Modi
Prime Minister of India

Your Excellency,

THE VISIT OF HE RANIL WICKREMASINGHE TO NEW DELHI

I write to you as the leader of the largest parliamentary group of the Tamil Parties in Sri Lanka

The Tamil People have consistently given us a mandate to work towards a political solution to the Tamil National Question by means of a federal arrangement in the North-East, which was recognised as the 'historical habitation' of the Tamil speaking people in the Indo-Lanka Accord that was signed on the 29th of July 1987 provided for a measure of devolution to the provinces including land and police powers.

The Government of India has actively engaged in this pursuit for the past 40 years and we are grateful for the firm commitment expressed by India to find a just and lasting solution that satisfies the legitimate aspirations of the Tamil speaking peoples to live with dignity, self-respect, peace and security. We remain committed to a political solution based on a federal structure that recognizes our legitimate aspirations. The Tamil speaking peoples have always been the majority in the North and East of Sri Lanka.

The Thirteenth Amendment to the Sri Lankan Constitution was introduced after the Indo-Lanka Accord, establishing a provincial council system that envisaged devolution of powers to the provinces. But the Amendment was introduced into a Unitary Constitution making the exercise one of decentralization instead of devolution, to which I along with my leaders, Messrs. Amirthalingam and Sivasithamparam responded by writing to the Prime Minister at that time, Shri. Rajiv Gandhi. We pointed out several flaws in the proposed amendment and consequently the Government of India obtained an assurance from President J R Jayawardena that those will be rectified. It is against this background that every effort made thereafter moved in the direction of surpassing the Thirteenth Amendment towards a federal structure:

First, in 1993, the Mangala Moonesinghe Select Committee during President R. Premadasa's tenure recommended devolution based on the Indian model. It suggested that the Concurrent List be either abolished or that most of the subjects in it be transferred to the Provincial List. It further proposed an Apex Council linking the Northern and Eastern Provincial Councils.

**ச**மஷ்டிக்கான தமது அர்ப்பணிப்புத் தொடர்வதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சி, வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான தனது அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தும்படி இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தையொட்டி வடக்கு கிழக்கில் இருந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதன் தொடர்ச்சியாக தமிழரசுக் கட்சியும் தனது கடிதத்தை இந்தியத் தூதரகத்தில் ஒப்படைத்தது. அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன:

“வடக்கு-கிழக்குக்கு பகுதியில் வாழும் தமிழ் மக்களிற்கு அரசியல் தீர்வு ஒன்றுக்கு உழைக்கும்படி தமிழ் மக்கள் எமக்குத் தொடர்ந்து ஆணை வழங்கியுள்ளார்கள். அது மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தாலும் “வரலாற்றுத் தாயகம்” என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 வருடங்களாக இந்திய அரசு இந்த விடயத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்காக தமிழ் மக்களின் வேணவாவான அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கான இந்திய அரசின் அர்ப்பணிப்புக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கின்றோம்.


தமிழ் மக்களைப் பொரும்பான்மையாகக் கொண்ட வடக்கு-கிழக்கில் எமது அபிலாஷைகளை அங்கீகரிக்கக்கூடிய சமஷ்டிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டித் தீர்வுக்கான எமது அர்ப்பணிப்புத் தொடர்கின்றது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர், இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் என்று கருதப்பட்டது. ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட இந்தத் திருத்தம் அதிகாரப் பகிர்வுக்குப் பதில் அதிகாரப் பரவலாக்கத்தையே மேற்கொண்டது. எனது தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரத்துடன் நானும் இதுதொடர்பில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதியுள்ளோம்.

உத்தேச 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த தவறுகளை நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். அவை சரிசெய்யப்படும் என்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெவர்த்தனவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து உறுதிமொழிகளைப் பெற்றது. ஆனால், அதன் பின்னர், சமஷ்டிக்கான பாதைக்கென உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தம் ஒடுக்கப்படுவதை நோக்கிய நகர்வுகளே இடம்பெற்றன.

மங்களமுனசிங்க அறிக்கை, இந்தியப் பாணியிலான அதிகாரப் பகிர்வு முறையைப் பரிந்துரைத்தது. 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட ஒருங்குநிரல் அதிகாரங்களை இல்லாது செய்து அவற்றை மத்திக்கும் மாநிலத்துக்குமாகப் பிரிப்பது, பெரும்பாலானவற்றை மாகாணத்துடன் சேர்ப்பது என்று அதில் தெரிவிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான உச்ச சபை ஒன்றையும் அது பரிந்துரைத்தது. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது அத்தகைய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்தும்.

2012 ஜனவரியில் கொழும்புக்கு வருகை தந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதனை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். அமைச்சர் கிருஷ்ணாவும் அவரது இலங்கை சகாவான ஜி. எல்பீரிஸும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில், இலங்கையிள் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதில் இந்தியாவுக்கு உள்ள அர்ப்பணிப்புத் தொடர்பில் பல சமயங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு பேச்சுக்கள் ஊடாக அர்த்தமுள்ள அணுகுமுறையை எதிர்பார்க்கின்றோம் என்று இந்திய அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.


Second, the government proposals for constitutional reforms in 1995 and 1997 under President Chandrika Bandaranaike Kumaratunga, and the Constitutional Bill of 2000, all proposed extensive devolution of power, and abandoned the unitary state structure.


Third, in December 2002, talks were held between the Government of Sri Lanka and the LTTE in Oslo. At these talks, the parties agreed to explore a solution founded on the principle of internal self determination in areas of historical habitation of the Tamil-speaking peoples, based on a federal structure within a united Sri Lanka. The Sri Lankan government delegation was led by Prof. G.L. Peiris, who after reaching this agreement, said the following at a press conference:

> Responding to a proposal by the leadership of the LTTE, the parties agreed to explore a solution founded on the principle of internal self-determination in areas of historical habitation of the Tamil-speaking people, based on a federal structure within a united Sri Lanka. The parties acknowledged that the solution had to be acceptable to all communities...And the parties agreed to, on that basis, discuss matters further.

Fourth, in 2006, President Mahinda Rajapaksa appointed an All Party Representative Committee (APRC), and a committee of experts to formulate proposals for a new constitution. At its inaugural meeting, President Rajapaksa outlined their task in the following words:

> We must explore past attempts from the Bandaranaike-Chelvanayakam Pact onwards...People in their own localities must take charge of their destiny and control their politico-economic environment. Central decision-making that allocates disproportionate resources has been an issue for a considerable time. In addition, it is axiomatic that devolution also needs to address issues relating to identity as well as security and socio-economic advancement, without overreliance on the centre. In this regard, it is also important to address the question of regional minorities...There are many examples from around the world that we may study as we evolve a truly Sri Lankan constitutional framework including our immediate neighbour, India... Any solution must be seen as one that stretches to the maximum possible devolution without sacrificing the sovereignty of the country given the background to the conflict.

The multi-ethnic expert committee involved in the APRC process, in their main report, proposed an extensive power-sharing arrangement similar to the Constitution Bill of August 2000. The final APRC report meanwhile suggested important improvements to the Thirteenth Amendment including the abolition of the concurrent list.


Finally, following the conclusion of the armed conflict in 2009, the government made certain pledges to implement and build on the Thirteenth Amendment.

On 26th May 2009, President Rajapaksa issued a joint communique with the visiting UN Secretary General Ban Ki-Moon stating:

> President Rajapaksa expressed his firm resolve to proceed with the implementation of the 13th Amendment, as well as to begin a broader dialogue with all parties, including the Tamil parties in the new circumstances, to further enhance this process and to bring about lasting peace and development in Sri Lanka.

The very next day, on 27th May 2009, the UN Human Rights Council adopted a resolution in which the aforesaid commitment by President Rajapaksa was incorporated in the following words:

> Welcoming also the recent assurance given by the President of Sri Lanka that he does not regard a military solution as a final solution, as well as his commitment to a political solution with the implementation of the thirteenth amendment to bring about lasting peace and reconciliation in Sri Lanka.

In June 2010, Dr. Manmohan Singh, the former Prime Minister of India made a statement with regard to Sri Lanka. He stated:

> The Prime Minister emphasised that a meaningful devolution package, building upon the 13th Amendment, would create the necessary conditions for a lasting political settlement. The President of Sri Lanka reiterated his determination to evolve a political settlement acceptable to all communities that would act as a catalyst to create the necessary conditions in which all the people of Sri Lanka could lead their lives in an atmosphere of peace, justice and dignity, consistent with democracy, pluralism, equal opportunity and respect for human rights. Towards this end, the President expressed his resolve to continue to implement in particular the relevant provisions of the Constitution designed to strengthen national amity and reconciliation through empowerment. In this context, he shared his ideas on conducting a broader dialogue with all parties involved. The Prime Minister of India expressed India's constructive support for efforts that build peace and reconciliation among all communities in Sri Lanka.

This commitment was then repeated in May 2011 when External Affairs Minister G.L. Peiris visited New Delhi. A joint press statement with the Minister of External Affairs of India stated:

> The External Affairs Minister of Sri Lanka affirmed his government's commitment to ensuring expeditious and concrete progress in the ongoing dialogue between the government of Sri Lanka and representatives of Tamil parties. A devolution package,

அதன் பின்னர் 2015இல் தாங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், இந்தியாவின் நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவிப்பது எனது முன்னுரிமை, நான் கூட்டுறவு சம்'டியை உறுதியாக நம்புகின்றேன், அதனூடாக மாகாணங்களுக்கு மேலும் அதிகாரங்களையும் வளங்களையும் பகிர முடியும், தேசிய தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டில் அவற்றையும் பங்காளிகளாக்க முடியும் என்று நீங்கள் தெரிவித்தீர்கள்.

இருந்தாலும் இலங்கை அரசு இது தொடர்பான தனது தொடர்ச்சியான உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியதுடன் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க மறுப்பதன் மூலமாக 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவும் முயற்சிக்கிறது.

இந்த விடயம், இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு இலங்கை மதிப்பளிக்கின்றதா என்கிற சிக்கலை உருவாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் பாதுகாப்பு, அடையாளம், ஒரு தேசமாக அவர்களின் இருப்பு என்பன இந்தியாவில் இருந்து குறிப்பாகத் தென்னிந்தியாவில் இருந்து பிரிக்க முடியாதவை என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் தமிழ் மக்களின் பாதுகாப்பு ஆகிய இரட்டை நோக்கங்களுக்கான உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் 35 வருடங்களின் பின்னரும் கானல் நீராகவே இருப்பது ஒரு துன்பியலகவுள்ளது.

இந்த பின்னணியில், ஜூலை 21 இந்தியா வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், இனியும் தாமதிக்காமல் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான தனது அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தும்படி இந்தியப் பிரதமரான தாங்கள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்” என்று கூறப்பட்டுள்ளது.


இதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமது நிலைப்பாடு மற்றும் எண்ணங்களை வெளிப்படுத்தி இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளது. அந்த கடிதத்தை அக்கட்சி பொதுவெளியில் வெளியிட்டும் உள்ளது. 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் நிலையான தீர்வு கிட்டாது என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலர் செல்வராசா கஜேந்திரன் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆனால், மக்களால் “பாண்டவர் அல்லது ஐவர் கூட்டணி” என்று விமர்சிக்கப்படும் குழுவினரும் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதி அதை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்துணை தூதரிடம் கையளித்தாலும், அந்த கடிதத்தில் என்ன விடயங்கள் கூறப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. அது பொதுவெளியில் வெளியிடப்படவும் இல்லை.

அதேநேரம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், “இந்தியாவின் அதன் பிரதமரும் மலையக மக்கள் தொடர்பான விடயங்கள், பிரச்சனைகள், தேவைகள், அபிலாஷைகள் ஆகியவை தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளதால், மீண்டும் அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டிய தேவை ஏற்படவில்லை என்று கூறியுள்ளார்.

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படும் தமிழ் கட்சிகள் இந்தியா இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினாலும், ரணில் விக்ரமசிங்கவின் புது டில்லி பயணத்தின் போது, பொருளாதார மற்றும் இதர கூட்டுறவு விடயங்களே பிரதானமாக விவாதிக்கப்படவுள்ளதான இலங்கை அரச தரப்பு செய்திகள் கூறுகின்றன. இலங்கையில் இந்தியாவின் முதலீடு, கடும் நெருக்கடியில் உள்ள நாட்டிற்கு மேலும் பொருளாதார உதவிகள், தெற்காசிய பிராந்தியத்தில் பாதுகாப்பு பிரச்சனைகள், சீனாவின் ஆதிக்கம் போன்ற விடயங்களே பேச்சுவார்த்தையில் பிரதானமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்கள் தமது கடல் பிராந்தியத்தில் எல்லைமீறி நுழைந்து மீன்படிப்பதால் ஏற்படும் பிரச்சனைகள், போர்க்குற்ற விசாரணைகள், ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தில் பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு ஆகியவை குறித்து எந்த தமிழ் கட்சிகளும் தாங்கள் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.


building upon the 13th Amendment, would contribute towards creating the necessary conditions for such reconciliation.

This commitment was reiterated once again in Colombo in January 2012. After meeting President Rajapaksa, visiting Indian Minister for External Affairs, Hon. S. M. Krishna speaking at a joint press conference with Minister G. L. Peiris, stated:

> The Government of Sri Lanka has on many occasions conveyed to us its commitment to move towards a political settlement based on the full implementation of the 13th Amendment to the Sri Lankan Constitution, and building on it, so as to achieve meaningful devolution of powers. We look forward to an expeditious and constructive approach to the dialogue process.

Most notably thereafter, on 13th March 2015, Your Excellency spoke in the Sri Lankan Parliament and stated:

> Today, my top priority is to make the States in India stronger. I am a firm believer in cooperative federalism. So, we are devolving more power and more resources to the States. And we are making them formal partners in national decision-making process.

However, in total disregard of the pious promises and repeated assurances on its part, the Sri Lankan State has not only failed to fulfil its commitments, but has also attempted to abort the implementation of the Thirteenth Amendment to the Constitution by resisting brazenly the continuous demands for the devolution of land and police powers and by misappropriating powers already enjoyed by the provinces by legislative manipulations.

This has led to a crisis of confidence in regard to the willingness on the part of the Sri Lankan state in honouring its obligations under the Indo-Lanka Accord in the resolution of the National Question.

We firmly believe that the Tamil People's safety, security, identity and existence as a Nation is inseparable from the national security of India especially in its southern neighbourhood. Sadly, the twin purposes for which the Accord was signed, namely, the safety and security of the Tamil People and the security of India, remain elusive even after the lapse of 36 years.

In this background we respectfully urge Your Excellency to prevail upon the President of Sri Lanka when he visits New Delhi around the 21st of July 2023, to fulfil the commitments made to India with regard to sharing powers of governance with the Tamil People of the North East in Sri Lanka without any further delay.

Yours sincerely,

R.SAMPANTHAN
Member of Parliament
Trincomalee District

# அன்பின் தொனி - 698

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஜெபம்

ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை - Praying is a Command

தேவன் ஜெபத்தை கேட்டு பதில் கொடுக்கிறார் - God Hears and Answers Prayer

கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர். மண் ணான மனுஷன் இனிப் பலவந்தஞ்செய்யத் தொடராதபடிக்கு, தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர் களுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கேட்டருளுவீர். **- சங்கீதம் 10: 17-18**

ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள். **- சங்கீதம் 65: 2**

அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார்.
**- சங்கீதம் 99: 6**

அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார், நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்.
**- ஏசாயா 58: 9**

அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன், ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். **- யோவான் 11: 41-42**

ஜெபத்தை எப்படி ஏறெடுப்பது - How to be offered

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமா யிருக்கிறார்.
**- சங்கீதம் 145: 18**

துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார், நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார். **- நீதிமொழிகள் 15: 29**

தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.
**- பிரசங்கி 5: 2**

அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம், மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிக-ளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள், அவர்கள் தங்கள் பலனை அடை ந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தர ங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள், உங்கள் பிதாவை நோக்கி நீங் கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். **- மத்தேயு 6: 5-8**

மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.
**- மத்தேயு 21: 22**

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். **- மாற்கு 11: 24**

பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். **- யோவான் 9: 31**

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.
**- யோவான் 15: 7**

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண் டிருங்கள். **- எபேசியர் 6: 18**

**தொடரும்...**

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1057



**மேலதிக தகவல்களுக்கு:**
**திருமதி. வசந்தா நடராசன்** B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில் திருக்கரைசையம்பதி, திருகோணமலை

*"குலம் பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்*
*குற்றமே பெரிதுடையேன் கோல மாய*
*நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்*
*நல்லாரோடு இசைந்திலேன் நடுவேநின்ற*
*விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்*
*வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்*
*இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்*
*ஏன்செய்வான் தோன்றினேன் ஏழையேனே."*

சைவசமயம் திராவிடமக்களின் பழம்பெரும் சமயமாகக் காணப்படுகின்றது. "பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்" என்பது, பேராசிரியர் மறைமலை அடிகளாரின் ஆராய்ச்சி முடிவு. இன்றைய உலகிலே எத்தனையோ சமயங்கள் காணப்பட்டாலும், அவைகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவ சமயமேயாகும். ஏத்தனையோ பழம்பெரும் சமயங்கள் இந்நாளில் மறைந்தொழிந்து போய்விட்டன. அவ்வாறில்லாமல் சுண்ணாம்புக் கற்காலம் எனக் கூறப்படும் சிந்தனைக்கெட்டாத காலம் முதல் ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, இன்றளவும் நின்று நிலைபெற்று உயிர்ப்பாற்றல் மிக்க நிலையில் சைவசமயம் விளங்கி வருகின்றது. இதனை சேர் ஜோண் மார்ச்சல் போன்ற மேல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலே தோன்றிய பல மதங்களின் காலத்தையும், அம் மதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டதென்பதையும் நிச்சயித்துக் கூறமுடியும். ஆனால் சைவசமயத்தின் காலத்தையோ, அன்றி யாரால் தாபிக்கப்பட்டது என்ற வரையறையையோ கூற முடியாது. சைவசமயம் அநாதியானது. மனிதன் வாழ்வு நெறியை ஆரம்பித்தபோது, இயற்கையாக மலர்ந்த வாழ்வு நெறியாக சைவசமயத்தைக் கருதமுடியும். பிற்காலத்தில் சிந்துப் பள்ளத்தாக்கினூடாக வந்த மேலைத்தேசத்தவர்கள் இம்மதத்தை இந்து மதம் என்றும், அதனைப் பின்பற்றியோரை இந்துக்கள் என்றும் காரணப் பெயரால் அழைத்தனர். பின்னாளில் இப்பெயரே நிலைத்து, சைவசமயம் என்ற பொதுப் பெயர் மறைந்து, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோரை மட்டுமே குறிக்கும் பெயராக தற்கால வழக்கிலே போற்றப்படுகின்றது.

பிற்காலத்தில் இந்துமதத்திலே பிளவும், கருத்து வேற்றுமையும் ஏற்பட்டு, தத்தம் சமயமே முதற்சமயம் என்ற கொள்கையும் வலுப்பட்டு, ஒவ்வொரு சமயத்தவர்களும் ஒன்றோடொன்று முரண்பட்ட வேளையில், அவற்றை ஒருநிலைக்குக் கொண்டு வந்து காப்பாற்ற சில நெறிமுறைகளைக் கையாண்ட ஸ்ரீ சங்கரர், சைவம், சாக்தம், வைணவம், காணபதியம், கௌமாரம், சௌரம் என்ற பிரிவுகளைக் கொண்டதாக இந்துமதத்தை வகுத்தார். இதன்படி சைவத்தின் முழுமுதற் தெய்வமாக சிவனையும், சாக்த மதத்தின் முழுமதற் தெய்வமாக சக்தியையும், வைணவத்தின் முழுமுதற் தெய்வமாக திருமாலையும், காணாபதியம் என்ற மதத்தின் முழுமுதற் தெய்வமாக கணபதியையும், கௌமாரம் என்ற மதத்தின் முழுமுதற் கடவுளாக முருகனையும், சௌரம் என்ற மதத்தின் முழுமதற் கடவுளாக சூரியனையும் வகுத்தார். இவ்வாறான அறுவகைச் சமயங்களும் ஒன்றிணைந்து இந்து சமயம் எனப் போற்றப்பட்டது. ஆயினும் சைவசமயத்தினுள் ஏனைய சமயங்கள் சங்கமமானநிலையிலேயே தற்கால வணக்கமுறை காணப்படுகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஈழத்திலே சிவனை முழுமுதற்கடவுளாகக்கொண்ட சைவசமயம் எழுச்சி பெற்றுக் காணப்பட்டுள்ளது. ஈழத்திலே வாழும் சிங்கள இனத்தவர்களுடைய வரலாறு கி.மு 543 ஆம் ஆண்டிலே கலிங்கதேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு ஈழம் வந்த விஜயனுடன் ஆரம்பமாகின்றது. அக்காலத்திலேயே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பஞ்ச ஈஸ்வரங்களான முன்னேஸ்வரம், திருக்கேசீச்சரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய பஞ்ச ஈஸ்வரங்கள் சிறப்போடு விளங்கியுள்ளன.

வழிபாட்டிலே முதன்மையான வழிபாடாக சிவ வழிபாடு வரலாற்றுக் காலம் முதல் போற்றப்பட்டுள்ளது. சிவம் என்பதற்கு மங்கலம், சுபம், நன்மை, பேரானந்தம், உண்மை, மேன்மை எனப் பல பொருள்கள் உள் அடங்கிக் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டின் பெருமையை அதன் கருத்தே புரிய வைத்தள்ளது.

*" சைவம் சிவத்தடன் சம்பந்தமாகுதல்*
*சைவந் தன்னையறிந்தே சிவஞ் சாருதல் "*

எனத் திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ளது.

ஆரியர் வருகை காரணமாக, இவ்வாறான சிறப்புப் பெற்ற சைவத்துடன், பிற்காலத்தில் பல்வேறு உப தெய்வங்களும் இணைக்கப்பட்டு, சிவவழிபாடு பின்தள்ளப்பட்டது. ஆயினும் சைவசமயிகள் சிவனையே முழுமுதற் கடவுளாகவும், ஏனைய தெய்வங்களை அடுத்தநிலையிலே வைத்து எண்ணும் மரபும் பலரிடையே காணப்படுகின்றது. "உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்" என்ற தத்துவார்த்தமான உண்மையைப் புரிந்து கொண்டால், மனிதரிடையே காணப்படும் சமய பேதங்கள் அகன்றுவிடும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மன்னர்கள் பலர் ஈழத்தை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் பல சைவஆலங்களைக் கட்டிப் பேணி வளர்த்துள்ளனர். காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்பு, உள்நாட்டுப் போர்கள் என்பனவற்றின் காரணமாக, பழமையான பல கோவில்கள் அழிந்தாலும், அவற்றின் சுவடுகள், சைவமக்களாகிய தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை இனங்காட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான கோவிலாகத் திருக்கரைசையம்பதி திருமங்கலாய் கோவில் காணப்படுகின்றது.

மன்னர்கள் கட்டிய கோவில்கள் பல ஈழமெங்கும் காணப்படுகின்றன. பல மண்ணோடு மண்ணாகப் புதைந்து கிடக்கின்றன. இவ்வாறு கட்டப்பட்ட திருக்கோவில்களுள் ஒன்றாக திருக்கரைசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்த பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் கிளிவெட்டி என்ற சைவக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு திருக்கரசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது.

**- வளரும்...**

# இவ்வார ராசிபலன்

## 21-07-2023 வெள்ளி தொடக்கம் 27-07-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். பூர்வீகச் சொத்து சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். வீண் வம்பு விலகும். நிர்வாக ஆதரவு உண்டு. உறவினரால் நன்மை உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத் தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். உறவினர்களின் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அமையும். தனவரவு பெருகும். எதிரிகள் உதிரியாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரை பகவதி, அதிர்ஷ்ட எண்: *7,9,2,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R





**ரிஷபம்:** சாதனை நிகழ்த்தும் வாரம். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். மாற்றங்கள் ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய வாய்ப்பு கூடும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலைத் தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். நன்மதிப்பு வரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பெரிய திருப்பம் ஏற்படும். சகோதாரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் கூடும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உறவினரால் செலவு உண்டு. வளம் பெருகும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். கடன் பிரச்சனை தீரும். கர்மவினைகள் அகலும். உறவால் பணவிரயம் கூடும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**மிதுனம்:** சாதனைகள் படைக்கும் போதனையான வாரம். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. சுபக்காரியச் செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தவரால் உதவி உண்டு. முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழிலில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புக்கள் பெருகும். நன்மைகள் அதிகமாகும். முன் கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவுகளால் பாதகம் உண்டு. சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்வி சலுகைகள் கிட்டும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *4,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**கடகம்:** கண்ணியமான புண்ணியம் சேரும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வீடு, மனை யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் மாறும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. கடின உழைப்பு தேவைப்படும். கடன் சுமை அதிகமாகும். காரியம் கைகூடும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணம் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமி'ன் தொழில் திருப்தி தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. கலை ஈடுபாடு அதிகரிக்கும். எடுத்த காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. அடுத்த நபரால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். தொழில் போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை குறையும். உடல் உபாதை கூடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகைத் தொல்லை தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,T


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். மருத்துவச் செலவு ஏற்படும். மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. அமைதியாக இருப்பது நல்லது. பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூ கலம் உண்டாகும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பெண்களில் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை ஏற்படும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். உத்தியோக உன்னதம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *2,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மன அமைதி குறையும். பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமைகள் விலகும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. கலை ஆர்வம் பெருகும். உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மாறும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் கூடும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *9,5,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**துலாம்:** விரக்திகள் மறையும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். உஷ்ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். கட்டிடத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத் தேடி வரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். திறமைகள் அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். தன்னம்பிக்கை கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் பயணம் உண்டு. மனச்சுமை குறையும். நினைவாற்றல் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பக்குவமான பேச்சு அவசியம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். பயணம் தடைப்படும். திடீர் செலவு ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**விருச்சிகம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி மறையும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு உண்டு. மறைமுக தொல்லை நீங்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். காரியத்தடை அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. விவசாய விளைச்சல் அதிகரிக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. நலமே விளையும் அற்புதமான வாரம். நல்லவர் நட்பு உருவாகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் கூடும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப ஒற்றுமை கூடும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்புக்கள் விலகும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: *3,5,9,2*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I

***(தொடர்ச்சி _34_ பக்கம்)***

# 26ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

(நவக்கிரி, புத்தூர்)



விடுதலை வேங்கையோடு வீரமிகு போராளியாய்

விண்ணில் மறைந்த மாவீரனே!

மண்ணில் நீர் வாழ்ந்த காலம் குறைவே – ஆனாலும்

சோதனைகளையும் வேதனைகளையும்

சாதனைகளாக்கி அந்த சாதனைகளின்

சாம்ராச்சியத்தின் சரித்திரம் – நீர்

தேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவன் நீர்

வித்திட்டவன் வித்தாகி போன

வித்தைதான் என்ன!

மண்ணுக்காய் மாண்டவர் என்பதனால் நிறைவு எமக்கு

மீண்டும் வருவீர் என நாம் ஏங்குகின்றோம்

ஈரவிழிகளுடன்...

தோற்றம் 29-12-1972

மறைவு 19-07-1997

ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

(416) 888-1128, (905) 205-1070

## இவ்வார ராசிபலன்

(33 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** புதிய பொறுப்பு வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதியப்பொருள் சேரும். பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பணம் புரளும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக ஏற்றம் உண்டு. சோதனைகள் நீங்கும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். தன வரவுகள் பெருகும். பொருள் வரவு உண்டு. மனநிறைவு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். மங்களகரமான வாரம். மன அமைதி கெடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,V





**மகரம்:** ஆரோக்கியத்தில் திருப்தி தரும் வாரம். ஆபரண பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். பதவியில் உயர்வு வரும். புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிட்டும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். தெய்வப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டுக் கிட்டும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். திருப்தி ஏற்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். தீய எண்ணங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**கும்பம்:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து உயரும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செயல் திறமை வெளிப்படும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் ஏற்படும். விரக்திகள் மறையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். தொழில் போட்டிகள் மறையும். ஏற்றமதி தொழில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து தடைப்படும். சந்தோஷம் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத நன்மை கிட்டும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**மீனம்:** நவகிரஹம் அனுகிரஹம் கிடைக்கும் வாரம். நலம் விளையும் காலம். நன்மைகள் அதிகமாகும். நட்புக்கள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் கூடும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு. உள்ளம் மகிழும். முக்கிய எண்ணம் நிறைவேறும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். எதிர்ப்புக்கள் விலகும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் குறையும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். முதலீடுகளை தவிர்க்கவும். குடும்ப மனநிறைவு தரும். காதலில் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. வெகுமதிகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. தந்தை நலம் கூடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,6,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND




**Our Services**

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX HIGHER ACHIEVEMENTS Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
• Men's Hair Cut
• Beard Lineup
• Kid's Hair Cut
• Hair Oil Massage
• Baby Shave
• Hair Colouring
• Facial
BARBER SHOP
• 905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1424 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 21, 2023

# அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளர் பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் கனடா வந்துள்ளார்




அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளரும் தனது படைப்புக்களுக்காக பல விருதுகளைப் பெற்றவருமான எழுத்தாளர் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று நடைபெறுகின்றது.

நேற்று முன் தினம் கனடா வந்துள்ள அவர் நேற்று ஸ்காபுறோவில் உள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கு சென்று உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களைச் சந்தித்தார். அப்போது பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகத-ியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா தொடர்பாகவும் கலந்துரையாடப்பெற்றது. இங்கு காணப்படும் படங்கள் அப்போது எடுக்கப்பெற்றவையாகும் .மேலதிக விபரங்களுக்கு இத்துடன் உள்ள அழைப்பைப் பார்வையிடவும்.



# ஸ்காபுறோ ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தின் கொடியேற்ற வைபவம் ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி ஆரம்பமானது


Sri Varasiththi Vinaayagar Hindu Temple of Toronto

ஸ்காபுறோ ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்த்தானத்தின் வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி ஆரம்பமானது. அன்றைய தினம் கொடியேற்ற வைபவம் பக்திபூர்வமாக நடைபெற்றது. காலை தொடக்கம் மதியம் வரை விசேட அபிசேகங்கள் ஆராதனைகள் ஆகியன இடம்பெற்று மதியம் 11.30 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்றது.

எண்ணிக்கையில் ஆயிரத்தை எட்டும் அளவிற்கு பக்தர்கள் ஆலயத்தில் கூடிநின்று கொடியேற்றத் திருவிழாவின் அழகைக் கண்டு ரசித்து பக்திப் பரவத்தை அனுபவித்தனர்.

கொடியேற்றத்தை சிறப்பான முறையில் தனது சக சிவாச்சாரியப் பெருமக்கள் சகிதம் நடத்தினார் ஆலயத்தின் பிரதம குருவும் ஸ்தாபகருமான சிவ ஸ்ரீபஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள்.

இங்கே காணப்படும் படங்கள் அன்றைய கொடியேற்றத்திருவிழாவின் அழகினைக் காட்டி நிற்கின்றன.


Sri Varasiththi Vinaayagar Hindu Temple of Toronto

# RE/MAX Sri Lanka என்னும் வீடு விற்பனைத்துறை நிறுவனத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையில் RE/MAX பிராந்திய உரிமையின் பெருமைக்குரியவராக விளங்கும் ரஜீவ் கோணேஸ்




கனடாவில் ரஜீவ் கோணேஸ்வரன் என்னும் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவன முதல்வர் 22 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் சிறப்பாக இயங்கிவரும் **RE/MAX Community Inc** நிறுவனத்தின் தலைவராகவும், 10 ஆண்டுகளுக்கும் மேலாக **RE/MAX Community Inc** தரகர் மற்றும் உரிமையாளராகவும் உள்ளார். அவர் வீடு விற்பனைத் துறை மீது கொண்ட உள்ளார்ந்த பேரார்வம் மற்றும் மற்றவர்கள் தங்கள் கனவுகளை அடைய உதவுவதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு கொண்டவர், இதன் மூலம் ராஜீவ் கோணேஸ்வரன் அவர்கள் வீடு விற்பனைத் தொழில்துறையில் நம்பிக்கை நிறைந்த ஒரு வெற்றியாளராக திகழ்கின்றார். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

# முல்லைதீவில் கனடா செந்தில் குமரனின் நிவாரண திட்டம்

## இதய சிகிச்சை பிரிவினை திறந்து வைத்த இலங்கைக்கான கனடிய உயர் ஸ்தானிகர்



கனடா வாழ் செந்தில் குமரனின் நிறுவனத்தால் வழங்கப்பெற்ற நிதியால் சென்ற வருட இறுதியில் "கனடா மல்லாவி" இரத்த சுத்திகரிப்பு நிலையம், இந்த ஆண்டு தொடக்கத்தில் மாஞ்சோலை மருத்துவமனையில் "ரொறன்ரோ முல்லை" இரத்த சுத்திகரிப்பு நிலையம் ஆகிய மருத்துவ நலத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பெற்ற தொடர்ச்சியில் அண்மையில் மாஞ்சோலை மருத்துவமனைக்கு மேலுமொரு வரப்பிரசாதமாக "மார்க்கம் முல்லை" இதய நோய் சிகிச்சை பிரிவானது கனடாவின் இலங்கைக்கான தூதுவரான திரு எரிக் வால்' நினைவு கல்லினை திறந்து வைத்தார். யாழ் போதனா வைத்தியசாலையின் மூத்த இதயசிகிச்சை நிபுணரான வைத்தியர் லக்'மன் நாடாவை வெட்டி நிலையத்தினை திறந்து வைத்தார். பல மூத்த வைத்திய நிபுணர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு இந்த நெகிழ்ச்சி தரும் நிகழ்வினை சிறப்பித்தனர்.

# கனடா எழுத்தாளர் வீணைமைந்தனின் மூன்று நூல்கள் மொன்றியால் மாநகரில் வெளியிடப்படுகின்றன



கனடா வாழ் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தை நிறுவிய சிலரில் ஒருவருமாகிய வீணைமைந்தனின் மூன்று நூல்கள் எதிர்வரும் 30-07-2023 ஞாயிற்றுக் கிழமையன்று மொன்றியால் மாநகரில் வெளியிடப்படுகின்றன.

9400 **LAJEUNESSE, MONTREAL, H2N 1S4.** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் பல எழுத்தாள நண்பர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். வீணைமைந்தனின் நூல்களான 'மண்ணும் மனசும்' மறக்கத் தெரியாத மனசு' மற்றும் 'தமிழ்ச் சினிமாவில் மகாகவி பாரதியின் பாடல்கள்' ஆகிய 3 நூல்களே அன்று வெளியிடப்படவுள்ளன.

அனைவரும் அன்போடு அழைக்கப்பெறுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 438 779 9697 அல்லது 514 616 5595